வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 வைகாசித் திங்கள் 31-ம் நாள் (13—6—1965) ஞாயிற்றுக்கிழமை ஸபர் 12 இதழ் 3

## வடக்குக், கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஆட்சி மொழியாவதை

# சுதந்திரக் கட்சி எதிர்க்கும்?

## நாடெங்கும் கிளர்ச்சி நடத்தப்படுமாம்

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்கவும் ஏனைய மாகாணங்களில் உள்ள தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொள்ளவுமான ஏற்பாடுகளடங்கிய மொழி மசோதா விரைவில் பாராளுமன்றத்துக்கு வரவிருப்பதாகத் தெரிகிறது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஆட்சி மொழியாவதை எதிர்த்து நாடெங்கும் மாபெரும் கிளர்ச்சியை நடாத்த சுதந்திரக் கட்சிக்குள் ஒரு பலமான குழு ஆயத்தங்கள் செய்து வருவதாகக் கூறப்படுகிறது. இத்தகைய ஓர் இயக்கத்தை நடத்தப் போவதாகவும் வட-கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஆட்சி மொழியாவதைச் சுதந்திரக் கட்சி எ ர்க்கிறதாகவும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த வார இறுதியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் கூறினரென அறியப்படுகிறது.

தமிழரசுக் கட்சியும் யு. என். பியும் செய்துள்ள ஏற்பாட்டிற்கிணங்க வடக்குக் கிழக்கு மாகணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்கவும், ஏனைய மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமிழில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவுமான வசதிகள் செய்யப்படலாமென அறியப்படுகிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாவது ஏறத்தாழ தமிழரசுக் கட்சியினர் கோரும் சமஷ்டிக் கோரிக்கைக்கு வழிவகுத்துவிடுமென சுதந்திரக் கட்சி அபிப்பிராயப்படுகிறதாம். இதற்கான மொழி மசோதா பாராளுமன்றத்துக்கு வரும்போது, இச்சரத்தினை எதிர்த்து நாட்டில் ஒரு பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்த சுதந்திரக் கட்சியில் ஒரு பலம் பொருந்திய குழு ஆயத்தங்களைச் செய்து வருவதாக அறியக்கிடக்கிறது.

சுதந்திரக் கட்சியின் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே இக்கிளர்ச்சியை முன்னின்று நடத்துவார் எனவும் கூறப்படுகிறது.

இதே வேளையில், இம்மசோதாவை ஆதரிக்கும் குழு ஒன்றும் சுதந்திரக் கட்சிக்குள் இருப்பதாகத் தெரிய வருகிறது. சிறுபான்மையோர் ஆதரவைப் பெற கட்சிமுயற்சி செய்யவேண்டுமென இக்கட்சிக்குழு கூறிவருகிறதாம். ஆகவே கிளர்ச்சி நடைபெறும் வேளையிலேயே கட்சிக்குள் பிளவும் ஏற்படலாம் என்றும் நம்ப இடமிருக்கிறது.

## கூட்டரசாங்க நேயர்களின் 'வகுப்புவாதத்' தடுமாற்றம்!

சுதந்திரக் கட்சியின் வகுப்புவாதக் கொள்கையைக் கண்டிக்கும் ஒரு குழு கட்சிக்குள் வளர்ந்து வருகிறது என்று தெரிகிறது. இதே வேளையில் சம அந்தஸ்துக்குப் பாடுபடுவதாகக் கூறப்பட்ட சமசமாசக் கட்சி வகுப்புவாத அடிப்படையில் தனது அடிப்படைக் கொள்கைகளை மாற்றி அமைக்க முயற்சி எடுப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. சமசமாசக் கட்சிக்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருந்த ஆதரவு குறைவதும், பல பிரமுகர்கள் கட்சியை விட்டு வெளியேறுவதும் தெரிந்ததே!

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இன்று நிலவி வரும் வகுப்பு வாதக் கொள்கைகளை முறியடிக்க ஒரு குழுவினர் முயன்று வருவதாக நம்பகமான செய்தி கிடைத்துள்ளது. இக் குழுவினருக்குக் கணிசமான ஆதரவு இருப்பதாகவும், கட்சித் தலைமைப் பீடம் இக் குழுவின் கோரிக்கைக்குச் செவிசாய்க்காதிருப்பின் சுதந்திரக் கட்சிக்குள் பாரிய பிளவு ஏற்படும் என்றும் கூறப்படுகிறது.

தேசிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், வகுப்புவாதப் பூசல்களை சுதந்திரக் கட்சியும், சமசமாஜக் கட்சியும் இணைந்து கிளப்பி வருவதாக செய்திகள் பரவலாயின. தமிழ் பேசும் மக்களையும், தமிழரசுக் கட்சியையும் மிகக் கேவலமான முறையில் இவ்விரு கட்சிகளும் தாக்குவதாக புகார்களும் பரவி வந்தன. இதைத் தொடர்ந்தே சமசமாசக் கட்சியிலுள்ள தமிழ் பேசும் அங்கத்தவர்கள் பலர் வெளியேறத் தலைப்பட்டனர். 'சிங்கள மக்களின் வகுப்பு வாதம் தொடருமானல், தமிழ் மக்கள் தனித்து வாழ்வதே சிறந்தது' என்ற அடிப்படையிலும், சமஷ்டி முறைக்கே ஆதரவு அளிக்கும் வகையிலும் சில தமிழ் சமசமாசிகள் அறிக்கைவிடவும் தலைப்பட்டனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்த வரையில் அக் கட்சியிலுள்ள சிறுபான்மை உறுப்பினர்களின் தொகையோ வெகு சொற்பம். அப்படியிருந்தும் சுதந்திரக் கட்சியின் வகுப்புவாதப் போக்கினைக் கண்டிக்கும் ஒரு குழு உதயமாகியுள்ளமை அரசியல் வட்டாரங்

(9-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள ஊழியர்களே வேண்டும்

### தமிழ் காங்கிரஸ் பிரமுகர் கடிதம்

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கை நிறுவுவதற்கு செயற்பட்ட ஐவர் கொண்ட குழு மீது அதிகப்படியான செலவு தொகை அறவிடப்பட வேண்டுமென்று அரசாங்க கணக்குப் பரிசோதனைத் திணைக்களம் அறிவித்துள்ளதாம். இதற்குப் பதில் அனுப்பியுள்ள முன்னாள் மாநகரசபை முதல்வர் ஒருவர் கணக்குப் பரிசோதனைத் திணைக்களத்திலிருந்து அனுப்பப்பட்ட ஊழியர்கள் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் என்றும் மீண்டும் கணக்குகளைப் பரிசோதனை செய்ய சிங்கள ஊழியர்களை அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுள்ளாராம்.

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கைக் கட்டி முடிப்பதற்கு ஐந்து மாநகரசபை உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே. திறந்த வெளியரங்கைக் கட்டி முடித்தது சம்பந்தமாக இக்குழுவினர் சமர்பித்த செலவு அறிக்கையை அரசாங்க கணக்குப் பரிசோதனைக்குழு ஆராய்ந்ததாகவும், அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் மேலதிகச் செலவு ஏற்பட்டிருப்பதாகவும், அத்தொகையைச் செலுத்தும்படி அக் குழுவினருக்கு அறிவித்திருந்ததாகவும் தெரிகிறது.

அரசாங்க பரிசோதனைக் குழு மேலதிகச் செலவு தொகையைச் செலுத்தும் வண்ணம் எழுதிய கடிதத்திற்கு அக் குழுவைச் சேர்ந்த ஒருவர் பதில் எழுதியுள்ளாராம்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில் திறந்த வெளியரங்கு சம்பந்தப்பட்ட கணக்குகளைப் பரிசோதிக்க அரசாங்க கணக்குப் பரிசோதனைத் திணைக்களத்திலிருந்து அனுப்பப்பட்டவர்கள் அனைவரும் தமிழர்கள் என்றும், அவர்கள் தமிழரசுக் கட்சி அனுதாபிகள் என்றும் குறிப்பிட்டுள்ளாராம்.

மேலும் அக்கடிதத்தில், கணக்குப் பரிசோதனை செய்யவந்தவர்கள், தமிழரசுக் கட்சிக்கு விரோதமானவர்கள் குழுவில் அங்கத்துவம் வகிப்பதை மனதில் கொண்டே இத்தகைய அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்கள். ஆகவே இக் கணக்குகளை மீண்டும் பரிசோதிக்க சிங்கள ஊழியர்களை அனுப்பிவைக்கவும் என்று கேட்டுள்ளாராம்.

## வாக்காளர் பட்டியல்

பாராளுமன்ற தேர்தற் தொகுதி வாக்காளர் பட்டியல்களைத் திருத்தியமைக்கும் வேலையை தேர்தற் திணைக்களம் இம் மாதம் முதல் ஆரம்பித்துள்ளது. திருத்தியமைக்கப்பட்டுள்ள தேர்தற் சட்டத்தின் கீழ் வாக்காளர்பட்டியல் திருத்தியமைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இம்முயற்சிக்குப் பொது மக்களின் பூரண ஆதரவைத் தேர்தற் திணைக்களம் வேண்டியுள்ளது. வாக்காளர் பெயர்களைப் பதிவு செய்வதற்குத் தேர்தற் திணைக்கள ஊழியர்கள் நாடு பூராவும் வீடு வீடாகச் செல்லவிருக்கிருர்கள். கிராமப் பகுதிகளில் கிராம சேவகர்கள் பெரும்பாலும் இப்பொறுப்பை ஏற்றுள்ளார்கள்.

அரசியற்கட்சிகளுக்குதேர்தற் திணைக்கள ஆணையாளர் அனுப்பியுள்ள ஒரு வேண்டுகோளில் கட்சிக் கிளைகள் மூலம் இம்முயற்சிக்குப் போதிய ஆதரவு கொடுக்கும் வண்ணம் கேட்டுள்ளார்.

தமிழ்பேசும் வாக்காளர்கள் தங்கள் பெயர்கள் தவறாது பதிவு செய்யப்படுகிறதா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

(9-ம் பக்கம் பார்க்க)

இக்கடிதத்தை எழுதியவர் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் என்றும் பொன்னம்பலம் கட்சியைச் சேர்ந்தவர் என்றும் அறியப்படுகிறது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 21. முருகன் சன்னதியின் முன்....

புத்த விஹாரத்தை அடுத்து முருகப் பெருமானுக்கும் ஒரு சிறு ஆலயம் எடுக்கப்பட்டிருந்தது. பூக்கடையிலிருந்து கொஞ்சம் அலரி மலர்களையும், தாமரை மலர்களையும் பெற்றுக் கொண்டு தாமரகுமாரியும், இலட்சுமியும் அந்த முருகன் ஆலயத்தை நோக்கி நடந்தார்கள். அவர்களை முன்னுக்கு விட்டு கணேசன் அவர்களின் பின்னுல் ஆழ்ந்த சிந்தனையோடு வந்து கொண்டிருந்தான். அவனுடைய அந்த ஆழமான சிந்தனையை அவன் முன்னுல் தேர்போல்சென்று கொண்டிருந்த அந்த இனிய கன்னிப் பெண்களின் தோற்றம் இடையிடையே கலைத்துக் கொண்டிருந்தது.

விஹாரக் கட்டிடத்தின் தளத்தில் அந்த இரு பெண்களின் பாதங்கள் தோய்ந்து தோய்ந்து சென்ற விதம் அவன் உள்ளத்தில் இன்பச் சிரிப்பை ஏற்படுத்தியது. ஒருத்தியின் பாதங்களைத் தாமரை மலருக்கும், மற்றவளின் பாதங்களை ரோஜா மலருக்கும் உவமித்துக் கொண்டு அவன் ஊமையாக நடந்து கொண்டிருந்தான். அவர்கள் பாதங்கள் பட்ட இடத்தில் பைத்தியம் போல் தன் பாதங்களைக் குறி தவருமல் படியவைத்துக் கொண்டே அவன் நடந்தான். விஹாரத்தில் பொருத்தியிருந்த தீப ஒளியிலும், மேலே வானத்தில் மிதந்த சந்திரன் பொழிந்த தூய ஒளியிலும் அந்த இரு பெண்களினதும் பின்புறத் தோற்றம் கணேசனின் உள்ளத்தல் கனலை மூட்டியது. இலட்சுமி இரட்டைப் பின்னல் போட்டிருந்தாள். தாமரகுமாரி பந்துபோல் கொண்டை போட்டிருந்தாள். அந்தப் பின்னலுக்கும், கொண்டைக்கும் கிழிருந்த பிடரிகளிரண்டையும் மனதால் ஒன்று மாறி ஒன்ருக வேண்டிய மட்டும் அழைந்து கொண்டு சென்ற கணேசனுக்கு, அந்தப் பின்னலும், கொண்டையும் எதையோ உபதேசித்தன. மனதுக்கு விலங்கு மாட்டும் சங்கிலியாக அந்த பின்னலும், அந்த மனத்தையும், அந்த மனத்துக்குரிய மனிதனையும் அழித்துவிடவல்ல அணுக்குண்டாக அந்தக் கொண்டையும் அவனுக்குத் தோற்றமளித்தன! பெண் என்ற ஒன்றைப் படைத்த ஆண்டவனின் இரசிகச் சுவையை மனதால் வியந்து கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்தான் கணேசன். முன்னர் ஒருதடவை தன் நண்பன் குமரனிடம் ஆண்டவனுடைய இந்த இரசனைப் பாங்கை அவன் கூறியபோது அந்த முட்டாள் 'இடி இடி' என்று சிரித்துக் கொண்டு 'போடா மக்கூ! ஆண்டவனுக்காவது; அப்படியோர் இரசனை மனப்பாங்காவது! அதெல்லாம் ஒன்றும் கிடையாது. நம்முடைய மனத்தின் போக்கைத் தான் அப்படியொரு பவவீனம் மிக்கதாக — பெண்ணுருவை நாடும் இயல்புமிக்கதாக— ஆண்டவன் படைத்து விட்டான்! இந்தச் சிருஷ்டி இரகசியத்தைப் புரிந்து கொள்ளும் திறனில்லாத காரணத்தால், பெண்கள் தங்கள் அழகையும், தோற்றத்தையும் எண்ணித் தங்களுக்குள்ளேயே பெருமைப் பட்டுக் கொள்ளுகின்றனர். ஓர் ஆணின் உளத்திலிருந்து பெண் உணர்வு எப்போ வெளியேறி விடுகின்றதோ; அந்தக் கணமே பெண் ஒரு வெறும் பொருளாக— கவர்ச்சியற்ற பிண்டமாக— மாறிவிடுகின்ருள்! துறவிக்கு வேந்தன் மட்டுமல்ல, வேல்விழி மாதரும்! துரும்புதான்!' என்று ஆர்ப்பரித்தது. இப்பொழுது கணேசனுடைய நினைவுக்கு வந்து அவனுக்குச் சிரிப்பை மூட்டியது. அன்று அப்படிச் சொன்ன அந்த முட்டாள் பயல், இன்று இதோ தன் முன்னுல் சென்று கொண்டிருக்கும் இந்த இரு பெண்களையும் பார்த்தால் எப்படிச் சொல்வானே? என்று எண்ணிப் பார்த்து வியந்து கொண்டே நடந்தான் கணேசன். குமரன்மீது இப்போ அவனுக்கு ஒரே ஆத்திரம் ஆத்திரமாகவே வந்தது. பின்னே என்ன; படித்துப் படித்து, பன்னிப் பன்னி அவனுக்குக் கடிதம் எழுதியிருந்தான் கணேசன். 'அடே முட்டாள் பயலே! நீ இங்கு வருவதானுல் வெஸாக தினத்தன்றே வந்துவிடு. உன்னையும், என்னையும் மகிழ்விக்கவல்ல பல தேனூறும் காட்சிகள் அந்த வெஸாக் வேளையில் ஏராளமாகக் கிடைக்கும். புத்த பகவான் பிறந்ததும், அவருக்கு ஞானம் பிறந்ததும், அவருடைய பூதவுடலுக்கு முடிவு பிறந்ததும் இந்த வெஸாக் தினத்தில் தான் என்ருலும், நம்மைப் போன்ருேருக்கு இன்பம் பிறப்பதற்கு ஏதுவாக உள்ளதும் இந்த வெஸாக் தினம் தான்! அந்த மலையகப் பிரதேசம் முழுக்க இப்பவே எதிர்வரும் வெஸாக் திருநாளை முன்னிட்டுக் களைகட்டத் தொடங்கிவிட்டது. சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் வந்து சேரடா சனியனே!' என்ற அவனுடைய ஆர்வமான வேண்டுகோளை, 'வீட்டில் பல பிரச்சினை; வெஸாக் விடுதலையில் அந்தப் பிரச்சினைகளை முடித்துக்கொண்டு விரைவில் அங்கு வந்து சேருகின்றேன். அங்கு நான் வருவதற்கு நீ வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கவேண்டுமா என்ன? நீ எனக்கு எழுதும் கடிதங்களைப் படிக்கப் படிக்க, இங்கிருந்து நானும் மாற்றும் எடுத்துக்கொண்டு அங்கே வந்துவிடலாம்போல இருக்கின்றதே! உனக்குச்சம்மதமானுல், இந்த வெஸாக் [illegible] தாயாரையும் கூட ஒரு தடவை பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டுப் போகலாம். பின்னர் இருவருமே உன்னுடைய இடத்துக்கு ஒன்ருகப் பயணமாகலாம். அடசைக்! நான் ஒரு பைத்தியம்! உன்னைப்போய் 'இங்கு வாடா' என்று எழுதுகின்றேனே! என் ஓலம் உன் காதுகளில் விழப்போகின்றதா என்ன? நீ வரவே வேண்டாம். அங்கேயே நின்று உன் 'தலை வெஸாக்'கை நன்கு அநுபவி. இஷ்டமிருந்தால் எனக்கும் சற்று 'மீதம்' வை!' என்று எழுதியிருப்பானே?

வழிநெடுகிலும் குமரனைத் திட்டிக்கொண்டே நடந்தான்கணேசன். திடீரென்று எங்கிருந்தோ பனிப்புகார் ஒன்று வந்து அந்தப் புத்த விஹாரப் பிரதேசத்தில் கவிந்தது. இந்த மலைப் பிரதேசத்தில் திடீர் திடீர் என்று நிகழும் கூத்து இது! பளிச்சென்று இனிய காட்சிகளை வாரி வழங்கிக்கொண்டிருக்கும் அந்த மலைப் பிரதேசத்தைத் திடீரென்று பனிப்புகார் கவிந்து மறைத்துவிடும். அப்பொழுதெல்லாம் அந்த மலைப் பிரதேசம் திடீரென்று அடிபெயர்ந்து வானமண்டலத்தில் மிதப்பது போலக் கோலம் கொள்ளும். மனிதர்களும், மலைப் பிரதேசமும் மேகமண்டலத்தில் பவனி வருவனபோல் தோற்றமளிக்கும். அந்த இனிய காலநிலை மனிதர்களுக்குத் தேவ அநுபவத்தை நல்கும். இப்பொழுது திடீரென்று அந்தப் புத்தவிஹாரப் பிரதேசத்தை மேகப்போர்வையால் போர்த்த அந்தப் பனிப்புகாரின் செயலால் கணேசனுக்கு முன்னுல் சென்றுகொண்டிருந்த தாமர குமாரியும், இலட்சுமியும், மேகமண்டலத்தில் உலவும் தேவகன்னிகையர் போன்று தோற்றம்கொண்டனர். இந்திரன சபையை அலங்கரிக்கும் திலோத்தமையும், ஊர்வசியும்போல் கணேசனின் மனச்சபையை அந்த இரு பெண்களும் அலங்கரித்தனர். அந்த இரசானுபவத்தில் கிறங்கிக்கொண்டு சென்ற கணேசனுக்கு, அவர்கள் இருவரும், முருகன் சன்னிதானத்துள் நுழைந்ததைக் கவனிக்க முடியாமல் போய்விட்டது.

முருகன் சன்னதியின் வாயில் வரை சென்ற கணேசன், எதையோ நினைத்துக் கொண்டவன்போல், ஆலயத்துள் செல்லாமல் அப்படியே வெளியிலேயேநின்று விட்டான். இதுவரை அவனுடைய முகத்தில் படாந்த குதூகலமும், இனிய உணர்வும் எங்கோ பறந்தோடி முகம் வெளிறத் தொடங்கி விட்டது! கண்களில் ஏக்கம் தோய இரண்டு கண்களையும் மேலே உயர்த்தி அப்படியே சிலையென நின்றுவிட்டான்! விவரிக்க முடியாத ஒரு பெரிய தாக்கத்தால் அவன் துடிக்கின்ருன் என்பதை அவனுடைய அப்போதையத் தோற்றம் எடுத்துக் காட்டியது.

சிலையென எத்தனைநேரம் அவன் அப்படி நின்ருனே தெரியவில்லை. மெலிவிய ஒரு பூங்கரம் அவன் தோளைப் பிடித்து மெல்ல அசைப்பதை உணர்ந்ததும், சமாதி நிலையிலிருந்த ஒரு தபசி விழிப்பதைப்போல் அவன் சுயஉணர்வுபெற்ருன். அவன் எதிரே போன்தயையும், தாபத்தையும் பிரசவிக்கக் காத்து நிற்கும் தன் நீலோத் பலக்கண்களால் அவனைப் பார்த்தபடி நின்றாள்—

வளரும்

---

"மயிலொன்றை அன்னநடை பயிலச் செய்து
மாங்குயிலின் குரலூட்டிப் பாடச் செய்து
'ஒயிலாக நடனமிடு பார்ப்போ' மென்று
ஒருபுதுமை செய்தாற்போ லொருத்தி வந்தாள்
மயிலாகிக் குயிலாகி அன்னமாகி
மனங்கவரும் மையலுக்கு மடியேயாகி
புயலாகி வருகின்ருள் காதல் மட்டில்
புதுத்தேனுய் இனிக்கின்ருள் எனக்கு மட்டும்!"

'சுபத்திரா'

---


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

**நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.**

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

**தயாரிப்பாளர்:**

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


# சிரமேற் கொள்வோம்

ப. இராசகுரு

பல்லுலகும் புகழ்ந்தேத்தும் குறளை நாளும்
பரிவுடனே ஓதுவார்க் குயர்வு சேரும்
தொல்லுலகில் தமிழரது பண்பைக் காட்டும்
தூயநெறி திருக்குறளே ஆகும் கண்டீர்
அல்லலுறும் மானிடருக் கமுதம் ஆகும்
ஆன்ருேர்கள் நுவலுதற்கே தேனும் ஆகும்
எல்லையிலாக் கடலெனவே ஆழம் காணும்
எம்மிறைவன் வள்ளுவனைப் போற்றி
வாழ்வோம்.

அன்புடைமை மானிடர்க்கு வேண்டும் என்றே
ஆதிகவி வள்ளுவனும் மொழிந்தான் கண்டீர்
இன்றெமது மக்களினம் அன்பைக் காண
இவ்வுலகில் தமிழாட்சி காண வேண்டும்
நன்றியிலா இனமென்றும் நாசம் ஆகும்
நன்மையிலாச் சொல்லாளர் வீணே ஆவர்
என்றுபல பொன் மொழிகள் பகர்ந்த செல்வர்
இணையடிகள் என்றென்றும் தலைமேற்
கொள்வோம்.

கொல்லாமை மேற்கொள்வான் உயிர்கள் போற்ற
குவலயத்தில் புகழுடனே வாழ்வான் நாளும்
கல்லதான் அறிவினிலே இழுக்கம் உண்டு
கள்ளுண்பான் வாழ்வினிலே உயர்ச்சி இல்லை
சொல்வல்லான் நாவினிலே உலகம் வாழும்
சோர்வில்லான் கையினிலே செல்வம் ஓங்கும்
நல்வழிகள் பல சொல்லி நம்மைக் காத்த
நாதனடி என்றென்றும் சிரமேற் கொள்வாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர். லெட்சுமணன்,
பலாங்கொடை

கே: திரு. பொன்னம்பலம் மலை நாட்டில் வந்து பிரசாரம் செய்தால் என்ன?

ப: செய்யலாம். மலை நாட்டு மக்களும் அவருக்குத் தகுந்த பதிலளிப்பார்கள். ஆனால் அவர்கள் முகத்தில் எப்படி விழிக்க முடியும்? நெஞ்சு ஒருபக்கம் குறுகுறுக்கிறதே!

ஃ

எஸ். சுந்தரம், அல்வாரை

கே: எங்கள் தொகுதியில் காங்கிரஸ்வாதிகளின் பத்திரிகையொன்று தேர்தலுக்கு முன் 4- பக்கங்களுடன் வெளி வந்தது. தேர்தலின் போது 2- பக்கங்களுடன் வெளி வந்தது. தேர்தல் முடிந்ததும் முற்றாக வரவில்லை. மர்மம் என்ன?

ப: அதனை 1- பக்கத்துடன் வெளியிட முடியாதது தான் காரணம்.

ஃ

"கல்வயல் இராமாத்தை", சாவகச்சேரி

கே: இன்று இலங்கையில் "சிறிமாமோ" ஆட்சி மாறி "யூ-என்-பி" ஆட்சி வந்துவிட்டது. ஆனால் எங்கள் வீட்டிலோ "சிறிமாவோ" ஆட்சிதான் அமுல் நடக்கிறது. இவர்களிடம் ஆண்கள் உரிமை பெறுவதற்கு ஒரு வழியுரைப்பீர்களா?

ப: நாட்டுக்கு சிறிமாவின் ஆட்சி அவசியமில்லாதிருக்கலாம். ஆனால் வீட்டுக்கு மிகமிக அவசியம். அந்த ஆட்சியை ஆண்கள் கைப்பற்றினால் வீட்டு நிர்வாகம் சீர்குலைந்துவிடும். அந்த உரிமை பெண்களுக்கே தவிர ஆண்களுக்குக் கிடையாது.

ஃ

க. இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி

கே: கல்யாணம் செய்யும் போது கையில் இருந்த பணம் காலி. முதற் பிள்ளை பிறந்தபோது மனைவியின் காப்பு காலி. தொடர்ந்து இரண்டாவது பிள்ளை பிறந்த போது அவளின் சங்கிலியும் காலி. மூன்றாவது பிள்ளை பிறந்த போது கட்டிய தாலியும் காலி. இனி என்ன செய்வது என்கிறார் ஒருவர். இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள் குயுக்தியாரே?

ப: இனிக் காலியாவதற்கு ஒன்றுமில்லையே! எனவே அச்சமின்றி பெற்றுத் தள்ளுங்கள் எத்தனை குழந்தைகளை வேண்டுமானாலும், என்று அவரிடம் சொல்லுங்கள்.

ஃ

ச. சபாநேசன், காரைநகர்

கே: திரு. பொன்னம்பலம் கூறிவரும் வட்டமேசை மகாநாடு பற்றி ஒரு சொல்லாவது சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம் பெறாததன் மர்மம் என்ன?

ப: தேசிய அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ளாததால் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம் பெறவில்லை.

ஃ

கே. பரமநாதன்,
அளவெட்டி

கே: காதலால் தோல்வி உற்ற, காளையரும் கன்னியரும் சாவை அணைப்பதேன்?

ப: தங்களைத் தாங்களே துன்புறுத்திக்கொள்வதன் மூலம் காதலுக்குக் குறுக்கே நின்றவர்கள் தங்களின் தவறுகளை உணரச் செய்ய வேண்டும் என்ற "சத்தியாக்கிரக" மனப்பான்மையே காரணம்.

ஃ

"சிங்கம்", திருகோணமலை

கே: யாழ். மேயர் மீதான பிரேரணை தோல்வியுற்றதும் காங்கிரஸ்காரர்கள் என்ன நினைத்திருப்பார்கள்?

ப: மலையைக் கிள்ளி எலியைப் பிடித்துவிட்டோம் என்று நினைத்துக்கொண்டது மட்டுமின்றி வாய்விட்டுச் சொல்லியும் விட்டார்களாம்.

ஃ

எஸ். ஆர். பொன்முடியன்,
திருகோணமலை

கே: காந்திஜியின் கொள்கைக்கும் விநோபாவின் கொள்கை[illegible]ம் என்ன வித்தியாசம்?

ப: காந்திஜியின் கொள்கையையே விநோபா பின்பற்றுகிறார். ஆனால் அவரது பூதான இயக்கம் முழு வெற்றியைத் தரவில்லையே!

ஃ

பு. முத்துலிங்கம், கம்பளை

கே: 1944-ம் ஆண்டு சீனக் காசு 100 இருக்கின்றது. அக்காசை மாற்றி எடுக்க முடியுமா?

ப: சீனாவைக் கைவிட்டு ஓடி பார்மோசா தீவிலே அமெரிக்கரின் தயவிலே வாழும் சியாங்கை ஷேக் செங்கோலோச்சிய காலத்தைச் சேர்ந்தவை இந்தக் காசுகள். இவை கொழும்பு நூதன பொருட் காட்சி சாலையில் காட்சிக்கு வைக்கத்தான் பயன்படும். அங்கே அனுப்பி வையுங்கள்!

ஃ

த. வாகீஸ்வரன், கட்டுவன்

கே: தமிழ் காங்கிரஸ்காரர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்புக்களில் மகாவலி வீரரை சேர்த்துக்கொள்வதில்லையே என்ன காரணம்? அவர் இப்போ என்ன செய்துகொண்டுஇருக்கிறார்?

ப: வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. அவர் தனது சொந்த வேலைகளைக் கவனிக்கச் சென்றுவிட்டாராம். மீண்டும் தேர்தல் வந்தால் வருவார். வந்த வழியைப் பார்த்து திரும்பிப்போவார். 'எம். பி. பதவி கிடைத்தால் மட்டுமே சேவை செய்வது- பதவி இல்லையெனில் சேவையும் இல்லை' என்ற கொள்கையைக் கொண்டவர்களல்லவா அவர்கள்?

ஃ

எஸ். மலையப்பன், ஹுணுகலை

கே: திரு. தொண்டமானும், திரு. அண்ணாமலையும் இப்போது பாராளுமன்றத்தின் நியமன எம். பியாக இருக்கின்றார்களே- தோட்டத் தொழிலாளருக்கு என்ன பெற்றுத்தரப்போகிறார்கள்?

ப: அவர்கள் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை எதிர்த்து மலை நாட்டிலே பேசுகிறார்கள். ஆனால் அந்த ஒப்பந்தம் அமுல் நடத்துவதைக் கொழும்பிலே ஆதரிக்கிறார்கள். ஒப்பந்த அமுல்தான் அவர்கள் பெற்றுக்கொடுக்கப்போவது. ஆயினும் இம்முறை இருவர் மலையக மக்கள் சார்பில் நியமனம் பெற்றது வரவேற்கத்தக்கதே.

ஃ

எஸ். கே. சண்முகநாதன்,
வண்ணார்பண்ணை

கே: யாழ். மேயருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரக் கையொப்ப மிட்ட நாகராசா கடைசி நேரத்தில் விவாதத்தில் கலந்து கொள்ளாத மர்மமென்ன?

ப: இதற்கு மூன்று காரணங்கள் உண்டு. (1) தமிழரசாருக்கும்—பொன்னம்பலம் கோஷ்டிக்கு மிடையே கடுமையான மோதுதலை ஏற்படுத்த வேண்டுமென்பது இடதுசாரிகளின் நோக்கமே தவிர தமிழரசு மேயரை வீழ்த்த வேண்டுமென்பதல்ல. (2) சுயநலத்துக்காகவும் பதவி வேட்டைக்காகவும் எதேச்சாதிகாரமாக மேயரை வீழ்த்துவது சர்வாதிகாரச் செயலாகும். அத்தகைய சர்வாதிகாரச் செயல்களைச் செய்பவர்கள் பொன்னம்பலம் கோஷ்டியினரே தவிர இடதுசாரிகளல்ல— இடதுசாரிகள் ஜனநாயக வாதிகள் என்பதை எடுத்துக்காட்டுவது (3) தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறச் செய்து மேயர் பல தவறுகளைச் செய்ததாகப் பகிரங்கமாகக் கண்டிக்க வாய்ப்பை ஏற்படுத்தி அதன் மூலம் அவர் மீது மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்துவது. அதற்குத் தீர்மானத்தில் கையொப்பமிட்டால் மட்டுமே போதுமானது. (திரு. நாகராசா ஓர் இடதுசாரி)

ஜெயராணி—சபா,
மல்லாகம்

கே: வட்ட மேசை என்று ஒவ்வொரு கூட்டங்களிலும் கூறித் திரியும் த. கா. பிரதிநிதிகளுக்கு வட்ட மேசை பரிசளிக்கப் போவதாக என் சினேகிதி கூறுகிறாள். அவள் செய்கைக்கு நீர் என்ன கூறுகிறீர்?

ப: நல்ல முயற்சி. அதற்காக ஒரு விழா நடத்தி, மேசையை ஊர்வலமாக எடுத்துச் சென்று பரிசளித்தால் நன்று.

கே: குயுக்தியாரே! த. கா. வீடுகளில் வட்ட மேசை கூடுதலாக இருக்கிறது போல் தெரிகிறது?

ப: அரசியலுக்கும் வட்ட மேசையை இழுத்து வரக் காரணம் இந்த வீட்டுப் பழக்கந்தானோ!

கே: தற்காலிக ஒப்பந்தங்களினால் என்ன பயன் என்று உடுப்பிட்டி எம். பி. கேட்கிறார். நீர் இவருக்கு யாது கூறுகிறீர்?

ப: முடிவின்றி வட்டமேசையைச் சுற்றிச் சுற்றி வருபவர்களில் அவரும் ஒருவர்! உரிமைகள் கிடைப்பதுதான் இந்த ஒப்பந்தத்தின் பயன். சுய மொழியில் நம்மை நாமே ஆட்சிபுரியும் வசதியும் அதன் மூலம் கிடைக்க ஏற்பாடு உண்டு.

ஃ

எம். எம். அபூபக்கர்,
மன்னார்

கே: இலங்கையின் பொருளாதார நிலைமை தற்போது மோசமாக இருக்கிறது என்கிறார்களே, உண்மையா?

ப: தலைக்கு மேல் வெள்ளம் போகும் போது கூட உங்களுக்குத் தெரியாது போலும்! உடனடியாகப் பரிகாரம் தேடாவிட்டால் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடிய நிலைமை தோன்றியுள்ளது. அனைவரும் அடுத்த பட்ஜெட்டைத்தான் எதிர்பார்த்திருக்கின்றனர்.

கே: மனச்சான்று என்பது என்ன?

ப: உள்ளொன்று வைத்து புறம் பொன்று பேசுபவனிடம் இருக்கும் அந்த "உள்ளொன்று" தான் மனச்சான்று.

---

'பொன்னம்பலம் கட்சியைச் சேர்ந்த யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மாநகரசபை முதல்வர் மீது கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி.

—செய்தி

பிரேரணை மட்டுமல்ல, 'தனிப்பெரும் தலைவர்' சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து நடாத்திய தாகக் கூறப்பட்ட சதியையுமல்லவா ஒரு சில வழக்கறிஞர்கள் சேர்ந்து முறியடித்து விட்டார்கள்.

'முற்போக்கு வாதிகள் தோல்வியுறவில்லை'

—டாக்டர் விக்கிரமசிங்கா

தேசிய அரசாங்கமும் ஒரு முற்போக்கு அரசாங்கமே என்று நானே கூறப் போவதற்கு இது ஒரு அத்திவாரமா?

'தியாகி சுந்தசாமி தினத்தை விடுமுறை நாளாக்க' வேண்டுமென்று 'அ.வி.' சங்க யாழ்ப்பாணக் கிளை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

—செய்தி

நோக்கம் பாராட்டக் கூடியது. இதை ஏன் மாஜி



சோசலிசவாதி என். எம். அமைச்சராக இருக்கும் காலத்தில் கேட்கவில்லை. அவர் உயிரைப் பறிக்க விருந்துண்டதானே சுந்தசாமி தாங்கிக் கொண்டார்.

'உள்ளூர் புடவை உற்பத்தியைப் பெருக்க அரசினர் திட்டம்'

—திருமதி குகமா.

நவநாகரீக நங்கையர்கள் ஆடை குறைப்புக்கு இடம் கொடுப்பார்களா?

'லங்கா சமசமாசக்கட்சி எங்கள் கொள்கையை ஏற்றுக்கொண்டது.'

—திருமதி பண்டா

அது அந்தக் [illegible] பொழுது நீங்கள் [illegible] கின்ற வகுப்புவாதக் கூச்சலிலும் பார்க்க 'அப்பனை' வகுப்புவாதக் கூச்சலை அவர்கள் எழுப்புகிறார்கள்.

'தமிழினத்தின் உரிமைகளைப் பெறும் வரை த.கா. தலைவர்கள் முட்டுக் கட்டை போட்டுக் குழப்பாமல் இருக்கட்டும்.'

—கா. பொ. இரத்தினம்

அது எப்படி ஐயா முடியும்? அன்று முதல் அவர்களின் ஒரே இலட்சியம் தமிழினத்தை ஆழக் குழி தோண்டி நீளப் புதைப்பது, அந்தத் தலையாய இலட்சியத்தைக் கைவிடச் சொல்லி நீங்கள் வேண்டுகோள் விடுவது நியாயமாகுமா?

இலங்கையைச் சேர்ந்த திருமதி சுயேத்தா நடராசா இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

—செய்தி

நாங்களும் இலங்கைக்குச் சிறிதும் சளைத்தவர்கள் அல்ல என்கிறார்கள் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

# மதியின் முழுமை

—பட்டுநகர் மூத்தழகு—

ஒன்றே மனதில் நினைத்திருந்தேன்-அந்த
ஒன்றே 'தமிழென' வாழ்ந்திருந்தேன்
மன்றம் அதற்குக் கட்டிரிந்தேன்-அங்கு
மங்காத 'தீபம்' ஏற்றிரிந்தேன்

ஆன்றோர் வகுத்த வழிநடந்தேன்-தினம்
ஆண்டவனை நான் தொழுதிருந்தேன்
சென்றோர் வழியைச் செப்பனிட்டேன்-அதில்
'சத்திய மூர்த்தியை'த் தோற்றுவித்தேன்

'மூத்தமிழ் வித்தகர் ஒளியினிலே'!-நான்
முக்திகள் பெறவே! அலைகின்றேன்
எத்தனை ஆண்டுகள் அழிந்தாலும்-என்
எண்ணம் 'அருள்பெறச்' செய்திடுவேன்!

'வண்ணைக் கடலின் அலையினிலே!-என்
வாழ்க்கைத் 'தோணியின்' பயணத்திலே!
அண்ணல் காந்தியே! வழியமைத்தார்-அவர்
அன்பில் தாயின் பணிகண்டேன்'

இன்னல் அலையென எழுந்திடினும்-நான்
இன்முகம் காட்டிப் பணிந்திடவே!
மின்னல் வாழ்க்கையின் அறிகுறியை-அவர்
'மதியின் முழுமையில் காட்டி நின்றார்'

# ஐக்கிய முன்னணிக் கூச்சலின் அந்தரங்கம் என்ன?

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் உண்மையை அம்பலப்படுத்துகிறது

ஐக்கிய முன்னணிக் கூச்சல் எழுப்புபவர்களின் அந்தரங்கம் அம்பலமாகி விட்டது. இக்கூச்சலின் அடிப் படைத் திட்டம் என்ன என்பதை யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தெளிவு படுத்தியுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பெயரளவில் மட்டும் இயங்கிக்கொண்டிருந்த பொன்னம்பலம்கட்சியுடன் கௌரவமான முறையில் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர்.

### கனவான் உடன்படிக்கை

இந்த கனவான் உடன் படிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர்ப் பதவி முதலில் பொன்னம்பலம் கட்சிப் பிர முகருக்குக் கொடுக்கப்பட்டது. இவர் ஏற்சனவே பல தடவைகள் பல உடன்படிக் கைகளைப் பலருடன் செய்து கொண்டு இப் பதவியை வகித்துவந்தவர் என்றாலும், தமிழரசுக்கட்சியினர் பெருந் தன்மையுடன் பொன்னம் பலம் கட்சிப் பிரமுகரை நகரமுதல்வராக்கினார்கள். இவரின் பதவி காலத்தில் தமிழரசுக்கட்சியினர் உடன் படிக்கையின் பிரகாரம் தங் களின்பூரண ஒத்துழைப்பைக் கொடுத்து வந்தார்கள்.

அவரின் பதவிகாலம் முடிந்ததும் தமிழரசுக்கட்சி யைச் சேர்ந்தவர் நகரமுதல் வரானார். தமிழரசுக்கட்சிப் பிரமுகர் நகர முதல்வரான நாளிலிருந்து பொன்னம் பலம் கட்சியினர் பரிபூரண ஒத்துழைப்பை முழுமை யாகக் கொடுக்கத் தயங்கி னார்கள். பின்னர் நகர முதல் வரின் திட்டங்களைப் பகிரங் கமாக எதிர்க்கவும் முற்பட் டார்கள். முடிவில் கனவான் உடன்படிக்கையைத் தூர வீசிவிட்டு தமிழரசுக்கட்சி யைச் சேர்ந்த முதல்வர் மீது நம்பிக்கையில்லாத் தீர் மானத்தையும் கொண்டு வந்து விட்டார்கள்.

### சிறுமைத்தனம்

பொன்னம்பலம் கட்சி யினரின் இந்த சிறுமைத் தனங்கள் அனைத்திற்கும் முக் கிய காரணம் பதவியே யாகும். எப்படியும் நகர முதல்வர் பதவியை கைப் பற்ற வேண்டுமென்ற தணியாத ஆசையினால் அவர் களின் பொது எதிரியாகக் கணிக்கப்பட்ட துரையப்பா குழுவினரைத் துணைக்கழைத் துள்ளார்கள்.

பொன்னம்பலம் கட்சி யினர் பதவிக்காக எந்தப் பிசாசையும் அணைத்துக் கொள்ளத் தயங்கமாட்டார் கள் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

பொன்னம்பலம் கட்சி யைச் சேர்ந்த மாநகரசபை உறுப்பினர்களுடன் தமிழர சுக்கட்சி மாநகரசபை உறுப் பினர்கள் உடன்படிக்கை செய்துகொண்ட காலத்தை முதலில் எண்ணிப்பார்க்க வேண்டும்.

### அன்றைய சூழ்நிலை

இன்று, பொன்னம்பலம் கட்சியின் பொதுச் செய லாளர் என்று கூறிக்கொள் ளும் திரு. சிவசிதம்பரம்; அன்று பொன்னம்பலம்கட்சி உறுப்பினராகப் பாராளு மன்றத்திற்குத் தெரிவுசெய் யப்பட்டிருந்த போதிலும், தன்னை பொன்னம்பலம் கட் சியைச் சேர்ந்தவன் என்று கூறிக்கொள்ளக்கூச்சப்பட்ட காலம் அது. இன்று, பெயர ளவில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட வர்கள் என்ற நிலையில்விளங் கும் பொன்னம்பலம்கட்சி அன்று ஒரு பாராளுமன்ற உறுப்பினரைத் தானும் சொந்தங்கொண்டாட முடி யாத நிலை.

இன்று, தலைவர் என்று கூறிக்கொள்ளும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அன்று மூக்காடு போட்டு மூலையில் குந்தியிருந்தகாலம் அது. சுருங்கக் கூறின், வழி நடாத்த யாரும் அற்ற நிலை யில் அரசியற் பாலைவனத் தின் மத்தியில் பொன்னம் பலம் கட்சியினர் பாதை தெரியாது நின்ற நேரத்தில் தமிழரசு மாநகரசபை உறுப்பினர்கள் ஒரு கன வான் உடன்படிக்கையைச் செய்து கொண்டனர்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம் பலத்தைத் தோற்கடித்து விட்டார் துரையப்பா என்ற பகைமையுணர்ச்சி அவர் குழுவின்மீது பொன்னம் பலம் கட்சியினருக்கு. சுதந்தி ரக்கட்சி ஆதரவாளனாகத் திரு. துரையப்பா அரசியல் அரங்கில்நடிப்பது தமிழரசுக் கட்சியினருக்கு வெறுப்பை ஏற்படுத்திய நிலை. எனவே இரு பகுதியினரும் பொது எதிரிக்குப் பாதகமான முறையில் கனவான் உடன் படிக்கை யொன்றை உரு வாக்குகிறார்கள்.

பெரும்பான்மையினராக மட்டுமல்ல பெரிய ஒரு இயக்கமாகத் தமிழரசுக் கட்சி இருந்த போதிலும் கனவான் உடன்படிக்கை யின் பிரகாரம் பொன்னம் பலம் கட்சியைச் சேர்ந்தவ ருக்கு பெருந்தன்மையுடன் முதலிலும் முடிவிலும் மாநகரசபை முதல்வர் பதவியைக் கொடுக்க முன் வந்தனர். இடையில் தமி ழரசுப் பிரமுகர் ஒருவர் ஒரு தடவை மட்டும் நகர சபை யின் முதல்வராக இருப்ப தற்கு ஒப்பினார்கள்.

### நடந்தது என்ன?

இத்தனை தூரம் பதவி யை ஒரு பொருட்டாக மதி யாது நடந்து கொண்டனர் தமிழரசார் ஆனால், இன்று நடந்தது என்ன?

எந்தக் கனவான் உடன் படிக்கைக்குப் பொன்னம் பலம் கட்சியினர் ஒப்பமிட் டார்களோ அவர்களே இன்று கனவான் ஒப்பந்தத் தை உடைத்தெறிந்துள் ளார்கள். கனவான் உடன் படிக்கை மீறப்பட்டதற்கு இன்றுவரை உருப்படியான காரணம் எதையும் பொன் னம்பலம் கட்சியினர் கொடுக்கவில்லை. அவர்க ளின் இன்றைய நடவடிக்கை கள் ஒன்றை மட்டும் பட்ட வர்த்தனமாக எடுத்துக் காட்டுகிறது.

மாநகர முதல்வர் என்ற பதவி எப்படியும் பொன்னம் பலம் கட்சியினரிடமே இருக்க வேண்டும். இதை அவர்களே ஓரளவுக்குப் பகி ரங்கமாகவும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். கேவ லம் பதவிக்காக ஒரு கன வான் உடன்படிக்கையைக் காற்றில் பறக்கவிட்டுள்ளார் கள் பொன்னம்பலம் கட்சி யினர்.

கனவான் உடன்படிக்கை யை மீறியது மட்டுமல்ல; இந்த உடன்படிக்கை மீறப் பட்டுள்ள இன்றைய சூழ் நிலையையும் நாம் ஆராய வேண்டும். பொன்னம்பலம் கட்சியினரும் தமிழரசுக்கட் சியினரும் ஒரு தேசிய அர சாங்கத்தில் ஒன்றுபட்டு நின்று உறுப்புரிமை வகிக்கி றார்கள். ஒரே அரசாங்கத் தில் உறுப்புரிமை வகிப்பவர் கள் தங்களுக்குள் சண்டை யிட்டுக் கொள்வது மட்டு மல்ல நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றையே கொண்டு வருவது என்றால், அது எத்தனை பாரதூரமான அரசியல் விளைவை ஏற்படுத் தும். இதனைச் சிறிதேனும் எண்ணிப்பார்க்க மறுத்து விட்டார்கள் பொன்னம்ப லம் கட்சியினர்.

### பூங்குன்றன்

சேவலம், பதவிக்காக ஒரு முன்னாள் சுதந்திரக் கட்சி ஆதரவாளருடனும், அவர் குழுவினருடனும் சேர்ந்து பொன்னம்பலம் கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர் மானத்தைக் கொண்டு வந் திருக்கிறார்கள்.

இதனால் எதிர்கட்சியினர் தேசிய அரசாங்கத்தை எள்ளி நகையாடுவதுடன் மட்டுமல்ல, பிரிவினையை ஏற்படுத்தவும் இச்சந்தர்ப் பத்தை நிச்சயம் நல்ல முறையில் பயன்படுத்தப் போகிறார்கள். இந்த நம்பிக் கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்ததன் மூலம் தேசிய அரசாங்கத்தை பல வீனப்படுத்தி விட்டனர் பொன்னம்பலம் கட்சியினர். இதை அவர்கள் மறுப்பார் களா?

### ஐக்கிய முன்னணி

மறுபுறத்தில் ஐக்கிய முன் னணி வேண்டும் என்ற கூச் சலை பொது மேடைகளில் எழுப்புவர்களும் சாட்சாத் பொன்னம்பலம் கட்சி யினரே. அதே நேரத்தில் தமிழரசுக் கட்சி மாநகர சபை முதல்வர் மீது பொது எதிரிகளுடன் சேர்ந்து நம் பிக்கையில்லாத் தீர்மானத் தைக் கொண்டு வந்தவர் களும் சாட்சாத் பொன்னம் பலம் கட்சியினரே.

தமிழரசு—பொன்னம் பலம் கட்சி ஐக்கியம் நில விய ஒரே யொரு இடமான யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஐக்கியத்தைக் குலைத்தவர்களும் சாட்சாத் பொன்னம்பலம் கட்சி யினரே.

### யார் விரோதிகள்?

இவர்கள் தான் பொது மேடைகளில் ஏறி நின்று ஐக்கிய முன்னணிக்கு தமிழ் சார் விரோதிகள் என்கிறார் கள். இவர்கள் தான் தேர் தற் காலத்தில் ஐக்கிய முன் னணிக்கான ஆலோசனைக் கூட்டம் நடாத்துபவர்கள்.

மேடைகளில் நின்று ஐக் கிய வேண்டும், ஐக்கிய முன் னணி உருவாக்க வேண்டும் என்று கூறுகின்ற பொன் னம்பலம்கட்சியினரே நடை முறையில் ஐக்கியத்தின் முதல் விரோதிகள். இதை அப்பட்டமாக எடுத்துக் காட்டுகிறது யாழ்ப்பாண மாநகர சபைச் சம்பவம்.

பொன்னம்பலம் கட்சி யினரின் பேச்சும் செயலும் தமிழ் பேசும் மக்களை முட் டாள்கள், அறிவற்றவர்கள் என்று கணிப்பது போற் தோன்றுகிறது.

### ஐ. மு. அவசியமா?

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக் கையில்லாத் தீர்மானம் ஒரு உண்மையை மிக நன்றாகத் தெளிவுபடுத்துகிறது. திரு ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவர் குழுவினரும் கூறும் ஐக்கிய முன்னணி பதவியை அடிபடையாகக் கொண் டது. அந்த ஐக்கிய முன் னணி திரு. ஜீ. ஜீ. பொன் னம்பலத்திற்கு ஒரு தலை மைப் பதவி வேண்டுமென்ப தற்காகவே பேசப்படுகிறது. தமிழினத்தின் உரிமைகளை மீட்பதற்கும் பொன்னம் பலம் குழுவினரின் ஐக்கிய முன்னணிக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை. எனவே, திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத் திற்கு ஒரு தலைமை வேண்டு மென்பதற்காகப் பேசப் படும் ஐக்கிய முன்னணி உண்மையில் அவசிய மானதா?

# தமிழ்மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாடுகள்

தமிழ் மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாடு இவ்வாண்டு கிளிநொச்சி யில் நடைபெற்றுக்கொண் டிருக்கிறது. இம்மாநாடு தமிழ் மறைக் கழகம் நடத் தும் பதின்மூன்றாவது மாநா டாகும். கிளிநொச்சியில் 11, 12, 13ம் தேதிகளி லும் பூநகரியில் 14ம் தேதி யும் துணுக்காயில் 15ம் தேதியும் இம்மாநாடு நடை பெறும்.

### பன்னிரண்டாவது மாநாடு

பன்னிரண்டாவது மா நாடு கரணவாயில் 1964ல் நடை பெற்றது. கரணவாய் இளைஞர் முன்னேற்றக் கழ கம் இம் மாநாட்டைப் பூதன்தேவனார் அரங்கில் சிறப்புற நடத்தியது. இளைப் பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார்கள். ஈழ நாட்டுத் தமிழறிஞர் பலர் இம் மாநாடு சிறக்கும் வகை யில் சொற்பொழிவாற்றி னர். கவியரங்கு கருத் தரங்கு இசையரங்கு முதலி யனவும் நடைபெற்றன.

### பதினொராவது மாநாடு

பதினோராவது மாநாடு வவுனியாவில் 1963ல் நடைபெற்றது. வவுனியா [illegible] இம் மாநாட் டைச் சிறப்புற நடத்தினர். பல ஈழத்துத் தமிழறிஞர்க ளதும், தமிழ் புலவர்களதும் கருத்தரங்கும், கவியரங்கும் மாநாட்டில் இடம் பெற் றன.

### பத்தாவது மாநாடு

1962ல் பத்தாவது மாநாடு வேலணையில் தொல் காப்பியர் அரங்கில் வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்க ஆதரவில் நடைபெற்றது. இம் மாநாட்டில், தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரி யர் திரு. சாலை, இளந்திரை யன், அவருடைய மனைவி யார் பேராசிரியை திரு வாட்டி கனகசவுந்தரி இளந்திரையன், பேராசிரி யர் திரு. ஐயன் பெருமாள் கோனார் என்போர் பங்கு கொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர். கவியரங் கும், கருத்தரங்கும், மாநாட் டின் சிறப்பை மேலும் பொ லிவுறச் செய்தது.

பேராசிரியர் திரு. அ. சின் னத்தம்பி அவர்கள் மாநாட் டைத் தொடக்கி வைத்தார் கள். திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. அவர்கள் பரிசில்கள் வழங்கினார்கள்.

### ஒன்பதாவது மாநாடு

ஒன்பதாவது மாநாட்டை நடத்துதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. எனினும் 1961ல் தமிழ் மக்கள் செய்த மாபெரும் சத்தியாக் கிரகத்தினாலும் அதனை முறி யடிப்பதற்கு அரசாங்கம் அவசர கால நிலை சட் டத்தை நடைமுறைப் படுத் தியதாலும் மாநாடு நடை பெறாமல் தடைப்பட்டது.

### எட்டாவது மாநாடு

எட்டாவதுமாநாடு 1960ல் நடை பெற்றது. மாத் தளை மாணவ மன்றத்தினர், அர்ச். தோமையார் கல்லூரி மண்டபத்தில் இம் மாநாட் டைச் சிறப்புற நடத்தினர். மாநாட்டில் பல ஈழ நாட் டுத் தமிழறிஞர்கள் உரை யாற்றிச் சிறப்பித்தனர்.

### ஏழாவது மாநாடு

ஏழாவது திருக்குறள் மாநாடு 1959ல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவமன்றத்தின் ஆதர வில் சிறப்பாக நடைபெற் றது. மாநாட்டை வட மகாண அதிபர் திரு. ட. சிறி காந்த அவர்கள் தொடக்கி வைத்தார்கள். திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் சிறப்புச் சொற்பொழி வாற்றினார். வட்டுக்கோட் டைத் தொகுதிப் பா. உறுப் பினர் திரு. அ. அமிர்தலிங் கம் அவர்கள் தமிழ் மறைத் தேர்வில் சித்தியடைந்தவர் களுக்குப் பரிசில்கள் வழங்கி னார்.

### ஆறாவது மாநாடு

ஆறாவது திருக்குறள் மா நாடு மே மாதம் 1958ல் நடத்துவதற்குச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவ மன்றத்தினரால் ஒழுங்குகள் செய்யப்பட்டு,

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோக மொழி ரத்தாகிறதாம்

## சிங்கள இடதுசாரிப் பத்திரிகையின் கூற்று

உத்தியோக மொழியான சிங்களம் படிக்காத அரசாங்க ஊழியர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதில்லையென முன்னுள் அரசாங்கம் முடிவு செய்திருந்தது. அந்த முடிவை மாற்றி, சிங்களம் தெரியாததால் பதவி உயர்ச்சி நிறுத்தப்பட்டிருந்த அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் பதவி உயர்வு வழங்க யு. என். பி.-சமஷ்டி அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று ''ஜனசத்திய'' பத்திரிகை ''உத்தியோக மொழிச் சட்டம் ரத்தாகிறது'' என்ற தலைப்பின் கீழ் 6-6-65ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது.

அச்செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:—

''தமிழரசுக் கட்சியின் வேண்டுகோளின் மீதே அரசாங்கம் இந்த முடிவைச் செய்துள்ளது. சிங்களம் தெரியாததால் பதவி உயர்வு பெறுதிருந்த அரசாங்க ஊழியர்களிற் பெரும்பாலோர் தமிழர்களாவர். அவர்களிற் சிலர் அரசகரும மொழியாகிய சிங்களத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகச் சிங்களம் படிக்காதிருந்தனர்.

'யு. என். பி.-தமிழரசு அரசாங்கம் இந்த நடவடிக்கை எடுக்கப் போவது 1956-ல் திரு. பண்டாரநாயக்கா கூறிய யோசனைக் கிணங்கவே என்று மக்கள் கண்ணில் மண்ணைத் தூவ முதலாளித்துவப் பத்திரிகைகள் தயாராகின்றன. ஆயினும் இது திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைக்கு முற்றிலும் மாறானதென விஷயம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர். இதுவரை அரசாங்கத்துக்கு உதவி புரிந்து வந்த சயஸ்த லங்கா லிபிகரு சங்கமயவும் இந் நடவடிக்கை பற்றி ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

பட்டாளம் வாபஸ்

'இதற்கிடையே வடபகுதியில் நிறுத்தப்பட்ட சிங்களப் பட்டாளத்தை வாபஸ் வாங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதுவும் தமி

(12-ம் பக்கம் பார்க்க)

## திருமதி நவரத்தினம் மறைவு



இருபது ஆண்டுகளாக எழுத்தறிவிக்கும் இறைபணியை சிரிய முறையில் மேற்கொண்டிருந்த திருமதி பராசக்தி நவரத்தினம் அவர்கள் மேதிங்கள் 29ம் நாள் சனிக்கிழமை காலை 8-45 மணியளவில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்துள்ளார்.

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நவரத்தினம் அவர்கள் காங்கேசன்துறை நடேசுவராக் கல்லூரியிலும் பின்னர் தெல்லிப்பளை மாஜெனுக் கல்லூரியிலும் ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்துள்ளார்.

பாமா (வயது 10) மஞ்சுளா (வயது 8) ஆகிய இரு பெண்களுக்குத் தாயாரான இவர் 'சுதந்திரன்' பொது முகாமையாளரும், இலங்கைச் செய்திப் பத்திரிகை நிறுவனத்தின் செயலாளரும், வழக்கறிஞருமான திரு. தி. நவரத்தினம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாராவர்.

இவரின் தகனக் கிரியை காங்கேசன்துறையிலுள்ள குடும்ப மயானத்தில் மே திங்கள் 30ம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவரது பிரிவால் துயரத்தில் மூழ்கியுள்ள குடும்பத்தினருக்குச் 'சுதந்திரன்' வாசகர்களின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## ஓராண்டு அவகாசம்

'யு. என். பி.— தமிழரசு தேன்மதியின் ஆயுள் ஒரு வருடத்துக்கு மேற்படாது என்று நிச்சயமாகக் கூறலாம்.

சமஷ்டிக்குப் பாதை செப்பனிடக் கூடியதாக அரசியற் சட்டத்தைத் திருத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு இவ்வருடக் கடைசியில் தேசிய அரசாங்கத்திடம் தமிழரசுக் கட்சி கோருமென எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய அரசு நிறுவி 6 மாதங்கள் வரை பேசாதிருந்து அதன்பின் தமது கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும் அந்தக் கோரிக்கைகளை வழங்குவதற்காக இன்னும் 6 மாதங்கள் அவகாசம் கொடுப்பதற்கும் தமிழரசுக் கட்சி தயாராகிறது.

ஓராண்டு கடந்தும் கோரிக்கைகள் வழங்கப்படா விட்டால் தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்ற கருத்து தமிழரசுச் செயற் கமிட்டியிடம் தெரிவிக்கப்பட்டுளது.'

—எத்த (8-6-65)

### சிங்கள இதழ்களில்...

## சமயப் பரீட்சை

கொழும்பு விவேகானந்த சபையாரால் நடாத்தப்படும் அகில இலங்கைச்சைவ சமய பாடப்பரீட்சையின் 1964ம் ஆண்டுக்குரிய பெறுபேறுகள் பாடசாலைகளுக்கும், சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டுவிட்டன என்றும் இப்பரீட்சையின் எழு பிரிவுகளிலும் பங்குபற்றிய 27,025 பரீட்சாதிகளுள் 12,425 பேர் சித்தியடைந்துள்ளனர் என்றும் சபையின் பரீட்சைப்பகுதிச் செயலாளர் திரு. வி. இ. செல்வத்துரை அறிவித்துள்ளார். இப்பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களின் பரிசில்களும், சான்றுப் பத்திரங்களும் விரைவில் அனுப்பிவைக்கப்படுமாம்.

1963ம் ஆண்டுப் பரீட்சையில் தோற்றிய 21,973 பரீட்சாதிகளுள் 10,479பேர் சித்தியடைநதுள்ளனர் என்றும் அவர்களின் சான்றுப் பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும், பரிசில்கள் இம்மாத முடிவிற்குள் அனுப்பிவைக்கப்படும் என்றும் மேலும் அந்த அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது.

1965ம் ஆண்டுப் பரீட்சைக்குரிய விதிகள், பாடத்திட்டங்கள் சென்ற ஆண்டு பரீட்சையில் பங்குபற்றிய பாடசாலைகளுக்கும், சங்கங்கட்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும், இவ்வாண்டுப் பரீட்சையில் பல சிறப்பு அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் தெரிகிறது. இப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் 1-7-65 தொடக்கம் 31-7-65 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

## கத்தோலிக்க குருமார் பிரச்சினை

''தற்காலிக வாசஸ்தல அனுமதிப் பத்திரத்தின் மீது இங்கு தங்கியிருக்கும் 100 கத்தோலிக்க குருமார்களைத் தொடர்ந்து இங்கே வசித்திருக்க அனுமதிப்பதென யு. என். பி.—தமிழரசு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. வண. காடினல் குரே அவர்களின் வேண்டுகோளின் மீதே அரசாங்கம் இந்த முடிவைச் செய்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இங்கு வந்துள்ள இந்த குருமார்களின் நடவடிக்கை நாட்டுக்கு நன்மை பயக்குவதாக இருக்கவில்லையாதலின் முன்னுள் அரசாங்கம் அவர்களின் டி. ஆர். பியை ரத்துச் செய்தது. எனவே இவர்கள் மே மாதம் 31-ந் திகதி இந்நாட்டிலிருந்து போக வேண்டியவர்களாவர்.''

—''எத்த'' (7-9-65)

## சுதந்திரக்கட்சி எதிர்க்கும்

'கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் குழுவின் கூட்டத்தில்மொழிப் பிரச்சினைபற்றிக் கேட்கப்பட்டஒருகேள்விக்கு திருமதிசிறிமாவோ பண்டாரநாயக்கா பதிலளிக்கையில், வட—கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாக வேண்டுமென்ற தமிழரசுக் கட்சியின் கோரிக்கையைக் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கிறது என்று கூறினர்.

மொழிப் பிரச்சினை பற்றிய தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளை எதிர்த்து ஓர் இயக்கம் நடத்தப்படுமென்றும் அவர் கூறினர்.'

—தவச(7-6-65)

## மொழி இலாகாவும் தமிழரசுக்காம்

'காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நீதி அமைச்சர் திரு. விஜேமான்ன இம்மாதம் 13ந் திகதி லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றதும் பதில் நீதி அமைச்சராகவும் திரு. திருச்செல்வம் நியமிக்கப்படுவார்.

உத்தியோக மொழி இலாகா நீதி அமைச்சின் கீழ் செயற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசியற் சட்டத்திற்கிணங்க நீதி அமைச்சராக ஒரு செனட்டரே பதவி வகிக்க வேண்டும். எனவே உதவி நீதி அமைச்சரான ஜனப் நயினு மரைக்காருக்கு பதில் நீதி அமைச்சராகப் பதவி வகிக்கும் வாய்ப்பு கிடைக்காது.'

எத்த(8-6-65)


# பணம் வேண்டுமா? அல்லது மணம் வேண்டுமா?

**எது வேண்டும்?**

உங்கள் மனம் எது வேண்டுமென்று சொல்லுகின்றதோ அதனை இன்றே செய்து கொள்ள எனக்கு எழுதுங்கள் அல்லது என்னை நேரில் சந்தியுங்கள்!

**அத்துடன்**

சீதனத்துடனே அல்லது சீதனமில்லாமலோ கல்யாணம் கட்ட, கணவன்-மனைவி தகராறு தீர, காதல் நிறைவேற, கடன் கஷ்டம் நீங்க, தொழில், வியாபாரம் ஓங்க, நிலபுலன், வருமானம் பெருக, வழக்கு பரீட்சையில் வெற்றி பெற, கண்-வாய் திருஷ்டி மற்றும் தோஷங்கள் அகல...

**தேவ அருளினாலும், மந்திர பலத்தினாலும், ஞான சக்தியினாலும் நிறைவேற்றித் தர முடியும்.**

செவ்வாய் முதல் சனி வரை நேரில் சந்திக்க வேண்டிய விலாசம்:

மகா மாந்திரிக கலாநிதி

## பி. எம். திசாநாயக்க,

103, ஸ்ரீசங்கராஜ மாவத்த,
மருதானை - கொழும்பு.

ஞாயிறும், திங்களும் இருக்கும் விலாசம்:

**அருத எண்ணெய் தொழிலகம்,**
கம்பளை. போன்: 454

குறிப்பு:- கடிதங்கள் கம்பளை விலாசத்திற்கே எழுதப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டதும் கேட்டதும்

மாயாவி

## யார் இந்த எம். பி. கள்

வட மாகாணத்தில் என்றுமில்லாத அளவிற்கு ஒரு அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் அரசியற் கட்சிக் கொடிகள் உயரப் பறக்கின்றன. கட்சிக் கொடிகளை உயரப் பறக்கவிடுவதிலும் ஒரு போட்டி. சில இடங்களில் கட்சிக் கொடிகளை இரகசியமாக அறுப்பதிலும் போட்டி யேற்பட்டிருக்கிறதாம். ஒரு சில இடங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களே தமிழரசுக் கட்சிக் கொடிகளை அறுக்க முற்பட்டிருக்கிறார்களாம்.

இதற்குக் காரணம், தமிழரசுக் கட்சியை எதிர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்த சிலருக்குக் கடந்த காலங்களில் ஒரு கொழுகொம்புதானும் கிடைக்கவில்லையாம். இப்பொழுது மூலையில் முக்காடு போட்டிருந்த தலைவர்கள் சிலர் அம்பலத்திற்கு வந்திருக்கிறார்கள். எனவே தமிழரசுக் கட்சியை எதிர்ப்பதையே நோக்கமாகக் கொண்டவர்கள் இந்த முக்காடிட்ட தலைவரின் வாலைப் பிடித்துக் கொண்டு தொங்கத் தொடங்கி விட்டார்கள்.

இதன் பிரதிபலிப்பே புளிய மரங்களையும் பனை மரங்களையும் கட்சிக் கொடிகள் ஆக்கிரமித்துள்ள கதை என்று கூறப்படுகிறது.

## ‘ஏன் இந்த பதட்டம்?’

காங்கேசன்துறைப் பட்டினசபையின் சார்பில் பொன்னம்பலம் கட்சியினருக்கு ஒரு வரவேற்புக் கொடுக்கப்படும் என்றும், இவ்வரவேற்பு வைபவத்திற்கு பட்டினசபைத் தலைவர் தலைமைதாங்குவார் என்றும் கடந்தவாரம பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் வரவேற்புக் கூட்டத்தின் போது பட்டினசபை உறுப்பினர்கள் எவரையுமே அந்தப் பக்கத்தில் பார்க்க முடியவில்லையாம். தலைமைதாங்குவதாகக் கூறப்பட்ட பட்டினசபைத் தலைவர் மாயமாய் மறைந்துவிட்டாராம். இதனால் இந்தவரவேற்பை யார் நடாத்தினார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இவ் வரவேற்புக் கூட்டத்தை யொட்டி பொன்னம்பலம் கட்சியின் ஆதரவாளர்கள் மயிலிட்டி, காங்கேசன்துறைபகுதிகளில் வீடு வீடாகச் சென்று, மாலைகள் கொடிகள்கொடுத்து, கொடிகளை வீடுகளில் கட்டும்படியும், மாலைகளை கூடுதலாக திரு. பொன்னம்பலத்திற்குப் போடும்படியாகவும் வற்புறுத்தினராம். இதனால்ஆத்திரப்பட்ட மக்கள் கறுப்புக் கொடிகளையும் தும்புக் கட்டைகளையும்தெருத்தெருவாகக் கட்டினராம். இதைக் கண்டு கொதிப்படைந்த காங்கிரசார் பொலிசாரிடம் முறையிட்டனர். பொலிசாரோ அப்பகுதித் தமிழரசு பெரியோர்களின் உதவியை நாடினர். பெரியோர்கள் தலையிட்டு ஒருவாறு தும்புத் தடிகளையும் கறுப்புக் கொடிகளையும் அகற்றுவித்தனராம்.

இவ்வாறு தமிழரசுப் பிரமுகர்கள் சமாதானத்தை நிலைநாட்ட, ஊர்வலத்தில் வந்த பொன்னம்பலம் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெருவோரமாகப் பறந்த தமிழரசுக் கொடியொன்றைப் பிய்த்து வீசினாராம். இதனால் ஒரு கலம்பகமே மூளக் கூடிய தான நிலை ஏற்பட்டது. பொலீசார் நிலைமையைச் சமாளித்தனராம்.

இதில்இன்னொருவேடிக்கை இவ்வரவேற்புக் கூட்டத்தை யொட்டி மாவிட்டபுரம் தமிழரசு வாலிப முன்னணித் தலைவரும் இன்னும் சிலரும் கூட்டம் முடியும் வரை பொலீசாரால் மறியலில்வைக்கப்பட்டிருந்தார்களாம். பொன்னம்பலம் கட்சியைச் சேர்ந்த சிலர் செய்து கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே பொலிசார் இந்த நடவடிக்கையில் இறங்கினார்களாம்.

கொடியறுத்தவர்கள் ஊர்வலத்தில்வர, சும்மா இருந்த...

(14-ம் பக்கம் பார்க்க)

# களவியலையும் கற்பியலையும் சித்தரிக்கும் சில குறள்கள்

உலகில் காணும் இடமெல்லாம் கற்கள் உண்டு. ஆனால் இமயம் போன்று ஒரு சிலவே உயர்ந்து மலைகளாக ஓங்கி நிற்கின்றன. அதுபோல் இந்த மண்ணில் பிறந்து மடியும் மக்கள் பலர் ஆயினும் ஒரு சிலரே உயர்ந்து சான்றோராக நிற்கின்றனர். அப்படிப்பட்டவர்களின் சொல், செயல் சிந்தனை எல்லாமே சுடர்விடும் நந்தா விளக்குகளாகும். அந்த விளக்குகளில் ஒன்று திருக்குறள். அது தமிழ் விளக்காக அமைந்து விட்டது தமிழராகிய நாம் செய்த பாக்கியம். அந்த விளக்கின் ஒளியில் பிரகாசமாகத் திகழும் கருத்தோவியங்கள் ஏராளம். அவற்றில் சிறப்புறத் தீட்டப்பட்ட காதல் சித்திரங்கள் ஒரு சிலவாகும்.

### காதல்

பசி உடலை வளர்ப்பது போல, உயிரை மலரச் செய்யும் காதலுக்கு உள்ள சக்தி அபாரமானது. அதற்குச் சாதாரணர்களைப் பித்தர்களாக்கும் வல்லமையுண்டு. காதலால் முட்டாள் மூதறிஞனாவதும், மூதறிஞன் முட்டாளாவதும் கூட உண்டு. காதலியின் கடைக்கண் பார்வையிலே எலிபோன்ற கோழை புலி போன்ற வீரனாகும் தன்மையையும் காண்கிறோம்.

நமது தமிழ் இலக்கியம் பல சிறப்புகளை இந்தக் காதலால் அடைந்தது எனலாம். மாதவியின் காதலால் சிலப்பதிகாரம் மலர்ந்தது. நற்றிணையும், கலித்தொகையும், அகநானூறும் காதல் தந்த பரிசுகள் அன்றோ:—இத்தகைய மாண்புள்ள காதல் தமிழர் வாழ்வில் ஒரு கட்டுப்பாட்டுள் மலர்ந்து மணம் பரப்புமாறு அமைந்ததைக் குறள் காட்டும் காதற் சித்திரங்களில் நாம் கண்டு கருத்துத் தெளிவு பெறுகிறோம். அத்தகைய, சிந்தைக் குளிரவைக்கும் சித்திரங்கள் சில வற்றைக் கண்டு களிப்போமா:

### தலைவியைக் கண்டான்!

எழில் ததும்பும் சோலை. அங்கு உலவ வந்தான் கவலையற்ற உள்ளத்தவனாக ஒரு இளைஞன். அப்படி வந்தவன் எதிர்பாராத காட்சி ஒன்றினைக் கண்டு திகைத்து நின்றுவிட்டான். எதிரே நிற்பது யார்? மானோ, தோகை விரித்தாடும் மயிலோ அல்லது மானிடப் பெண்தானோ? என்று மயங்குகிறான், எதிரே தோன்றிய எழில் நங்கையைக் கண்டு. அந்த நிலையில், அவள்மேல் கண்டதும் காதல் கொண்டு தன் உள்ளத்தை அவளிடத்தில் பறிகொடுத்து விடுகின்றான்.

உள்ளத்தை இழந்த நிலையில் அவள் அழகைப் பருகித் தேன்குடித்த நரியாகச் சிந்தையிழந்து நின்றான் சிறிது நேரம். சிறிது தெளிவு பெற்றான்—சிந்திக்கத் தொடங்கினான். தான் அவளிடத்தில் மயங்கிவிட்டால் போதுமா? அந்த மங்கையின் உள்ளத்தில் தனக்கு இடமுண்டா என அறிய விரும்பினான். ஒரு யுக்தியைக் கையாண்டான். உள்ளத்தை உள்ளபடி பிரதிபலித்துக் காட்டுவது முகம்—அதிலும் சிறப்பாகக் கண்கள் உண்மையை ஒளிக்காது கூறிவிடும் அல்லவா? எனவே அவன் அந்த மங்கையின் கண்களை உற்று நோக்கினான். முதலில் அவனுக்கு ஏமாற்றமதான் கிடைக்கிறது. காரணம் அவள் இரண்டுவிதப் பார்வையுடையவளாகஇருந்தது தான். ஒரு பார்வை இயல்பாகச் சாதாரணமாக அவனைப் பார்ப்பதுபோல் இருந்தது—அதனைக் கண்டதும் தன்மேல் அவளுக்கு அன்பு இல்லையோ என ஐயம் கொண்டு துன்பத்தால் அலைபாய்கிறது அவன் உள்ளம். மீண்டும் அவள் அவனைப் பார்க்கிறாள். இந்தத்தடவை அவள் பார்வையில் ஆர்வம் ஒளிவிடுவதை அவன் கண்டு கொண்டான் ஆறுதலும் அடைந்தான்.

சற்சொரூபவதி நாதன் பி. எஸ்சி.

### நோக்காக்கால்...

நோக்கும், எதிர்நோக்கும் வளர்ந்து கொண்டே போனது தலைவனும் அவள் உள்ளத்தைச் சிறிது சிறிதாக அறிந்து கொள்கிறான். சாதாரணமாக அவனை நோக்கிய தலைவியின்பாடுஇப்பொழுது திண்டாட்டமாகிவிட்டது. தலைவனின் காதற் குறிப்பை உணர்ந்த பின்பு தனது ஆர்வத்தை ஓரளவு வெளிப்படுத்தி விட்டாலும் அவளால் நாணமென்னும் திரையை முற்றுக்க கிழித்து அப்பால் போட்டுவிடவும் முடியவில்லை. அவனை நேருக்கு நேர் பார்க்கத் தயங்குகிறாள். இதனால் தலைவன் தனைப் பார்க்கும்பொழுது தனது பார்வையை அப்பால் செலுத்தும் நோக்குடன் தலை குனிகிறாள். அவன் தன்னைப் பார்க்காதபொழுது மெதுவாகத் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்து மகிழ்கிறாள்.

அந்த மகிழ்ச்சியில் எழும் புன்சிரிப்பைத் தற்செயலாகத் தலையைத் திருப்பிய தலைவன் கண்டு கொள்கிறான்—அவள் உள்ளக் குறிப்பை உணர்ந்து விடுகிறான். நாணமெனும் அணி பூண்ட நங்கை நல்லாளின் காதற் குறிப்பை மௌன நாடகத்திலேயே தலைவன் அறிந்து கொள்ளும் அழகிய இந்தச் சித்திரம் தன்னைத்தானே,

> “யான் நோக்குங்கால்
> நிலன் நோக்கும்—
> நோக்காக்கால்
> தானோக்கி மெல்ல
> நகும்’’

என்ற குறள் சித்தரித்துக் காட்டுகிறது.

### வாய்ச் சொற்கள் பயனுமில

கடைநோக்கால் தலைவனைப் பார்த்து அவன் பலத்தை அறுக்கும்பொழுது அலைகழிந்து தனது மனதுள் நெகிழ்ந்து தலைவி காதல், அதனைத் தலைவன் கண்டு அவளைப் புரிந்து கொண்டு விட்டால் இருவரும் உள்ளத்தால் ஒன்றாகும் நிலைக்கு வேறு தடை கிடையாது. அப்படிக் கருத்தொருமித்ததும், கண்களும் ஒத்து நோக்கத் தொடங்கிவிடும். தலைவியும் நாணத்தைத் துறந்து மறுக்கு நேராகத் தலைவன் பார்வையைச் சந்திக்க முற்படுவாள்—மௌன நாடகம் இப்பொழுதும் தொடரச் செய்கிறது. ஒருவர் பார்வையில் மற்றவர் பார்வை பதிந்து நிலைத்து நிற்கையில், அங்கு வாய்ச் சொற்களுக்கு என்ன தேவை?

கண்ணொடு கண் இணை நோக்கு ஒத்து இருவரும் தம் நிலை மறந்த நேரத்தில பேச்சுத் தோன்றாது. அப்படித் தோன்றினாலும் அதற்குப் பொருள் பயனோ இருக்காது. மௌனமும் பேசாநிலையில் விளக்கா ஆழ்ந்த நிலையான அன்பைப் பார்வையால் உணர்த்த முற்பட்டு நிற்கும் உண்மைக் காதலன் உயர்ந்த நிலையையே வள்ளுவர்

> “கண்ணொடு கண்ணிணை
> நோக்கு ஒக்கின்
> வாய்ச் சொற்கள்
> என்ன பயனும் இல’’

என்று எழுத்தோவியம் தீட்டினர்.

### வெம்துண்டல் அஞ்சுதும

தலைவனும் தலைவியும் ஒருவர்க்கொருவர் வைத்துள்ள அன்பைப் பார்வைகளைப் பரிமாறிப் புரிந்து கொண்டு விட்டனர். தமது அன்பைப் பிறருக்குப் புலப்படுத்த வேண்டிய அவசியமும் உண்டல்லவா? இதற்கு வாய்மொழியின் துணையை நாடவேண்டியதாகிறது. தலைவி தான் தலைவனின் தன்மேல் எப்படிப் பெற்றுப் பாதுகாக்கிறாள் என்பதைத் தனது தொழிலிடம் வெளிப்படுத்தி விடுகிறாள். உயிர் உடல் எல்லாவற்றிலும் தலைவனின் நினைவு வியாபித்து நிற்கிறதாம். அவர் தனது இரு கண்ணுள்ளும் ஒரு விநாடி கூட அவளைப் பிரியாது வசிக்கின்றாராம். அதனால்தான் அவள் கண்களுக்கு மைதீட்டுவதையும் விட்டுவிட்டாள். காரணம் அவள் மைதீட்டும் பொழுது கண்ணுள்ளிருக்குமவர் எங்கே போவார்? கண் இமைகளையும் அவள் மூடுவதில்லை. அப்படி அவள் இமைகளை மூடினால் அவர் ஒழிந்து கொள்ள வேண்டி இருக்குமே.

கண்ணில் மட்டுமா. அவள் நெஞ்சிலும் அவர் நிறைந்து விட்டதால்சூடானபொருளை அவள் உண்பதில்லை—ஏன்? நெஞ்சில் இருக்கும் அவரை அது சுட்டுவிடுமல்லவா? இந்த உணர்ச்சி வெளிப்பாட்டின் திறத்தையே

> “நெஞ்சத்தார்க்
> காதலவராக
> வெம்துண்டல் அஞ்சுதும்
> வேபாக்கறிந்து’’

என்ற குறள் காட்டி நிற்கின்றது.

தலைவன் தனது உணர்ச்சியை எவ்வாறு வெளிப்படுத்துகின்றான். உயிரைச் சிறப்பாகக் கருதாத மனிதரை இந்த உலகத்தில் காணுவது அரிதாகும். உயிரோடிருந்தால விரும்பும் எதையும் ஒரு நாள் செய்து முடிக்கலாமென எப்படியாவது ஒவ்வொரு மனிதனும் உயிரைக் காக்க முற்படுகிறான். அத்தகைய அருமையான உயிராகவே தலைவியைக் காதலன் எண்ணுகிறான். அந்த எண்ணத்தின் எதிரொலியாக உயிரும் உடம்பும் போல நாயகியும் நானும் நட்புக் கொண்டு வாழ்கிறோம் என்கிறான். இப்படி அவன் கூறுவது இல்வாழ்க்கை உயிர் பெற்று நடக்கிறது எனப்பலத்துக்குப் பதாகும்.

### ......எம்மிடை நட்பு

உடம்பொடு உயிரும் இருந்தால்தான் வாழ்வு நிலைக்கிறது. உடம்பின்றேல் உயிரில்லை, உயிரின்றேல் உடம்பில்லை. அதுபோல் தலைவன் இன்றேல் தலைவி இல்லை, தலைவி இன்றேல் தலைவன் இல்லை. இருவரும் இல்லை என்றால் இல்லற வாழ்க்கையும இல்லை. உடலும் உயிரும் நாயகன் நாயகி வாழ்விற்கு உவமையாக்கப்படும் பொழுது உண்மையில் இவ்வாழ்விற்கு உயிரூட்டப்படுகிறது எனலாம்.

(12-ம் பக்கம் பார்க்க)

## விவேகானந்த சபையின் பணி

கொழும்பு விவேகானந்த சபையின் புயல் நிவாரண நிதிக்கு ரூபா 18,9..-.. பணமாகவும், பொருளாகவும் கிடைத்து என்தென்று சபையின் பொருளாளர் திரு. வி. இ. வயிரவநாதனின் கைச்சாத்துடன் வெளியிடப்பட்டுள்ள ஒரு வரவு செலவு அறிக்கை கூறுகிறது. விருவடாக ரூபா 2,100 பெறுமதியான பொருட்கள் சேகரிக்கப்பட்டதாகவும், ரூபா 3,593-79 பெறுமதியான பொருட்களைப் பொதுமக்கள் நன்கொடையாகக் கொடுத்து உதவியதாகவும், ரூபா 13,095-52 பணமாகக் கிடைத்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரண நிதி வட-கிழக்குமாகாணங்களிலுள்ள அகதிகளுக்கும், பொதுமன்றங்களுக்கும் கொடுக்கப்பட்டதாகவும் ரூபா 3402 கிளிநொச்சி பிள்ளையார்கோவில் புனருத்தாரண வேலைகளுக்காக பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களிடம் கொடுக்கப்பட்டதாகவும், ரூபா 1,168-04 திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்திடம் புயலாற் பாதிக்கப்பட்ட அகதிகளுக்குக் கொடுக்கும்படி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதித் தொகை செலவு செய்யப்பட்டதற்கான விரிவான விபரம் அந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய விபச்சாரம்

சேர்ந்து பழகாத போது ஒருவரை நாம் பெரிய மனிதர் என்று எண்ணிக் கொள்கின்றோம். நாலுதரம் சேர்ந்து பழக நேரும் போது தான் அவரது சிறுமைத்தனங்கள் தெரிய வருகின்றன. இலக்கிய வுலகப் பிரமுகர்கள் கூட இதற்கு விதிவிலக்காக வில்லை.

இலக்கியம் வளர்ப்பதாகவும், இலக்கிய கர்த்தாக்களுக்குச் சன்மானங்களை அள்ளியள்ளி வழங்குவதாகவும் கூறிச் கொள்கின்ற சில பழம் பெரும் பத்திரிகைகள், இலக்கியம் வளர்க்கின்ற விதமும், இலக்கிய கர்த்தாக்களுக்கு அள்ளியள்ளிக் கொடுக்கின்ற முறையும் சென்னை உயர் நீதி மன்றத்தில் நடந்து முடிந்த ஒரு வழக்கில்

### இலக்கிய உலகு

-"வேதாளம்"-

இது தெரிய வருகின்றது. பேராசிரியர் கல்கியால் உருவாக்கப்பட்ட 'ஆனந்த விகடன்' கடந்த சில ஆண்டுகளில் மாபெரும் இலக்கியப் போட்டிகளை நடத்தி, ஆயிரக்கணக்கில் பணத்தை இலக்கிய கர்த்தாக்களுக்கு அளித்ததை இலக்கிய உலகு நன்கறியும்.

பத்தாயிரம் ரூபாய் நாவல் போட்டியும், இருபத்தையாயிரம் ரூபாய் நாடகப் போட்டியும் இலக்கியவுலகை ஒரு கலக்குக்கலக்கியது உண்மையே. நாடகப் போட்டியில் முதற்பரிசை 'கலங்கரைத் தெய்வம்' என்ற நாடகத்திற்காக 'துரோணன்' என்பவர் பெற்றுப் பெருமையடைந்தார்.

ஒரு பத்திரிகை போட்டி நடாத்துவதும், தாம் விரும்பியவரைக்கொண்டு எழுதுவித்து அவருக்குப்பரிசைக் கொடுப்பதும் எங்கும் நடைபெறும் இழி செயலே. ஆனால், போட்டிக்கு வந்தவற்றுள் சிறந்ததை எடுத்து, தாம் விரும்பியவருக்குக் கொடுத்து, அவரைக் கொண்டு தலை கால்வைத்து, அவருக்குப் பரிசு கொடுப்பது இழிசெயல்களுள் கடைகெட்ட செயல்.

'ஆனந்த விகடன்' அதனைச் செய்திருக்கிறது என்பதை திரு. வேணுகோபாலன் என்பவர், திரு. வாசன் மீதும், திரு. துரோணன் மீதும் வைத்த வழக்கின் தீர்ப்பிலிருந்து தெரிகிறது.

இருபத்தையாயிரம் ரூபாய் நாடகப் போட்டிக்குத் திரு. வே. ணுகோபாலன் 'மருதியின் காதல்' என்றொரு நாடகத்தை எழுதியனுப்பியிருந்தாராம். அதனைத் 'துரோணர்' விற்குக் கொடுத்துக் 'கலங்கரைத் தெய்வம்' உருவாகக் காரணகர்த்தாவாக 'ஆனந்த விகடன்' ஆசிரியர் இருந்துள்ளாராம். திரு. வேணுகோபாலனை ஏமாற்

(14-ம் பக்கம் பார்க்க)

# திருவள்ளுவர் சொல்லின் செல்வர்

திருக்குறள் என்னும் பெயர் 'திரு' என்ற அடையினையும் குறள் என்ற பெயரையும் கொண்டது. குறள் என்னும் பெயர் 'குறுமை' என்ற பண்புப் பெயருடன் 'அள்' விகுதி சேர்ப்பதாற் பெறப்படும். தமிழில் வெண்பா யாப்பில் எழுசீரைப் பெற்ற ஈரடி கொண்ட குறள் வெண்பாவே கூடிய குறுமையுடையது. செப்பலோசையுடைய வெண்பா தெளிவு, சொற்சுருக்கம், பிற பொருளையுணர்த்தாமற் கருதிய பொருளை மட்டும் உணர்த்தல் முதலிய பண்புகளைக் கொண்டது. இத்தகைய வெண்பா பலவகையொழுக்கங்களைக் கூறுவதற்கு இன்றியமையாதது. இவ்யாப்பைக் கையாண்டமையாலன்றோ திருக்குறள் சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் உடையதாய் உள்ளது.

சிறப்புடைய குறள்களைக் கொண்டமையால் அதற்குத் 'திரு' என்ற அடை கொடுக்கப்பட்டது. திருவென்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் எனப் பேராசிரியர் திருச்சிற்றம் பலக்கோவையின் உரையிற் கூறுகின்றார். இவ்வடை நூலிற்கு மட்டுமேயன்றி நூலாசிரியனுக்கும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.



ச. தனஞ்சயராசசிங்கம் பீ. ஏ. (ஆனர்சு), ஓம். லிட்.

### பொருள்

திருக்குறள் கூறும் பொருள் யாது? இந்நூல் மக்களது வாழ்க்கைக்கு வேண்டிய ஒழுக்கங்களைக் கூறுகிறது. அவற்றைப் பப்பத்துப் பாடல்கள் கொண்ட நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பாலாகப் பிரித்து விளக்குகிறது. பத்துப் பாக்களில் எடுத்துக் கொண்ட பொருளைக் கூறும் முறையை ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து முதலிய சங்க நூல்களிலும் காணலாம். திருக்குறள் ஆசிரியர் தான் கருதிய பொருளைப் பத்துக் குறள்களுக்குக் குறைவுபடாமலும் மிகைபடாமலும் கூறுவதில் சிறந்து விளங்குகிறார்.

இந்நூலில் 'அதிகாரம்' சிறு பிரிவையும் 'பால்' பெரும்பிரிவையும் குறிக்கின்றன. தொல்காப்பியம் முதலாய நூல்களில் அதிகாரமென்பது நூலின் மூன்று பெரும் பிரிவுகளுக்கேயன்றி உட்பிரிவுகளுக்கு வழங்கப்படவில்லை. இவ்விரு நூல்களின் வழக்குகளை நோக்கின் நூலிற்குத் தகுந்தவாறு அதிகாரம் சிறு [illegible] பெரும்பிரிவாகவும் [illegible]களால் வகுக்கப்பட்டதெனக் கருத இடமுண்டு.

வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் உண்மைகளைக் கூறுவதற்குத் திருவள்ளுவர் பல தந்திரங்களைக் கையாளுகிறார். புறநானூறு முதலிய சங்க நூல்களில் நீதிகளைப் புலவன் இடித்துரைக்கின்றான். ஆனால், வள்ளுவரோ மக்களைத் தாம் கூறும்ஒழுக்கத்தின் சிறப்பை முதலுணரச் செய்கிறார். அவ்வொழுக்கங்களைக் கடைப்பிடியாவிடின் நிகழும் தீமைகளை விரித்து உரைக்கிறார். எவரையும் நல்லொழுக்கங்களைக் கடைப்பிடியுங்களென வற்புறுத்தவில்லை. இதனினும் இது நல்லது, போற்றுதற்குரியது அல்லது தலைசிறந்தது என்று கூறுவதுடன் நின்று விடுகின்றார். எனினும், இவர் கூறும் வகையிலிருக்கும் சிறப்பினால், நாம் அவர் எடுத்துரைக்கும் ஆழ்ந்த பொருள்களையேற்று அவர் வகுத்த வழியில் நிற்க முயலுகிறோம்.

### கூறும் முறை

நல்லொழுக்கங்களோ எண்ணுள் அடங்காதன. அவற்றையெல்லாம் உடனே நாம் அறிந்தால், எல்லாவற்றையும் பேண முயலாது, அவற்றுள் சிறந்தனவற்றைத் தெரிவு செய்ய முற்படுவோம். இதை நன்குணர்ந்த வள்ளுவர், எல்லாவொழுக்கங்களையும் கூறுகையில் அவ்வவ்வதிகாரங்களில் கூறப்படும் ஒழுக்கமேஏனையவற்றிலும் தலைசிறந்ததென்கிறார். பின்பு, ஏனைய அதிகாரங்களில் அவ்வொழுக்கங்களுடைய நிலையை நன்கு கணித்தே கூறுகிறார். உதாரணமாக 'வாய்மை' என்ற அதிகாரத்தில் 'யாமெய்யாக் கண்டவற்றுளில்லை யெனத்தோன்றும் வாய்மையினல்லபிற' என்கிறார். தான் மெய்ந் [illegible] தன்மை யானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிற அறங்களில்லையென வாய்மைக்குச் சிறப்புக் கொடுக்கிறார். பொய்யாமையென்ற அதிகாரத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

'ஒன்றாக நல்லது
கொல்லாமை மற்றதன்
பின்சாரப்பொய்யாமை
நன்று'

இக்குறளிலே, நூலோர் தொகுத்த அறங்களுள் தன்னேடிணைப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமையென்றும் அஃதொழிந்தால் பொய்யாமை அதன்பின்னே நிற்றல் நன்றென்கிறார். வாய்மையெனும் அதிகாரத்தில் முதன்மைபெற்ற அவ்வறம் கொல்லாமையெனும் அதிகாரத்தில் இரண்டாமிடத்தைப் பெறுகிறது. இருக்குவேதத்தில் வருணன், மித்திரன் முதலாய கடவுள்களைப் புலவர்கள் புகழ்ந்து பாடும்பொழுது அவர்களே வலிமையும் பெருமையும் வாய்ந்த கடவுள்களென்று பாடுகின்றனர். ஓரிடத்தில் ஒருவரைப் புகழ்ந்த புலவன், இன்னொரு பாடலில் வேறொரு கடவுளைச் சிறந்ததாகப் பாடுகிறான். இதனால் எல்லா இறைவரும் போற்றப்படுகின்றனர். இதைப் போலவே வள்ளுவரும் எல்லா அறங்களையும் போற்றுகிறார். நாம் ஓர் அறத்தைப் பற்றிப் படிக்கும் போது அது பசுமரத்தாணி போல எமதுள்ளத்திற் பதிய வேண்டுமென்றே இவ்வாறு அவ்வறத்தை விடச் சிறந்ததில்லையெனக் கூறுகிறார் போலும்.

### சிறப்பு

திருக்குறளின் சிறப்பியல்புகள் யாவை? ஏற்ற சொல்லை ஏற்ற இடங்களில் அமைத்தல், அறவொழுக்கங்களிற்கு இலக்கணம் கூறல், சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் உவமை, உருவகங்கள் முதலியன இந்நூலின் தனிச்சிறப்புக்கள் 'கடவுள் வாழ்த்து' எனும் முதல் அதிகாரமே திருவள்ளுவரது இனிய சொல்லாட்சிக்கு சான்றாக இலங்குகின்றது. அவ்வதிகாரத்தில் இறைவனைத் திருவள்ளுவர் பகவன், வாலறிவன், மலர்மிசையேகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறிவாயிலைந்தவித்தான் அறவாழியந்தணன், எண்குணத்தான் என விளக்குகிறார். ஒரு குறட்பாவிற் கையாண்ட சொல்லையோ, சொற்றொடரையோ வேறொரு குறளிலும் எடுத்தாளாது, புதுப்புது அடைகளால் இறைவனின் குணங்களைக் கூறுதல் குறிப்பிடத்தக்கது. ஒத்த ஓசையைத் தரும் சொல்லோ, சொற்றொடரோ மீண்டும் மீண்டும் வருதல் கவிச் சுவையினைப் பயக்காது. ஓசை வேறுபாடில்லாத செய்யுட்கள் படிப்போர் உள்ளத்தினைச் சலிப்படையச் செய்யும். ஏழு சீர்கள் கொண்ட சிறிய பாவில் சீரொவ்வொன்றிலும் சொல்லை மாற்றாது ஒரு சொல்லையே அமைத்து ஆழ்ந்த பொருளை உணர்த்துகிறார் திருவள்ளுவர்.

"தீயவை தீயபயத்தலாற்
தீயவை
தீயினு மஞ்சப்படும்"
"சொல்லுக சொல்லிற்
பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனில்லாச்
சொல்"

போன்ற குறட்கள் இதற்குச் சான்றாவன. அரிது, தலை, நன்று, கடை, கரி, துணை முதலிய சொற்களையே பெரும்பாலும் இறுதிச் சீர்களில் வைத்து முடிக்கிறார். ஆகாறு போகாறு, வில்லேருழவர், சொல்லேருழவர், ஆற்றுவார் மாற்றுவார்வசை, இசை, மன்னுயிர் தன்னுயிர். தெருளாதான் அருளாதான், வலியார் மெலியார்' தினைத்துணை பனைத்துணை போன்ற பல இரட்டை எதுகைச் சொற்களைத் தமது குறட்களிற் கையாண்டு செவிக்கு மின்பம் தந்துள்ளார்.

அறவொழுக்கங்களுக்கு இலக்கணம் வகுப்பதில் வள்ளுவருக்குப் பிற புலவர் நிகரில்லை எனலாம்.

"உற்றநோய் நோன்ற
லுயிர்க்குறுகண்
செய்யாமை
அற்றே தவத்திற் குரு"
"நாடென்ப நாடா
வளத்தன"
"ஓர்ந்துகண் ணோடா
திறைபுரிந் தியார்
மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே
முறை"

என்ற குறட்களில் தவம், நாடு; முறை முதலியவற்றிற்குச் சொற் செட்டாகவும், வேண்டிய பொருளை நீக்காதும் இலக்கணம் கூறும் திறமை போற்றற்குரியது.

### நடை

திருக்குறளிலுள்ள பாக்களிற் பல இன்று கற்பதற்குக் கடினமாக இருக்கின்றன. அவற்றை விளக்குவதற்கென எழுந்த பரிமேலழகர் முதலியோரது உரைகளோ குறட்பாக்களின் கருத்துக்களை ஓரளவிற்குத் திரித்துக் கூறுகின்றன. குறட்பாக்களை நாமெளிதிற் சுவைக்க முடியாமைக்குக் காரணம் அந்நூலினுடைய தொன்மையேயாம். தமிழ் மொழி திருக்குறள் எழுந்த காலத்திலிருந்து இன்றுவரை வளர்ந்து வந்தமையால் அந்நூலிற் காணப்படுகின்ற பல சொற்கள் வழக்கிலில்லாமலும் புதிய பொருளிலும் வழங்கப்படுகின்றன. திருக்குறள் தோன்றிய காலத்தில் தமிழ் மக்கள் அதனை எளிதிற் படித்திருப்பர். எனினும் ஒரு சில குறட்கள் ஓரிரண்டுத் தமிழ்ப் பயிற்சி உடையோரும் முதன் முறையே படித்து இன்புறக் கூடியனவாக இருப்பதற்கு,

"செயற்கரிய செய்வார்
பெரியர் சிறியர்
செயற்கரிய
செய்கலாதார்"
மேலிருந்து மேலல்லார்
மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லர் கீழல் லவர்"

போன்ற குறள்கள் எடுத்துக் காட்டுக்கள்.

திருக்குறளிற் பல, வினாவிற்கு விடையிறுக்கும் பண்பினைச் சொற்றொடர் அமைப்பிலேயே கொண்டுள்ளன. திருவள்ளுவர் தம்மை ஓர் ஆசிரியர் நிலையிற் கருதித் தம் மாணாக்கரின் வினாக்களுக்கு விடையிறுக்கிறார். சால்பிற்குக் கட்டளையாது, வாய்மை எனப்படுவது யாது போன்ற வினாக்களை எழுப்பி அவற்றிற்கு வருமாறு விடை அளிக்கிறார்.

சால்பிற்குக் கட்டளை
யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங்
கொளல்
வாய்மை யெனப்படுவ
தியாதெனின்
யாதொன்று
தீமை யிலாத சொலல்.

முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வருஞ்சீர்கள் எல்லவாற்றிலும் முதலெழுத்து ஒன்றி வருவதை 'முற்றுமோனை' என்பர் யாப்பிலக்கண ஆசிரியர்.

"துப்பார்க்குத் துப்பாய
துப்பாக்கித்
துப்பார்க்குத்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 யூன் மாதம் 13-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# கொள்கை மாற்றம்

கழுதை தேய்ந்து கட்டெறும்பானதாக ஒரு கதை உண்டு. இலங்கை சமசமாஜக் கட்சியின் கொள்கைக்கும் அதே நிலைதான் ஏற்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அரசியற் கட்சியில் பழமையானது ச. ச. கட்சியே. அதற்கு நீண்டகால தொழிற்சங்கப் போராட்ட வரலாறும், ஏகாதிபத்திய — எதிர்ப்புப் போராட்ட வரலாறும் உண்டு. ஒரு நிலையான கொள்கையின்மீது கட்டி எழுப்பப்பட்டதே அக்கட்சி. மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்டு, லெனின், டிராட்ஸ்கி முதலியோரால் செயல்படுத்தப்பட்டதே அக்கொள்கை. இந்த அடிப்படைக் கொள்கைக்கே இன்று உலைவைத்தாகிவிட்டது. இது திடீரென ஏற்பட்டதன்று.

படிப்படியாக ஏற்பட்டதே இக்கொள்கைத் தேய்வு. ஒரு புரட்சிக் கட்சியினுள் சந்தர்ப்பவாதம் தலைதூக்கினால், புரட்சிக்கொள்கை தேயத் தொடங்கும். தேய்ந்து தேய்ந்து இறுதியில் சீர்திருத்தவாதத்தில் வந்து நின்றுவிடும். பிற நாடுகளில் சில புரட்சிக் கட்சிகளுக்கு இந்தக் கதிதான் ஏற்பட்டது. அந்தக் கட்சிகளையும் தூக்கி அடித்துவிட்டது சமசமாஜக் கட்சி.

ச. ச. கட்சியில் சந்தர்ப்பவாதம் தலைதூக்கியது. அதன் விளைவாக புரட்சிக் கொள்கை தேயத் தொடங்கியது. இறுதியில் சீர்திருத்தவாதமாக மாறியது. ஆனால் அத்துடன் நிற்கவில்லை இக்கொள்கைத் தேய்வு. இன்னும் தொடர்ந்து தேய்கிறது. சீர்திருத்த வாதம் தேய்ந்து வகுப்புவாதமாக மாறிவிட்டது. அடிப்படைக் கொள்கை தேய்ந்தால், இதர கொள்கைகளும் தேயும். அதற்கிணங்க கட்சியின் மொழிக்கொள்கையும் தேய்ந்தது. இதன் விளைவு சம அந்தஸ்து தனிச்சிங்களமாக மாறிவருவதுதான். கட்சியின் அடுத்த மாநாட்டுக்கு மொழிக்கொள்கையைத் தனிச்சிங்களமாக மாற்றும் தீர்மானம் வரப்போகிறதாம்.

கொள்கை வகுப்புவாதமாக மாறும்போது தனிச்சிங்களமும் அத்துடன் தொடரவேண்டியதே! அவ்விரண்டும் அரசியலில் இணைந்துசெல்லும் இரட்டையர். இந்நாட்டில் வகுப்புவாதத்தின் அடிப்படை தனிச்சிங்களமே.

கடுமையான — பயங்கரமான சோதனைகள் ஏற்பட்ட போதெல்லாம் ச. ச. கட்சியின் கொள்கை கடுகளவும் மாறவில்லையே-இப்பொழுது மட்டும் வகுப்புவாதமும் தனிச்சிங்களமும் கட்சியுள் தலைதூக்கியது ஏன்? அந்த அளவுக்கு ஒரு புரட்சிக் கட்சியின் கொள்கை தேய்ந்துவருவதேன்?

இதற்கு இரு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று சந்தர்ப்பவாதம் — மற்றது கட்சித்தலைமை என்றென்றும் ஓரினத்தின் கையில் மட்டும் இருப்பது.

## சந்தர்ப்பவாதம்

சுயநலமே சந்தர்ப்பவாதத்தின் அடிப்படை என்று கூறின் தவறுகாது. தலைவர்கள் ஒருசிலரிடம் தலைதூக்கும் சந்தர்ப்பவாதம் வளர்ந்து நாளடைவில் கட்சியையே விழுங்கிவிடும். இந்நிலை ஏற்படும்போது கட்சியே சந்தர்ப்பவாதக் கட்சியாக மாறிவிடும். அப்பொழுதுதான் அக்கட்சி சீர்திருத்தக் கொள்கையை மேற்கொள்கிறது. (அதாவது: சமுதாயத்தை மாற்றியமைக்காமல், அதனைச் சீர்திருத்தினாலே போதுமானது என்ற கொள்கை)

சந்தர்ப்பவாதம் தலைதூக்கப் பல்வேறு அரசியற் காரணங்கள் உறுதுணையாக நிற்கும். ச. ச. கட்சியின் நீண்டகால வரலாறு அதற்குச் சான்று. இக்கட்சி 30 ஆண்டுகளாகப் போராடியது. பல்வேறு அரசியல் உபாயங்களைக் கையாண்டது. கட்சி ஆரம்பமாகும்போது வாலிபர்களாயிருந்த கட்சித் தலைவர்கள் இன்று வயோதிபத்தின் வாயிலுக்கு வந்துவிட்டனர். ஆயினும் இலட்சியத்தை அடையவோ இலட்சியத்தை நோக்கி முன்னேறவோ முடியவில்லை. எதிர்பார்த்திருந்த புரட்சியும் வரவில்லை. இந்த நிலை கட்சி தலைமைக்கு விரக்தியை ஏற்படுத்துவது இயற்கையே. எனவே லெட்சியத்தை அடைய வந்த வழியை விட்டு குறுக்குவழி தேடும் எண்ணம் தோன்றியது. . இதுதான் சந்தர்ப்பவாதத்தின் ஆரம்பம்.

இச்சந்தர்ப்பவாதம் வளர்ந்து இன்று கட்சியையே விழுங்கிவிட்டது. அதன் நேரடி விளைவுதான் சுதந்திரக் கட்சியுடன் கைகோத்து அரசாங்கம் அமைத்தது. ஆனால் தேர்தலில் கூட்டாட்சியினர் தோல்வி கண்டனர். மீண்டும் ஆட்சி பீடமேற மிகக் குறுகிய வழியைத் தேடத் தொடங்கியது கட்சித் தலைமை. எனவே கொள்கைத் தேய்வு துரிதமாயிற்று. இதன் விளைவு வகுப்புவாதத்தையும் தனிச் சிங்களத்தையும் அணைத்துக் கொள்ள முன்வந்ததுதான்.

சுதந்திரக் கட்சியுடன் கொண்ட கூட்டும் ச. ச. கட்சியை வகுப்புவாதப் பாதையிற் திருப்பியது. சுதந்திரக் கட்சிக்கு மக்கள் ஆதரவு அதிகம். அக்கட்சியுடன் கைகோத்துச் சென்றாலே ஆட்சி பீடமேறலாமென்பது ச. ச. கட்சித் தலைமையின் முடிவு. அதற்காக சுதந்திரக் கட்சிக்கு இசைவான ஒரு கொள்கையையே கையாள வேண்டும். இது ச. ச. கட்சிக்கு ஏற்பட்ட ஒரு நிர்ப்பந்தம். இக் கொள்கைதான் வகுப்புவாதமும், தனிச் சிங்களமும். இவ்வாறு கட்சிக் கொள்கை இன்னும் தொடர்ந்து தேய்கிறது.

# வகுப்புவாதக் கொள்கை மீண்டும் தலை எடுக்கிறதா?

வகுப்புவாதம், இனப் பாகுபாடு, பாரபட்சம்போன்ற கொடிய மேகங்கள் இலங்கை அரசியல் வானை மூடி மறைத்திருந்தன. அந்த மேகத் திரையைக் கிழித்துக் கொண்டு ஒற்றுமை, உறவு என்பன போன்ற ஒளிக் கதிர்கள் தென்படத் தலைப்பட்டன. தேசிய அரசாங்கம் தோன்றியதும், இத்தனை நாள் எமை வாட்டிய பாகுபாட்டுத் தொல்லைகள் தேய்ந்தொழிந்து போக ஆரம்பித்து விட்டன என்று மக்கள் கருதினர். ஆனால் தங்கள் எண்ணம் வீண் கற்பனையாகிப் போகுமோ என்று இன்று மக்கள் ஏங்கத் தலைப்பட்டுள்ளனர்.

தகுதியும் திறமையும் உள்ள பல செயலாளர்களின் சேவையை இந்நாடு பல வருடங்களாக இழந்து வருகிறது. பெரும்பான்மைச் சமூகத்தில் பிறக்காத குற்றத்துக்காகப் பல சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த திறமை வாய்ந்த ஊழியர்கள் பழி வாங்கப்பட்டு வந்துள்ளனர். அக் கொள்கைகள் யாவும் மண்மூடிப் போய், இனப் பாகுபாடற்ற வகையில் சமநீதி வழங்கப்படும் காலம் உதயமாகிவிட்டது என்று கருதப்படும் இவ்வேளையில்—பொது மராமத்துத் திணைக்களத்தின் அதிகாரி நியமனத்தில் பாரபட்சம் தலை காட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுவரை காலமும் மராமத்து இலாகாவின் அதிகாரியாக திரு. பிரேமரத்ன இருந்து வந்தார். உதவி அதிகாரியாகக் கடந்த எட்டு வருடங்களாகத் தமிழரான திரு. எல். சி. வில்லியம்ஸ் கடமையாற்றியுள்ளார். மரபுப்படி, அதிகாரியின் இடம் காலியானால் உதவி அதிகாரியாகவுள்ளவர்தான் உயர்பதவிக்கு உயர்த்தப்பட வேண்டும். அவ்வண்ணமின்றி மராமத்து அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா, சிங்களவரான திரு. வி. சி. டி. சில்வாவை உயர் பதவிக்கு நியமித்துள்ளார்.

இதுகால வரை இருந்து வந்து இந்நாட்டையே குட்டிச்சுவராக்கிய இனப்பாகுபாடு மீண்டும் தலை தூக்க ஆரம்பித்து விட்டதா, என்று தமிழ் பேசும் மக்கள் ஐயப்பட ஆரம்பித்துள்ளதில் ஆச்சரியமில்லையல்லவா?

திரு. வில்லியம்ஸைப் பொறுத்த வரையில் அவருடைய சேவைக் காலத்தில் எதுவிதமான குறையும் கிடையாது என்று கூறப்படுகிறது. மேலும், உயர் பதவிக்கேற்ற தகுதியும் திறமையும் அவரிடம் இருக்கிறது என்றும் தெரிகிறது. அப்படியானால் அமைச்சரின் இந்நடவடிக்கைக்கு என்ன காரணம் இருக்க முடியும் என்பதை பிரதம மந்திரி தலையிட்டு ஆராயவேண்டும்

## அதர்மமாகும் தர்மம்

மக்களிடமுள்ள தர்மசிந்தையினைப் பயன்படுத்திக்கொண்டு பல சந்தர்ப்பவாதிகள் வயிறு வளர்க்க ஆரம்பித்திருக்கும் கொடுமையினை மகாதேசாதிபதி வில்லியம் கோபல்லாவ வன்மையாகக் கண்டித்துள்ளார். இராணி மாளிகையில் அண்மையில் நடைபெற்ற

சுதந்திரன்
அரசியல் விமர்சகர்

பிள்ளைகள் — இளைஞர்கள் பாதுகாப்பு தேசிய சபையின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு கருத்துரை நிகழ்த்துகையிலே திரு. கோபல்லாவ இவ்வாறு கூறினார்.

ஏதாவது ஒரு தர்மஸ்தாபனத்தின் பேரைக் கூறிக் கொண்டு தினசரி படி ஏறி வந்து பணம் திரட்டும் பலரைப் பார்க்கிறோம். இவர்களில் உண்மையான நோக்கமுடையவர்கள் யாவர் என்பதனை அறிந்துகொள்ளது துர்லபம். பார்வைக்கு வெகு நேர்த்தியான நடை, உடை, பாவிளையோடு தென்பட்டாலும், இவர்களில் பலர் அயோக்கியத்தனமான முறையில் பணம் சம்பாதிக்கிறவர்கள் என்பது மட்டும் உண்மை.

தமிழ் மக்கள் மத்தியில், கதிர்காமத்தில் தண்ணீர்ப் பந்தல் வைப்பதாகவும், கோயில் கட்டுவதாகவும் கூறிக்கொண்டு பணம் திரட்டும் பலரைக் காண்கிறோம். இவர்களில் பலர் போலிகள் என்பது தெளிவு. இப்போலிகளின் நடமாட்டத்தினால் உண்மையான தர்மசிந்தனை உள்ளவர்களின் நோக்கமும் கெட்டுப்போகிறது.

அயோக்கியத்தனமான ரீதியில், மக்களை ஏமாற்றிப் பணம் பறித்து வயிறுவளர்க்கும் இத்தகையவர்களைத் தண்டிக்க அரசாங்கம் மக்களின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## ஓர் இனத்தின் தலைமை

சமசமாஜக் கட்சியின் தலைமை என்றென்றும் சிங்களத் தலைமையே. தேசியக் கட்சி என்று கூறினாலும் தலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. ஏற்படவும் முடியாது. இந்நாட்டில் ஓர் அரசியற் கட்சி தமிழர் கட்சியாக இருக்க வேண்டும். இல்லையேல் சிங்களவர் கட்சியாக இருக்க வேண்டும். இரு இனத்துக்கும் பொதுக் கட்சியொன்று இருக்க முடியாது. காரணம், ஒற்றையாட்சியில் இரு இன உரிமைகளுக்கிடையே ஒரு மோதுதல் இருப்பதே.

அத்தகைய 'உரிமை மோதுதல்' ஏற்படும்போதெல்லாம் சிங்களவர் கட்சி சிங்கள இனத்தின் உரிமையைக் காத்து நிற்கும்—தமிழர்கட்சி தமிழினத்தின் உரிமையைக் காத்துநிற்கும். ஆகவே ஒரு கட்சி இரு இனங்களின் நலவுரிமைகளையும் பாதுகாக்க முடியாது. ச. ச. கட்சியின் நிலையும் இதுதான்.

அது சிங்களவர் கட்சியே. தமிழர்கள் சிலர் அதில் உறுப்பினர்களாக இருப்பதால் அதன் தன்மை மாறிவிடவில்லை. எனவே அது சிங்களவர்களின் நலவுரிமைகளையே காக்கமுடியும். அதற்கேற்ப சிங்கள வகுப்புவாதத்தையும் தனிச் சிங்களத்தையும் மேற்கொண்டுள்ளது. இது வியப்பன்று.

தமிழர்களின் உரிமைகளைப்பற்றி இக்கட்சி பேசலாம். ஆனால் சமயம் வரும்போது அந்தப் பேச்சையும் கைவிட்டுவிடும். அந்தச் சமயமும் வந்துவிட்டது.

திரு. எட்மன் சமரக்கொடியின் குழு ஒரு அதி தீவிரவாதிகள் கோஷ்டி. அவர்களின் வெறும் புரட்சிக்கோஷம் பயன்படாது. அதி தீவிரவாதம் பயங்கரவாதத்திலேயே போய் முடியுமென்பதை லெனினே தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆகவே ச. ச. கட்சியின் தமிழ் உறுப்பினர்கள் கட்சிக் கொள்கை [illegible] தேய்வையும் தெளிவாக ஆராய்ந்து [illegible] முடிவு செய்யவேண்டுமென்பதே எமது அவா!

## கூட்டரசாங்க.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் பேராச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

வகுப்புத் துவேசக் கொள்கைகளை சுதந்திரக் கட்சி கைவிடாத பட்சத்தில் கட்சியின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்படும் என்று சுட்டிக் காட்டியும், வகுப்புவாதப் பூசல்களைக் கிளறுவதைக் கண்டித்தும் ஒரு மகசரை மேற்படி குழு தயாரித்து வருவதாகவும் கூறப்படுகிறது. இக் கோரிக்கையினை சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடம் உதாசீனம் செய்வதானல் தாங்கள் கட்சியிலிருந்து வெளியேறி விடலாம் என்று இக் குழுவிலுள்ள ஒரு பிரமுகர் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

சமசமாசக்கட்சி

சுதந்திரக் கட்சிக்குள் வகுப்பு வாதப் பூசல்களை ஒழித்துக்கட்ட முயற்சிகள் நடைபெறும் இவ்வேளையில், பல காலமாக பரந்த அடிப்படையில்—இன ஒற்றுமைக்கு அடிகோலி வந்ததாகக் கருதப்பட்ட சமசமாசக் கட்சி தனது மொழிக் கொள்கையை மாற்ற எத்தனித்திருப்பதாகச் செய்தி கிடைத்துள்ளது. சமசமாசக் கட்சியின் 'சம அந்தஸ்து' கொள்கையை நீக்கிவிட்டு 'சிங்களம் மட்டும்' கொள்கையை அனுசரிக்க கட்சியின் விதிமுறைகளையே மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

## தாதிமார் பயிற்சி

மருத்துவ தாதிமார் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்த பெண்கள் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்று வர்த்தகமானி அறிவித்தல் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவிகள் வேண்டிய விண்ணப்பப் பத்திரங்களை யாழ்ப்பாணம், 25, 2-ம் குறுக்குத் தெருவிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பணிமனையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழரசுக் கட்சித் தலைமை நிலையம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி ஆசையினால் வாக்கை மீறத்துணிந்தனர்

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி யாழ். நகர முதல்வர் விளக்கம்

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர்மீது பொன்னம்பலம் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆல்பிறட் துரையப்பா குழுவினரும் சேர்ந்து கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின் போது முதல்வர் திரு. சு. சே. மாதேவா தம்மீது சுமத்தப்பட்ட சகல குற்றச்சாட்டுக்களுக்கும் விபரமாகப் பதில் கொடுத்தார். 'பதவியாசையே கனவான்கள் உடன்பாட்டையும் மீறி இப் பிரேரணையைக் கொண்டுவருவதற்குக் காரணம்' என்பதை முதல்வர் பகிரங்கமாக எடுத்துக் கூறினார்.' நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது)

நகர முதல்வர் திரு. சு. சே. மாதேவா அவர்களின் பேச்சின் சுருக்கம் வருமாறு:

'நான் யாருக்கும் கெடுதலோ, வஞ்சகமோ புரிந்தவனல்ல. வரியிறுப்பாளரும் மாநகர அங்கத்தவர்களும் இதை நன்கு அறிவர். ஆயினும் பதவிக்கு ஆசைப்பட்டு என்பேரில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டுமென்பதற்காக, பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். தம்மீது சுமத்தப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வாய்ப்பு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லா முதல்வர்களுக்கும் கிடைத்து விடுவதில்லை. நான் குற்றமற்றவன். நிரபராதி என்பதை நிரூபிக்க இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தந்த அங்கத்தவர்களுக்கு முதலில் என் நன்றியைக் கூறிக்கொள்ளுகிறேன்.

### வாக்கை மீறினர்கள்

'சென்ற மாநகர தேர்தலில் எந்த ஒரு கட்சிதானும் போதிய பெரும்பான்மை அங்கத்தவர்களைக் கொண்டிருக்காதபடியால், அப்போது ஆபத்தான பேர்வழியாக விளங்கிய ஒருவருக்கு எதிராக கூட்டுச் சேரவேண்டிய நிர்ப்பந்தத்தில் தமிழரசுக் கட்சி தமிழ்க் காங்கிரசாருடன் கூட்டுச் சேர்ந்து ஒரு கனவான்கள் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. அந்தக் கனவான்கள் ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் திரு. தா. ச. துரைராசா அரை வருடமும், நான் (மாதேவா) ஒன்றரைவருடமும், திரு. சுல்தான் ஒரு வருடமும் பதவி வகிக்கவேண்டுமென்று சகலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

'தமிழரசு ஒத்துழைப்பால் முதல் 6 மாதகாலம் பதவி வகித்த திரு. துரைராசா தம் பதவிக்காலம் முடிந்த பின்பு அடுத்த ஒன்றரை வருட காலமும் நான் பதவியில் இருக்கும்படி எனக்குத் தம் ஆதரவைத் தந்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. நாங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினோம். அவர்களோ கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தவறியதுடன் இடைஞ்சலாகவும் நிர்வாகத்திற்கு முட்டுக் கட்டையாகவும் இருந்திருக்கிறார்கள்.

நான் மாநகரசபை முதல்வராகத் தெரிவுபெற்ற அன்று தமது ஒத்துழைப்பை நல்குவோமென எனக்கு உறுதி தந்தவர்கள்—துரையப்பா குழுவினருடன் கூட்டுச்சேர்ந்துகொண்டு-சபைக் கூட்டங்களில் தகராறை உண்டுபண்ணி ஒழுங்கான நிர்வாகத்திற்கு பெரும் இடைஞ்சலாகவே இருந்திருக்கின்றனர் என்பதை, வெகு துக்கத்துடன் இங்கு கூறவேண்டியவனாய் இருக்கிறேன்.

### தொல்லைகள் கொடுத்தனர்

'நான் முதல்வராகப் பதவியேற்ற நாளில் இருந்து இவர்கள் எனக்குத் தந்த தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றை அங்கத்தவர்களும் பொதுமக்களும் அறியும்படியாக இங்கு பகிரங்கப்படுத்துவதில் யான் மகிழ்ச்சியடைகிறேன்:-



யாழ் மேயர்
சு. சே. மாதேவா

'சென்ற வருடம் யான் வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்தபோது வரவு செலவுத் திட்டத்தைதேவையற்றவிதத்தில்-பற்றாக்குறையுள்ளதாக்க வேண்டுமென்பதற்காக—அவசியமற்ற திர்மானங்கள் பலவற்றைக் கொண்டுவந்தனர். தமிழரசு முதல்வரின் நிர்வாகம்சீராக இயங்க அனுமதிக்கக் கூடாதென்பதற்காக இரு குழுவினருமாகச் சேர்ந்து அர்த்தமற்ற தீர்மானங்களை நிறைவேற்றினர். சபையின் நன்மையின் நிமித்தம் என்னால் செய்யப்படவிருந்த பல விடயங்கள் சபைக்கு வந்தபோது வீம்புக்காக அவற்றைத் தோற்கடித்தனரென்பதை துரையப்பா—தமிழ்க் காங்கிரஸ் குழுவினரால் மறுக்க முடியாது.

'மாநகர முதல்வரின் அதிகாரத்தை துணை முதல்வருக்கு வழங்கவேண்டுமென்றும் இவர்கள் ஒரு விசித்திரமான பிரேரணையை கொண்டுவந்ததைக்கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். மாநகர முதல்வரின் அதிகாரங்கள் மாநகர கட்டளைச் சட்டத்தால் மாநகர முதல்வருக்கு வழங்கப்பட்டவை. அவற்றைப்பறிக்க சபைக்கு அதிகாரமில்லையென்பதைத் தானும் இவர்கள் அறிந்துகொண்டும் அறியாதவர்கள் போல் நடந்துகொண்டனர்.

'முதலாம் வட்டார உறுப்பினர் (திரு. இராசசூரியர்) திட்டமிட்டு அமைப்புத் திட்டம் பற்றி என்மீது குற்றம் சுமத்தினர். அங்குபாவிக்கப்படும் கற்கள்யாவும் போலியானவையென்றும், உதிர்ந்துபோகக் கூடியனவென்றும் அவற்றில் செலவிடப்படும் பணம் விரயமாகும் செலவென்றும் சொன்னார். உண்மையென்ன அங்கத்தவர்களே! திட்டமிடமைப்புத் திட்டத்திற்கு யான் பொறுப்பல்ல. உங்களுடன்சேர்ந்து நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்குக்கையொப்பமிட்டிருக்கும் திரு. துரைராசா அவர்கள் முதல்வராக இருக்கும் போது தான் திரு இராசசூரியர் சொன்ன விடயங்கள்சம்பவித்தன. இதனை இங்கு அம்பலப்படுத்துவதில் சந்தோசப்படுகிறேன். மேற்படி கட்டிடங்களை அமைத்ததற்காக கொடுப்பனவு இன்னமும் செய்யப்படவில்லை என்பதையும் அவர்கள் மறுக்க முடியாது.

### ரேச். வரதராசன் விவகாரம்

'திரு. ரேச் என்பவர் முன்னைய சபையால் நியமிக்கப்பட்டவர். அவர் தம் கடமைகளைச் சரியாகச் செய்வதில்லையென்று அறிவிக்கப்பட்டது. அதனால் அவரை வேலைநீக்கம் செய்தேன். மின் நிலையத்தில் தற்காலிக ஊழியராக அமர்த்தப்பட்ட திரு. வரதராசன் தற்காலிக ஊழியராகஇருக்கும்போதே மின்சாரக் கம்பிகளைத்திருடியிருக்கிறார். அது ஒரு பாரதூரமான குற்றமாகும். எனவே. அவரை வேலையிலிருந்து நீக்கினேன்.

பத்துப்பை சிமேந்துக்குக் கணக்குக்காட்ட முடியவில்லையென்பது மராமத்துப்பகுதி உத்தியோகத்தர் திரு. துரைசிங்கத்தின்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும். அவர் நீண்டகாலம் சேவை செய்திருப்பவர். நிரந்தரமான சேவையைச் சேர்ந்த சேவையில் திறமையானவரென மேல் உத்தியோகத்தரால் பாராட்டப்பட்டவர். ஆகவே தான் இரண்டுவருட காலத்திற்கு அவரது வேதன உயர்வை நிறுத்தி, 25 ரூபா அபராதமும் விதித்தேன்.

### முரண்பட்ட முடிவுகள்

'சபைக் கூட்டம் ஒன்றில் உத்தியோகத்தர் அளவுக்கு அதிகமாக இருக்கின்றனர். அவர்களை வேலைநீக்கம் செய்யவேண்டுமென்று கூறுவார்கள். அதே விடயத்தையிட்டு அடுத்த கூட்டத்தில் மாறுபட்ட கருத்துத் தெரிவிப்பார்கள். மேல்மிச்சஊழியர் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், அப்போதும் ஏன் வேலைநீக்கம் செய்தீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். இப்பேற்பட்டவர்கள் நீதியின் பேராலும், நேர்மையின் பேராலும் உரத்துக்குரலெழுப்புகின்றார்கள்.

### மாதிரிச் சந்தை

'பதவியில் அமரவேண்டுமென்ற ஆசையால் சிலர் தூண்ட இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்மீது கொண்டுவரப்பட்டுள்ளது. மாதிரிச் சந்தையைப்பற்றி இங்கு குறிப்பிடப்பட்டது. மாதிரிச் சந்தையை கட்டமுனைந்த பொழுது அது துரைராசாவால் கொண்டுவரப்பட்டதென்பதற்காக துரையப்பா குழுவினர் அதை எதிர்த்தனர். அதைத் தடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். போதிய படங்கள் இல்லாவிட்டாலும் சந்தையைக் கட்டு என்கிறார் திரு. துரைராசா. பணமின்றி சந்தையை எப்படிக் கட்டுவது. எந்த அடிப்படையில் பணம் செலுத்துவது. எனவே, தான் சந்தைக்கான கட்டிட வேலைகளை நிறுத்தி வைத்தேன். சந்தையைக் கட்டக்கூடாதென்று தீர்மானம் கொண்டுவந்தவர்களே, பின் சந்தையைக் கட்டு என்றும் தீர்மானம் கொண்டு வருகிறார்கள்.

'சில உறுப்பினர் மின்சாரக் கம்பங்களைச் சபையே செய்யவேண்டுமென்று கூறினர். பின் அதே அங்கத்தவர்கள் அப்படிச் செய்யக்கூடாதென்றும் தெரிவித்தனர். மின்சார அத்தியட்சரோ சபையால்அவற்றைச்செய்ய இயலாதென்று கருத்துத் தெரிவித்தார். அவரதுகருத்தையே யான் ஏற்றுக் கொண்டேன். அங்கத்தவர்களும் அதையே ஒத்துக் கொள்ளவேண்டும். நான் முதல்வராக வந்தபின் 50 பேரைப் பதிதாக வேலைக்கு எடுத்துக்கொண்டதாகக் கூறப்பட்டது. தவறு. முதல்வர் பதவியேற்றதில் இருந்து நான் யாரையும் வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லையென்பதை இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

### மின் மாற்றிகள்

'கனகரத்தினம் வீதி என் வட்டாரத்தில் உள்ளதென்றும் அங்கு நான் மின்சார விஸ்தரிப்புவேலைகளை மேற்கொண்டதாகவும் கூறும் சுமக்கின்றார்கள். இவர்கள் குறிப்பிட்ட இடம் நான் அங்கம்வகிக்கும்வட்டாரத்தைச்சேர்ந்ததல்ல. அது 7ம வட்டாரத்தைச் சேர்ந்த பகுதி. அங்குதான் இவ்வேலைகள் நடைபெற்றுள்ளன. 7ம் வட்டார உறுப்பினர் தமிழ்க்காங்கிரஸ் குழுவிலுள்ளவர் என்பதும்இங்கு குறிப்பிடத்தக்கது.

'மின் மாற்றிகள் நான்கை அமைக்க அரசாங்கம் கடன் உதவியுள்ளது. இதில் கொழும்புத்துறை, ஐந்து சந்தி ஆகிய இடங்களில் வேலைகள்ஏற்கனவே முடிந்து விட்டன. கனகரத்தினம் வீதியில் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கொன்வென்றடியில் இன்னமும் வேலைகள் முடியவில்லை. உண்மை இவ்விதம் இருக்க இவர்கள் உண்மையை மாற்றி என்மீது வேண்டுமென்றே பொய்க் குற்றம் சுமத்துகிறார்கள்.

### சோலை வரி

'முன்னைநாள் முதல்வர்கள் தாம் பதவியில் இருந்த போது தான் வாக்குப்பெற வேண்டுமென்பதற்காகவோ அல்லது எதற்காகவோ சோலை வரியை முறையாக அறவிடாதிருந்தார்கள். நான் பதவியில் இருந்த காலத்தில் தான் கூடுதலாக வரி அறவிடப்பட்டுள்ளதென்பதையும், மக்களின் பூரண ஒத்துழைப்புடனேயே அது நடைபெற்றிருக்கிறதென்பதையும் இங்கு கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

### அமைச்சர்கள் வருகை

'தம் தலைவரின் அழைப்பின்பேரில் அமைச்சர்கள் இங்கு வந்ததை முதல்வர் எதிர்த்தார் என்று திரு. துரைராசா என்மீது குறைப்பட்டார். அமைச்சரின் யாழ். விசயத்தை நான் ஒருபோதும் எதிர்க்கவில்லை. அமைச்சர்களின் விசயத்திற்கான ஒழுங்குகளைச் செய்தவர்கள் ஏற்பாடுகளில் முதல்வரைக் கலந்துகொள்ளாததால் அமைச்சர்களை வரவேற்க முடியாத நிலையில் முதல்வர் விடப்பட்டுள்ளார் என்பதையிட்டே பிரதமருக்கு ஆட்சேபனை தெரிவித்தேன். பிரதமர்கூட பெருந்தன்மையுடன் எனது ஆட்சேபனையைஏற்றுக்கொண்டுமாநகர முதல்வருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இசகுபிசகுகளுக்கு வருத்தம் தெரிவித்து அனுப்பிய கடிதத்தைஇங்குவாசித்துக் காட்ட விரும்புகிறேன். (கடிதம் வாசிக்கப்பட்டது)

'என்மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு போதியபடி பதலளித்துள்ளேன். இக் குற்றச்சாட்டுக்கள் பெரும்பாலும் பொய்யானவை. வேண்டுமென்றே சுமத்தப்பட்டவை. நான் பதவிவகித்த நாள்முதல் இன்றுவரை சபை உறுப்பினருக்கோ, வரியிறுப்பாளருக்கோ பட்சபாதகமாக நடந்ததில்லை. யார்மீதும் வஞ்சம் தீர்க்கும் எண்ணமும்எனக்கு இல்லை. நியாயத்திற்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்ய ஒருவேளை நான் இணங்கா திருந்திருக்கலாம். அதற்கு நான் பொறுப்பில்லை. நான் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டியவன். ஒரு கட்சியைச்சேர்ந்தவனுக விருந்தபொழுதிலும், யாவரையும் சமமாகநடத்த வேண்டியவன். ஆகவே, கௌரவ அங்கத்தவர்கள் தீர்மானத்திற்குவாக்களிக்கு முன்பு இவற்றை எண்ணி தங்கள் கடமையைச் செய்ய வேண்டும்'.

## தமிழுக்கு இடம் தாரீர்

திருகோணமலை: ரத்தோட்டையிலுள்ள பட்டின சபைப் பணிமனையிலிருந்து அப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் யாவும் தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்படுகின்றன. இதனல் தமிழ் பேசும் மக்கள் பெரிதும் துன்பப்படுகிறார்கள்.

தமிழ் பேசும் இளைஞர்கள் பலர் இம்முயற்சியைக் கண்டிக்கும் முகமாகவும், தமிழ் பேசும் மக்களுக்கு உதவும் நோக்கமாகவும் பட்டின சபைத் தலைவருக்கு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளனர். தமிழ் பேசும் மக்களுடன் தமிழில் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கோரும் இம் மகசரில் பட்டின வாசிகள் பெரும்பாலார் கையொப்பமிட்டுள்ளனர். இம் மகசரின் பிரதி ஒன்று உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகஅறியப்படுகிறது. பட்டினசபை முதலாவது வட்டார உறுப்பினரான ஜனப் எச். எம். ஜெய்னுலாப்தீன் அவர்களை இவ்விளைஞர்கள் சந்தித்தபோது இந்நியாயமான கோரிக்கைக்கு தாம் என்றும் ஆதரவளிப்பதாகவும் வாக்களித்துள்ளதாகத் தெரிகிறது.

## வாக்காளர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக மூதூர், திருகோணமலை போன்ற தேர்தற் தொகுதிகளில் உள்ள பெரும்பான்மையான தமிழ் பேசும் வாக்காளர்களின் பெயர்கள் கடந்த பொதுத் தேர்தலின் போது விடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். எனவே இப்பகுதிகளில் உள்ள தமிழ் பேசும் வாக்காளர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்வதில் விசேட கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தமிழரசுக் கட்சி வட்டாரம் வற்புறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக் குமுறல்

இவ்வாரச் சிறுகதை

செங்கதிர்ச் செல்வன்

**நான்.** முன்னைப் பழமைக்குப் பழமையாகவும், பின்னைப் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கும் ஒருவன். உளவியல் முறையில் புரட்சியையும், புதுமையையும் நாடும் நான், ஏன்? வாழ்வியல் முறையில் பழமையை நாடுகிறேன்.

எனக்கு நானே புதுமையானவன். என்னை யென்னுலேயே புரிந்துகொள்ள முடியாது.

நான் ஒரு விசித்திரப் பிறவி. இது யாருடைய கணிப்பு மல்ல. நானே என்னைப் பற்றிக்கொண்ட தீர்க்கமான முடிவு இது. மற்றவர்களைப் பார்த்து மதிப்பிடும் நான்; என்னை மதிப்பிட முடியாது தவிக்கிறேன். இல்லை. என்னை நான் உணர்ந்து விட்டேன். முழுமையாகவே உணர்ந்து விட்டேன். இல்லை இது அசட்டு நம்பிக்கையா?

எனது விசித்திர நிலைக்குக் காரணமென்ன? நான் வளர்ந்த நிலையின் கோளாறு? அல்லது நான் வளர்க்கப்பட்ட நிலையின் கோளாறு? இல்லை, நான் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட முறையின் கோளாறு? எதுவுமேயில்லை.

உலகத்தை நான் நோக்கிய முறையின் கோளாறு. உள்ளத்தின் சூனியத்தை நிரப்ப நான் அலைகிறேன். இல்லை. உள்ளம் என்ற எனது பாலை வனத்தில் குழுமை பாய்ச்சப்பட வேண்டும்.

ஆம். குழுமைக்கும் குளுகுளுப்புக்கும் வேற்றுமை தெரியாத உலகம், தவமுன பாதையில் செல்கிறது.

இல்லையென்றால், அவனை முதல் நாள் அறிமுகப்படுத்தும் பொழுதே இதோ 'உன் அண்ணன் வந்து விட்டான்' என்று கூறியவன், இன்று 'குடும்பத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு' என்று டிந்துக விரட்டுவானு?

என் உள்ளத்தை அன்று முதல் உணர்ந்தவன் அவன். அவனே இன்று என்னைச் சந்தேகக் கண் கொண்டு நோக்கியுள்ளான் என்றால்......? நான் எதிர்பார்த்ததை இனியெங்குமே, என்றுமே என்னுல் பெற முடியாதா?

என் அம்மா கூறியது என் நினைவிற்கு வருகிறது 'உன் ஆசையைப் பூர்த்தி செய்ய முடியவில்லையடா' என்று.

அவனுக்கே எனது உள்ளத் தாபத்தை பல முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். அவனும் என்னைப் போன்ற ஒருவன் தான். ஆனல் ஒரு சில வித்தியாசம். நான் அப்பா அம்மாவுக்கு ஒரேயொரு பிள்ளை. அவன் மூன்று சகோதரர்களுடன் பிறந்தவன்.

நான், அப்பா அம்மாவை என்றோ இழந்து விட்டேன். உலகை சரியாகப் புரிய முன்னரே நான் தாய் தந்தையரை இழந்து விட்டேன். எனக்குத் தாய்ப் பாசம் என்றால் என்ன என்று தெரியாது.

அவன், பெரியவனுகிற வரையில் தாய் தந்தையரின் அரவணைப்பில் வளர்ந்தவன். அவனுக்கு அதைவிடச் சிறப்பு. சிறு வயதிலேயே ஒரு அண்ணி கிடைத்து விட்டாள். அவனுக்குக் கிடைத்த அண்ணி, அண்ணியாக மட்டும் வரவில்லை. நல்லாசிரியையாக, பணிப்பெண்ணுக, எல்லாத்துக்கும் மேலாக அவனின் சகோதரியாகவே அவள் கிடைத்து விட்டாள்.

'இரவு கணக்குச் செய்யவில்லையென்று அண்ணி அடித்து விட்டாள், அது ஒரு சனியன் என்பான் அவன். அந்த நேரத்தில் என்னைக் கண்டிப்பதற்கு எனக்கொரு அண்ணி இல்லையே என்று ஏங்குவேன்.

'இது அண்ணி தைத்துத் தந்த கைக்குட்டை, காலை ஐந்து இடியப்பம் சாப்பிட்டால் இரவைக்குப் படத்துக்கு கூட்டிக் கொண்டு போறதாக அண்ணி சொல்லிச்சுது, நான் ஆறு இடியப்பம் சாப்பிட்டனுன், அண்ணி கைக்குட்டையும் தந்தது. இரவைக்கு படத்துக்கும் கூட்டிக் கொண்டு போவதாவும் கூறியது,' என்பான். அப்பொழுதெல்லாம் என் உள்ளத்தில் ஒருவித தவிப்பு. ஒரு சூனிய உலகில் சஞ்சரிக்கும் நிலை. என்னையே புரிந்து கொள்ள முடியாத நிலையில், என்மீது எனக்கு வெறுப்பு ஏற்படும்.

இதையெல்லாம் பல வருடங்களின் பின் அவனிடம் சொல்லி உள்ளப் பாரத்தைக் குறைக்க முயன்றிருக்கிறேன். எனது உள்ளத் தவிப்பை பல தடவைகள் அவன் கிண்டல் பண்ணியிருக்கிறான்.

கிட்டத்தட்ட எனது இருபத்தியாறு வருட வாழ்வின் பெரும் பகுதி கல்லூரி விடுதிகளிலும், பல்கலைக் கழக விடுதிகளிலுமே கழிந்திருக்கிறது. இன்றும் என்ன? தலைநகரின் சைவக் கடைகளிலே எனக்குச் தஞ்சம்.

பல்கலைக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு என்று நினைக்கிறேன். பொங்கலுக்கு முதல் ஞாயிற்றுக்கிழமை. காந்ருடச் சென்ற பொழுது, அவன் 'பொங்கலுக்கு வரும்படி அண்ணி கடிதம் எழுதியிருக்கிறது' என்றான்.

அப்பொழுது எனது உள்ளக் கொதிப்புஅவன் மீது ஆத்திரத்தையும் பொருமையையும் ஏற்படுத்தியது. 'என்னை வாவென்று அழைக்க இந்த வையத்தில் ஒரு உயிரில்லையே' என்று எனது மன நிலையையே வெளிப் படுத்தினேன்.

'சரி போகட்டும். முந்தியெல்லாம் நான் கல்லூரி விடுதியில் தங்கியிருக்கும் பொழுது நீ வீட்டிலிருந்து பலகாரம் கொண்டுவந்து தருவாயே, இப்பொழுது அதுகூட இல்லாமற்போய் விட்டதே' என்றேன்.

'சரி சரி சும்மா மனதை அலட்டிக் கொள்ளாதை இன்னும் இரண்டு வருடத்தில் உனக்கென்று ஒருத்தி வந்து எல்லாம் வகைவகையாய்ச் செய்து தருவாள்' என்றான்.

நான் மனைவியென்ற நிலையிலிருந்து வரும் அன்புக்காக இத்தனை வாஞ்சைப்படவில்லை. எனக்கு வேண்டியது ஒரு தங்கை. அதுவும் வயதில் இளையவளாக இருக்க வேண்டும்.

அவளை நான் அடிக்க வேண்டும். அவள் அழுவதைப் பார்த்து நான் அழுது கொண்டே சிரிக்க வேண்டுமடா. அவள் என்னுடன் கோபம் போட வேண்டும். நான் அவளிடம் போய் 'தங்கச்சி தங்கச்சி உன் அண்ணன் தானே ஆத்திரத்தில் தெரியாமல் அடித்து விட்டான். நீ இதுக்காகவோ கோவிக்கிருய்' என்று கெஞ்ச வேண்டும். அப்பொழுது அவள் அண்ணு என்று அழைத்துக் கொண்டு என் கழுத்தில் பிடித்துக் தொங்க வேண்டும். எடே இத்தகைய அன்பைத் தான்ரா நான் எதிர்பார்த்து ஏங்குகிறேன்.

'தொட்ட தெல்லாத்திற்கும் வீட்டிலை என்னுடன் போட்டி போட்டுக் கொண்டிருக்க எனக்கொரு தங்கை வேண்டுமடா. இதைத் தானடா, இத்தகைய அன்பைத் தானடா நான் கிடைக்கவில்லையென்று ஏங்குகிறேன்.'

'இந்தப் பாக்கியம் உனக்குக் கிடைக்கவில்லையென்றாலும், உனக்கு ஒரு அண்ணியாவது கிடைத்தாளடா, எனக்கு அந்தப் பாக்கியம் கூடக் கிடைக்கவில்லையே?'

'சரிசரி நீ பொங்கலுக்கு போய்விட்டு வரும் பொழுது எனக்குப் பலகாரமாவது கொண்டு வாடா!'

இவற்றையெல்லாம் கந்தப்பன் மறந்துவிடவில்லை. அவனே பல தடவை அவன் மனைவியிடம் கூறியிருக்கிறான்'உன் அண்ணனுக்கு சண்டை பிடிக்கிற தங்கச்சி தான் வேணுமாம்,' என்று இதை அவளே என்னிடம் பல தடவை கூறியிருக்கிறாள். இன்று அதே கந்தப்பன் 'குலத்தை கெடுக்க வந்த கோடாரிக் காம்பே' என்று கூறி விரட்டியிருக்கிறான்.

எத்தனை உரிமையுடன் பழகினேன். இன்று...மீண்டும்நான் அனுதையாக்கப்பட்டு விட்டேனு?

இல்லை. கந்தப்பன் உண்மையை உணருவான். ராதா நடந்ததை விபரமாகக் கூறுவாள். அவனே என்னைத் தேடி வருவான்.

'உன் தங்கை உனக்காக அழுது கொண்டிருக்கிறுள் வாடா திரு' என்றுகெஞ்சி மன்றுடி அழைப்பான்.

ஆனல்......

மீண்டும்நான் ராதாவை தங்கையென்ற தூய பாசத்துடன் அழைக்க முடியுமா? முடியவே முடியாது.

சந்தேகம்.அது ஒரு ஆட்கொல்லி. அது முளைவிட ஆரம்பித்தால், அனைத்தும் சர்வ நாசம்தான். இதற்கு விதிவிலக்கேயில்லை.

கந்தப்பனின் உள்ளத்தில் சந்தேகம் என்ற நச்சுப்பூடு நீண்ட நாட்களாகவே வளர்ந்து வந்திருக்கிறது. இன்று, அது தன் உண்மை உருவத்தை வெளிக்காட்டி விட்டது.

தூக்கம் வராத காரணத்தினுல் காற்று வேண்டிக் கொண்டு முற்றத்தில் இருந்த என்னை ராதா கண்டிருக்கிறுள். உடனே ஓடிவந்து 'அண்ணு உடம்புக்கு என்ன?' என்றுள், பதட்டத்துடன்.

'ஒன்றுமில்லை, தூக்கம் வராத காரணத்தினுல் வெளியில் வந்தேன்' என்று கூறினேன்.

அவள் இண்டலாகக் கேட்டாள் 'என்ன அண்ணு, என்னுடைய மகனுக்கு பெண் பெத்துக் கொடுக்கும் எண்ணமில்லையா? ஒரு அண்ணியை எப்பொழுது எனக்குத் தேடித்தரப் போகிருய்' என்றுள்.

இச் சந்தர்ப்பத்தில் 'அடி ராதா' என்று இரைந்து கத்தினுன் கந்தப்பன். ராதா எழுந்து சென்றுள். சிறிது நேரத்தில் ராதாவின் கதறல் கேட்டது. அவளின் முதுகில் கந்தப்பன் கைவரிசை காட்டுகிறுன் என்பதை உணர முடிந்தது.

குடும்பத் தகராற்றில் தலையிடுவான் ஏன் என்று எண்ணி அமைதியாக இருந்தேன். ஆனல், எனது பெயரை கந்தப்பன் பல தடவை உச்சரித்தான். ஆகவே தான் அவர்களின் அறையண்டை சென்று உரிமையுடன் 'என்னடாவாட்டா' என்றேன்.

'குலத்தை கெடுக்கவந்த கோடரிக் காம்பே வெட்கமில்லையா உனக்கு' என்றுன் கந்தப்பன்.

நிலைமையைப் புரிந்து கொள்ள நேரமாகவில்லை, உச்சிமீது வான் இடிந்து விழுவது போன்ற உணர்வுடன் வீட்டை விட்டுக் கிளம்பினேன்.

இத்தனை ஆண்டுகளாக என்னை நன்கு புரிந்து கொண்ட கந்தப்பனே சந்தேகப்பட்டு விட்டான். அவன் என்னிடம் எத்தனை மன்னிப்பையும் கேட்கலாம்.

ஆனல்......

நானும் ராதாவும் பழைய பாசத்துடன் பழக முடியுமா? எங்களுக்கிடையில் எப்பொழுதும் ஒரு பலமான திரையிருக்கவே செய்யும். இனி ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் அன்பு, பாசம் இயற்கை

(14-ம் பக்கம் பார்க்க)

**சந்தேகமென்ற ஆட்கொல்லி, தங்கை ஒருத்தியின் பாசத்திற்காக ஏங்கிய உடன் பிறவா [illegible] விரட்ட வைக்கிறது! அவன் குமுறல் இது!**

## இலக்கிய நடை

வங்க மொழி இலக்கியத்தில் ஓர் அபூர்வமான நிகழ்ச்சி. பங்கிம் சந்திரர் காலத்தில் அவரோடு வாழ்ந்து வந்த 'ரமேச சந்திர தத்தர்' என்பவர் தம்முடைய தாய்மொழி வங்கமாயிருந்தும், தாம் எழுதும் சிறந்த நூல்களை எல்லாம் ஆங்கிலத்திலேயே எழுதி வந்தார்.

'நீங்கள் வங்க மொழியிலேயே எழுதினுல் இன்னும் நன்ருக இருக்கும்,' என்று அவரிடம் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டிருந்தார் பங்கிம் சந்திரர்.

'நீங்கள் கூறுவது சரிதான். அனல் தாய்மொழியில் நன்ருக எழுதுவதற்குரிய இலக்கிய நடை எனக்கு வாய்க்காதே'— என்று வருத்தத்தோடு கூறினுர் ரமேச சந்திரர்.

அதைக் கேட்டுப் பங்கிம் சந்திரர் சிரித்தார்.

'ரமேச சந்திரரே!இலக்கிய நடை என்று தனியாக எதுவுமே இல்லை. உங்களைப் போல் உள்ளொளியும், ஞானமும் உள்ளவர்கள் எழுத ஆரம்பித்தாலே இலக்கிய நடை தானே வரும். நீங்கள் எப்படி எழுதுகிறீர்களோ அப்படி எழுதுவதுதான் இலக்கிய நடை என்று எல்லோரும் நினைக்கும்படி செய்யுங்கள். அது உங்களால் முடியும்'—என்று பதில் கூறினுர் பங்கிம் சந்திரர்.

## "கவிதை மஞ்சரி"

இந்நாட்டிலுள்ள கவிஞர்களையும் கவிதை ஆர்வமுள்ளவர்களையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இலங்கை வானெலியின் தமிழ்ப்பகுதி "கவிதை மஞ்சரி" என்று ஒரு நிகழ்ச்சியை மாதந்தோறும் ஒலிபரப்ப ஏற்பாடு செய்துள்ளது. இத்தொடரில் வரும் முதல் நிகழ்ச்சி 28-7-65 புதன் கிழமை இரவு 7.15 முதல் 8.00 மணிவரை ஒலிபரப்பாகும்.

எழுதும் ஆற்றலுள்ளவர்கள் அனைவரும் தாம் விரும்பும் பொருள் பற்றி ஐந்து நிமிடங்களுக்குக் குறையாமலும் பத்து நிமிடங்களுக்கு மேற்படாமலும் படிக்கத்தக்க கவிதைகளை எழுதி அவற்றை இலங்கை வானெலியின் தமிழ் நிகழ்ச்சி அதிகாரிக்கு 30.6.65க்கு முன்பாகவே அனுப்பிவைக்குமாறு கேட்டிருக்கிறுர்கள். ஒலிபரப்புக்குத் தகுதியான கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒலிபரப்பப்படுவதுடன், அவற்றிற்குச் சன்மானமும் வழங்கப்படுமென்று தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அங்கமெல்லாம் ஒரு நஞ்ச மச்சான்

ஏ.பி.வி. கோமஸ்

கருப்பண்ணன். ஆம். அவன்தான் நம் கதாநாயகன். அந்தக் கங்காணி முத்தம்மாவை சுற்றிவந்த அவன், ஏன்மௌனியானன் என்பதை முத்தம்மாளாலேயும் கண்டு கொள்ள முடியவில்லை. முத்தம்மாள் முன்னல் நடந்து செல்முள். இவள் விடு கிழக்கணக்கில் இருந்தது. அவளின் காதலனகிய கறுப்பண்ணனின் காம்பராவோ மேல்கணக்கில் இருந்தது. டிவிசனும் வேறுதான். ஆனல் கொஞ்சகாலமாகத்தான கறுப்பண்ணன் கிழ்க்கணக்குக்கு வந்து குடியேறியிருந்தான். எப்படிப் பார்த்தாலும் புதுப் பழக்கம்தான். மூன்றுமாதங்களுக்கு முன் முத்தம்மாளுக்கு கறுப்பண்ணன் முற்றுகத் தெரியாதவன்தான். மற்றபடி முறைப்பெண் போல் இருக்கிறது என்று என் அருமை நேயர்கள் எண்ணிவிடக் கூடாது. இந்த நேரத்தில்தான் நாமும் கொஞ்சம் பின்நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. ஆம். கறுப்பண்ணனின் வாழ்க்கையில் கொஞ்சம் ஏடுகளை முன்னுக்குப்புரட்ட வேண்டியுள்ளது.

கறுப்பண்ணனுக்கு சுமார் முப்பது வயதிருக்கும். கங்காணி என்றவுடன் எதோ நரைத்த மீசைக்காரன் என்று நினைத்துவிட வேண்டாம். இளவயதிலேயே அவன் கங்காணயானதற்கும் காரணம் உண்டு. அவனின் தநதையாகிய கங்காணி காளிமுத்து அந்த பன்வத்தைத் தோட்டத்தில் சுமார் முப்பது ஆண்டுகள் 'சர்விஸ்' உள்ளவராகவிருந்து சென்ற வருடம் தான் மண்டையைப்போட்டார். அந்த அதிர்ஷடத்தில் தான் கறுப்பண்ணன் கங்காணியானன். அவன் தாய் ஒரு காலத்தில், அவன் கண்டானே முத்தம்மா அவளைப் போல் வேலை செய்தவள் தான். பேரதான் கருப்பாயி. ஆனல் பார்ப்பதற்கு சிவப்பாய் இலட்சணமாயிருப்பாள். அப்படிப்பட்டவள் கூடைமேலே கூடைவைத்து கொழுந்து பறிக்கப் போகிறபோது, கண்டு கிறுகிறுக்காதிருந்திருக்குமா கங்காணி காளிமுத்துவின வாலிப உள்ளம்! ஏன்? ஒரு நாள் அவள் தனிமையில் பேசும்போது கேட்டாரே இப்படி......

கூடமேல கூடவச்சி
கொழுந்தெடுக்கப்
போற பெண்ணே
கூடய இறக்கி வச்சி
குளிர்நத வார்த்தை
சொல்லிப் போடி...

இதைக்கேட்ட அந்தக் கருப்பாயி கண் கொட்டாமல் அவரைப் பார்த்தாள். 'தன் நிலை இந்த ஆம்பிளைக்குத் தெரியாதுபோலிருக்கிறது?' என்று எண்ணினள். ஆம். அந்நேரம் அவள் மணமாகியிருந்தாள். தோட்டத்துக்குப் புதிதாக வந்திருந்தாள். கணவனே தன் தாய் நாடாகிய இந்தியாவில் இருந்தான். அவனுக்குஅங்கு நல்ல வேலையிருந்தது. அங்கு மணல்காடு என்னும் பகுதியின் கடற்கரையில் சிப்பிகளைப் பொறுக்கியெடுத்து, சூளையிலிட்டு அவித்து சுண்ணும்பு செய்து விற்று வந்தான். ஆகையால், அவன் சென்ற இரண்டு ஆண்டுகளாக இந்தப் பக்கமே வரவில்லைதான். கருப்பாயிக்கும் ஏதோ போல் தான் இருந்தது. இந்த நேரத்தில் இந்த விளக்கம் எல்லாம் இவனிடம் ஏன் சொல்வான் என்று நினைத்தாள். நினைத்தவள் தொடங்குவாள் இப்படி......

கூடையை இறக்க
மாட்டேன்
குளிர்ந்த வார்த்தை
சொல்ல மாட்டேன்
கொண்டக் கணவன்
கண்டால்
கோப்பிக் கத்தியை
தூக்கி வருவான்...

என்றாள்.

'ஓ...ஓ...இவள் மணமானவள என்று அறிந்துகொண்டார் கங்காணி காளிமுத்து. சரி இருக்கட்டும்', என்று அன்றையப் பாட்டுக்கு ஒன்றும் பேசவில்லை. ஆனல்... காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. மூன்று ஆண்டுகள் முற்றுக முடிவடைந்துவிட்டன. ஆனல் கருப்பாயின் கணவனைப் பற்றிய ஒரு செய்தியுமே இல்லாமல் போயிற்று. அவள மனமும் கொஞ்சம் கொஞ்சமாக மாறியது. வாலிப உடலும் உள்ளமும் எத்தனை நாளைக்குத்தான் தாகுப்பிடிக்கும்? ஏதோ ஒன்றை அவள் ஏங்கித்தவித்தாள்.ஆம். அவளே கொஞ்சம் கொஞ்சமாக பாலை ஒழுக விட்டாள; பன்னீரை சிந்த விட்டாள். ஆம். தன் கணவனை மறக்கத் தொடங்கினள். கல்யாண நேரத்தில் ஊட்டப்பட்ட பாலை மறந்தாள்; பன்னீரைத் துறந்தாள். பின்என்ன செய்தாள்? வாசமுள்ள புது சவுக்காரமிருந்தது அவளிடம் இப்போது. அதை வந்தவருக்குத் தானமிடத் தொடங்கினள். ஆமாம். அவளே சொல்கிருள இப்படி. இதோ அவள் வாயாலேயே சொல்லட்டுமே......

பாலை ஒழுக விட்டேன்
பன்னீரைச்சிந்தவிட்டேன்
வாசமுள்ளசவுக்காரத்தை
வந்தவர்க்குத்
தானமிட்டேன்......

ஆகா. தான் செய்யும் அந்தக் காரியத்தை எவ்வளவு லாவகமாகச் சொல்லுகிருள்பார்த்திர்களா? இதற்கு மேல் நடந்ததை நான் சொல்லவேண்டுமா என்ன? ஆம். கங்காணி காளிமுத்துவும், கருப்பாயியும்தான நம் கதாநாயகர் 'கஙகாணியின்' தாய் தந்தையர்கள் ஆனர்கள்.

தந்தை சென்ற வழியில் தனயனும் செலல வேண்டும் என்ற நியதி உண்டா என்ன, இல்லையே! வேலை விசயத்தில்தான் அப்படியென்றல் இந்த விசயத்திலும் அப்படியெ இருக்க வேண்டுமா என்ன? இல்லை ஆனல், இங்குதான் கதை கொஞ்சம் மாறியிருக்கிறது. ஆச்சரியப்பட வேண்டாம். நம் கங்காணி காளிமுத்துவின் மகன் கங்காணி கறுப்பண்ணன் கல்யாணமானவன். அவன் கட்டியிருந்த மனைவியின் பெயர் மீனுட்சி. இந்த விசயம் நமக்கு இப்பொழுது தெரியும். ஆனல் நம் கதாநாயகி முத்தம்மாவுக்கு இந்த விசயம் இன்னும் தெரியாது. கங்காணி கறுப்பண்ணனின் கதையைச் சொல்லப்போனல் அது பெரிய கதை போங்கள். என்ன செய்வது சொல்லித்தானே ஆகவேண்டும். அதாவது.......

பாட்டுக்கு பணியலயம்
பந்தடிக்க மேட்டு லயம்
பேச்சிக்கு பீலிக்கரை
வாச்சினதயா
மன்னனுக்கு......

ஆம். கருங்கச் சொன்னல் கறுப்பண்ணனின் வாழ்க்கை மேற் சொன்னவாறு ஓடிக்கொண்டிருந்தது. அவன் தாயும் தந்தையும் வேலை செய்ய அவன் வாலிபப்பருவம் அடைந்த காலத்தில் இப்படித்தான் நடந்து கொண்டான். காலையில் எழும்புவான், தன் அன்றுடக கடமைகளை முடிப்பான். பின் பணிய லயத்துக்குப் போய்விடுவான். அங்கு அவனின் வயதொத்த இன்னும் இரண்டு நண்பர்கள் இருந்தனர். அவர்கள் பெயாகள் அங்கப்பன், ராஜவேல் இருவருமே கலைகளில் கொஞ்சம் கரிசனை காட்டியவாகள். இந்த மூன்று பேரும் ஒன்ருகச் சேர்ந்துவிட்டால் ஒரே பாட்டுத்தான். ஆம். எல்லாம் சினிமா பாட்டுகளாகத்தான் பாடித்தள்ளுவார்கள். காலைப்பொழுது இப்படிக்கழியும். பகலைக்குவநது வீட்டில் சாப்பிடுவான். பின் மறுபடியும் வெளியேறிவிடுவான். மாலையில் அவன் போவது மேட்டுலயத்துக்கு. அங்குபோய், சில வாலிபர்கள்பந்தடிப்பார்களே. அவர்களுடன் சேர்ந்து பந்தடித்துவிட்டு...முகங் கைகால்கழுவ வேண்டுமே. நல்ல நேரம் பார்த்து பீலிக்கரைக்குச் செல்லுவான். ஆம். நல்ல நேரம்தான். ஏனெனில், அவன் சரியாக வேலைவிட்டுப் பெண்கள் தங்கள் கைகால் சுத்தம் செய்து கொள்ள, குளிக்க பீலிக்கரைக்கு வரும்நேரம்பார்த்துத்தான் அங்கு போவான். பீலிக்கரைக்கு அந்நேரம் போனல் சும்மாவாயிருப்பான். ஒரே பேச்சும் கூப்பாடும்தான். அங்கு வருகிற பெணகள், குமரிகள், ஆணகள், வாலபாகள் யாவருடனும் அளவளாவுவான், 'கங்காணியின் மகன என்றவுடன் கணிசமான அளவு மரியாதை கொடுக்கத்தான் செய்தார்கள். ஆகையால், இவனும் மன்னன்போல உலாவந்தான். இப்படிவரும் போதுதான் ஒரு நாள்.

மங்கிய மாலை நேரம். இவன் பாடிக்கொண்டு வருகிருன். ஒரு மெல்லிடையாள் குளித்துவிட்டு அவன் முன்னல் செல்கிருள்......

பொட்டுமேலே
பொட்டு வச்சி
பொட்டலிலே
போறத் தங்கம்
பொட்டலிலே
பெஞ்ச தண்ணி உன்
பொட்டுருக பெய்யலியே.

ஆமாம். உண்மைதான். அவள் அந்தப் பீலிக்கரையில் குளித்துவிட்டு, சாயச்சீலை தன் வாளிப்பான உடலில் ஒட்டிக்கொண்டு உறவாட, அவன் வாலிப மனதைப் பிடித்துத் தின்ன, சிங்கார நடை நடந்து போனள். 'அப்படியென்றல் அந்தப் பொட்டு எப்படி இன்னும் அழியாமல் இருக்கிறது. [illegible] உம். நேரிலேயே கேட்டுவிட்டான். ஆமாம். ஒவ்வொரு நாளும் தான் குளிக்க வரும் போது அவள் பொட்டுத்தூளும் கையில் கொண்டு வருவாள் என்பதை இவ் வாலிபன் எப்படி அறிவான். அறிந்திருந்தாலும், அவளுடன் பேசுவதற்கு ஏதாவது ஒரு காரணம் வேண்டும் தானே. சரி, கேள்விதான் கேட்டாகிவிட்டதே. பதில் இல்லையே! அவளோ...புன்னகை பூத்துக்கொண்டு, நாணிக் கோணிக்கொண்டு நடக்கத் தொடங்கினள். அப்படி நடக்கும்போது சில வளைவுகளில்வளைந்துவளைந்து செல்ல வேண்டியிருந்தது. அப்படிச் செல்லும்போது அவளின் வளிவுடலின்வளைவுகள் அவன் இதயத்தை ஈர்த்தது. அவள் கட்டியிருந்த சேலையும் அங்கும் இங்கும் இழுபட்டு அசைந்து ஆலவட்டம் போட்டது. மறுபடியும் பேச்சு கொடுக்கப் பார்த்தான். அவன் சொல்லுவான்......

வட்ட வட்ட பாதையிலே
வளைஞ்சி வளைஞ்சி
போகையிலே
யார் கொடுத்த சாயச்சீலை
ஆல வட்டம் போடுதடி...

ஆமாம். ஒரே கல்லில் இரண்டு இளங்கனிகளை விழ்த்தப்பார்த்தான் அவன். பேச்சுக் கொடுக்கும் அதே நேரத்தில், அவள் மணமானவளா என்பதை தான் சேலை ஒன்று வாங்கித் தரலாமா? என்றும் கேட்கும் தொனியில் சொன்னன். அதாவது, தன் காதலைவெளியிட்டான். அப்பொழுது அவளுக்குப் சூடு பிடித்தது. கங்காணி மகன் கிடைப்பது 'லேசா' என்ன? அவன் கேட்ட கேள்வியின் உள்ளார்த்தத்தை நன்கு அறிந்து கொண்டாள் அவள். 'இதற்குத் தகுந்த பதில் சொல்ல வேண்டுமே. தான் ஒப்புக்கொள்கிறேன் என்பதை சொல்லாமல் சொல்ல வேண்டுமே. எப்படிச் சொல்வதென்று ஒரு முறை எண்ணினள். அத்தோடு இத்தனை காலமும் ஒரு அன்னியனிடமும் பேச்சு வைத்துக்கொண்டதுமில்லை என்பதையும் வெளியிட நினைத்தாள. தான் தனியாக மிகமிகக் கஷ்டப்பாடு பட வேண்டியிருக்கிறது. இந்தப் பாட்டிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும்' என்றும் தொனிக்கும்படிச் சொல்ல எண்ணிச் சொல்வாள்......

யாரும் கொடுக்க வில்லை
அன்னியரிடம்
சம்பாரிக்கயில்லை
கஷ்டப்பாடு
பட்டல்லோ
கட்டினன்டா சாயச்சேலை.

அவனுக்கும் விளங்கிவிட்டது. மெல்ல புன்னகை செய்தான். அவன் எதிர் பார்த்த பதில் கிடைத்து விட்டது. விடுவானு என்ன? மீண்டும் தொடங்கினன். தான் ஒரு கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினன். அவளை என்னென்ன விதத்தில் புகழ்வது என்பதே அவன் எண்ணமும் கருத்துமாயிற்று. நான் ஏன் சொல்வான். அவன் சொல்வதை நீங்களே கேளுங்களேன்...

சின்ன சின்ன
வெற்றிலையாம்
செட்டிக்கடை
மிட்டாயாம்
மார்க்கட்டு
மரிக்கொழுந்தாம்
மணக்குதடி
கொண்டையிலே

ஆகா. எவ்வளவுஅழகாகத் தன் காதற்கிழத்தியை வர்ணிக்கிருன் பாருங்கள். அவனுக்கு நன்கு பரிட்சையமான பொருட்களை ஆதாரமாக வைத்துக்கொண்டே சொல்வது எவ்வளவு அழகு மிளிர்வதாய் உள்ளது. அவளும் இதற்கு ஏதாவது சொல்லி அவனை சந்தோசப் படுத்த வேண்டும் என்று நினைத்தாள். அப்பொழுது அவனின் அழகு அவள் கண் முன் நிழலாடியது. அவனின் சுருண்ட மயிர் அவளை நன்ருகக் கவாந்திருநதது. அவனின் அந்த கூர்மையான பார்வை. ஐயோ! எத்தனை நாள் அவன் பீலிக்கரையிலிருந்து தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதைப் பாாத்திருக்கிருள். அநநேரமெல்லாம் ஏதோ ஒருவித மின்சார உணர்ச்சித் தன் உடலெங்கும் ஒடுவதுபோல் உணாந்திருக்கிருளல்லவா? அவனின் வெற்றிலை போட்டதினல் கறையேறிப் போயிருந்த அந்தப் பல்வரிசையில ஏதோ ஒரு கவர்ச்சியிருப்பதை அவள் உணர்ந்து தானே இருந்தாள். ஆக அவளும் வாயெடுத்தாள் சொல்வதற்கு......

உருண்ட முடி அழகா
உல்லாச கண்ணழகா
ஈச்சங்காய் பல்லழகா
எம் மன்னு மன்னவரே.

ஆமாம். இந்த ராணிக்கு ஏற்ற மன்னன் நீதான் என்பதை வற்புறுத்தினள் அந்தத் தோட்டத்துத் தோகை மயிலாள். அவன் என்ன சும்மா விடுவானு? தனிமையான நேரம். குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. மாலைப் பொழுது.மங்கலான முன்னிரவு நேரம் என்றுகூட சொல்லலாம். அந்நேரத்தில் அவன் எதிரே அவனை இத்தனைக் காலம் மயக்கிய மங்கை நல்லாள். நிற்கிருள் தனிமையாக விருப்பத்தை வெளியிட்டுவிட்டு. அவன் அவளை நெருங்கினன். அந்நேரம்......




'மாய ஜோதி' ஊது பத்திகள்

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!

ஏன்?

★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்ரீஸ்.
128,3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றோ அழிய வேண்டிய உலகம் இன்றும் இருப்பதேன்?

## பண்புடையாளர் வாழ்வதுதான் என்கிறார் திருவள்ளுவர்

பட்டப்பகல், பலர் நடமாடும் தெரு. தீப்பந்தத்துடன் காணப்பட்டான் டயாஜினஸ். 'பகற்குருடா?' எனக்கேட்டனர் குறும்புக்காரர். 'நான் மனிதனைத் தேடியலைகிறேன்!' என்றான் டயாஜினஸ் அமைதியாக. மக்கள் பண்பிழந்து விலங்குகளாக வாழ்வதை அவன் குத்திக் காட்டியதைக் கேட்டு வாயடைத்து விட்டனர் குறும்புக்காரர்.

### மனிதன் மாறவில்லை

இன்றும்தான் நாம் மனிதரைத் தேடியலைய வேண்டியுள்ளது. 'மனிதன் பறவையைப் போல 'பறக்கக்' கற்றுக் கொண்டான்; மீனைப் போல நீரினூடே நீந்தப் பழகி விட்டான்; ஆனால் மனிதன் இன்னும் மனிதனாக வாழப் பழகவில்லையே!' என்றுதானே' இன்றைய தலைசிறந்த தத்துவப் பெரியார் டாக்டர் இராதாகிருஷ்ணனும் கூறுகின்றார்.

பல துறைகளிலும் வளர்ந்து விட்ட நாம் சமூக வாழ்விற்கு அடிப்படையான குணநலனை வளர்க்கவில்லை. கல்விகேள்விகளால் அறிவை வளர்த்தால் மட்டும் போதாது. 'பிறிதின் நோய் தன் நோய் போலப் போற்றி' வாழ எமது மனத்தைப் பண்படுத்த வேண்டும்.

### ஆடைவரை பண்பு

பண்பென்றால் நாகரிகமெனக்கருதி—அந்த நாகரிகத்திற்குக் குறுகிய பொருள் கொடுத்து— மயங்குகின்றோம். நடை,உடை, பாவனைகளைப் பண்படுத்திப் புதிய பாணிகளைக் கைக்கொள்வதா பண்பு? பெயக்கண்டும் நஞ்சுண்டமைவதே நாகரிகம் என்றார் வள்ளுவர். 'நம் நாகரிகம் நமது உடலின் தோல்வரை கூடச் செல்வதில்லை; அது பெரும் பாலும் நம் ஆடையுடன் நின்று விடுகின்றது,' என ஆரவாரப் போலி நாகரிகச் சீர்கேட்டைக் கண்டிக்கிறார் தூய திரு. டபிள்யு. ஆர். இங்க்



### பேராசிரியர் மு. சிவானந்தம் எம். ஏ.

என்னும் மேலைத்தேயப் பெருமகனார்.

### பாடறிந்து ஒழுகுவதே பண்பு

பண்பென்றால் என்ன? பண்புடைமை பற்றி வள்ளுவரின் குறள்களை விளக்க வந்த பரிமேலழகர் 'பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்' என்ற கலித்தொகைப் பாடலைத் துணைக்கு அழைக்கின்றார். சமூகத்திலே நாம் ஏனைய மக்களோடு இணங்கி வாழப் பழகவேண்டும். எமது கருத்துக்கு மாறானவர்கள் மீது கூடப் பிரிவு காட்டுவது தான் பண்பு. முதலையும் மூர்க்கனும் கொண்டதை விடா. எதிலும் தாமே சரியென்று, எடுத்ததற்கெல்லாம் சட்டம் பேசிக் கொண்டு திரிபவர்கள் மனப் பண்பை வளர்க்கத் தவறுவதால் எவ்வளவோ இடர்ப்பாடுகளுக்குள்ளாவதை நாம் காண்கிறோமல்லவா? இவர்களை மக்கள் வெறுத்தொதுக்குகிறார்கள். இத்தகையவர்களது உணர்ச்சியற்ற வாழ்வை மரவாழ்க்கை என்கிறார் வள்ளுவர்

'அரம் போலும்
கூர்மையரேனும் மரம்
போல்வர்
மக்கட்பண்பில்லாதவர்'

### வல்லவர்கள் பண்பாளர்களா?

வல்லவர்கள் வாழக்கற்றுக் கொள்ளாவிட்டால் நல்லவர்கள் அல்லர். சிலர் ஒரு சில துறைகளிலே அரம் போலும் கூர்மையான அறிவை வளர்த்துத் திறமைசாலிகளாகின்றனர். தமது நிலையை எண்ணிப் பெருமைப் படுகின்றனர். சிறுமைதான் தன்னை வியந்து அணியுமாம்! உலகத்தோடு ஒட்ட வாழத் தெரியாவிட்டால், இவர்களையும் கல்லாதவர்களாகத்தான் கருத வேண்டும். சட்டத்திலும், அரசியலும், பொருளாதாரத்திலும் துறைபோகக் கற்ற நிபுணர்கள், நாட்டு மக்களின் இயைபறிந்து தமது மனவளத்தை மாற்றுமையினால், அவர்களால் வெறுத்தொதுக்கப்படுவதை நாம் காண்கிறோம்.

### பிறர் நலம் பேணல்

பண்பை வளர்க்க வேண்டுமென்றால் அன்பை வளர்க்க வேண்டும். அன்பு வளர்த்தால் தன்னலம் மறும்.

'புகழ் எனின் உயிரும்
கொடுக்குவர் பழி எனின்
உலகுடன் பெறினும்
கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி
அனையராகித்
தமக்கென முயலா
நோன்றாள்.

பிறர்க்கென முயலுநர் உண்மையானே' எனப் பண்டைத் தமிழர் பிறர் நலம் பேணும் பண்பு பற்றிப் புறநானூறு பேசுகின்றது. இன்றோ தன்னலம் அறுக்கும் தியாகசீலர்கள் அருகிவிட்டனர். உலகிலே போட்டியும், பொறாமையும், பூசலும், போர்வெறியும் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன.

'பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே!' எனப் பாரதியார் பாடிய பிறகுகூட நம்மில்எத்தனைபேர்—எதிரிகளையல்ல—எம்மோடு கூட இருப்பவர்களை நேசிக்கிறோம்?

### பஞ்சசீலத்தின் அடிப்படை பண்பே

போர்வெறியால் உலகம் என்றோ அழிந்திருக்கும். உலகத்தைச் சுக்கு நூறாக்கி, சுட்டு நீறாக்கிவிடவல்ல அணுக்குண்டுகள் வல்லரசுகள் கையிலேயுள்ளன; செஞ்சீனு போன்ற புதிய வல்லரசுகள்அத்தகைய அணுவாயுதங்களைப் பரிசோதித்துக் கொண்டிருக்கின்றன. எனினும் ஏதோ நாம் தப்பிப் பிழைத்துக் கொண்டிருக்கின்றோம். இனியும் வாழ்வோம் என்ற நம்பிக்கை ஒளி எங்கோ பளிச்சிடுகின்றது. அந்த ஒளி எது? இதோ அது.

'பண்புடையார்ப்பட் டு
உண்டுலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வதுமன்'

இது வள்ளுவர் தரும் நம்பிக்கை ஒளி. அங்கொன்று இங்கொன்றாக, ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் இன்னும் இருப்பதாலேயே உலகம் இயங்குகின்றது. அருளாளர்கள் அவ்வப்போது தோன்றி அறக்குரல் எழுப்பிப் பண்பை வளர்க்கிறார்கள். அரசியல் வானிலே சில தாரகைகள் தோன்றி உலக அமைதியைப் பேணிக் காக்கின்றன.

கொள்கை எதுவாயினும் கூடி வாழ்வோம் என்ற அடிப்படையில் எழுந்தது தானே நேரு வகுத்த பஞ்சசீலம்? குடும்பத்திலே கணவன் மனைவி விட்டுக் கொடுத்து வாழ்வது போல, சமூகத்திலே பல நெறியாளரும், பல மொழியாளரும், பல இனத்தவர்களும் விட்டுக் கொடுத்து வாழ்வது போல, உலகிலும், வெவ்வேறு கொள்கைகளைப் பின்பற்றும் நாடுகளும் ஏன் நெருக்கடியின்றி வாழ முடியா எனக் கேள்வி எழுப்பினார் நேரு. அசோகனும் காந்தியும் வாழ்ந்த பாரதத்திலே தோன்றிய நேருவிடம் வேறெந்தக் கேள்வி பிறந்திருக்கும்?

### பண்பைப் பேணி மனிதராவோம்

ஜெர்மனியைக் கட்டி எழுப்பி ஐக்கியத் திருநாடாக்கிய பிஸ்மார்க்கிடம், பண்புடையாளன் யார் என வினவினார்கள். 'தன்னை அறியாமற் கூடப் பிறரைப் புண்படுத்தாதவனே பண்புடையாளன்' என்றான் அம்மாவீரன். பிறரைப் புண்படுத்தாமல் இருப்பது மாத்திரமல்ல, பகைவனிடத்தும் அன்பு கொண்டு அவன் புண்போக்குவதே பண்பென்கிறார் வள்ளுவர். எனவேநாமும் குறள் காட்டும் பண்பை வளர்த்து வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோம்; மனிதராவோம்.

தற்செயலாக டயாஜினஸ் உயிர்த்தெழுந்து, பகலிலே விளக்கேற்றி மனிதரைத் தேடி வந்தால் வள்ளுவர் வழி நிற்போர் எதிர்ப்பட்டும், விளக்கை அணைத்து விட்டு, மனிதரைக் கண்டேன் என்ற மகிழ்ச்சியோடு அவன் அமைதி பெறுவான்.

---

## களவியலையும்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லற வாழ்வில் ஈடுபட்டதும் தலைவி தனது உயிரை நாயகனிடம் ஒப்படைத்து விடுகிறாள். நாயகன் தனது உடலை அவளிடம் பாதுகாப்பாக்கி விடுகிறான். நாயகி உயிரை நாயகனும், அவன் உடலை அவளும் பாதுகாக்க வேண்டிய பெரிய பொறுப்புகள் அவர்களுக்கு ஏற்படுகிறது. நாயகி உயிரற்ற உடம்பாகிறாள், தலைவன் உடம்பற்ற உயிராகிறான். இருவரும் தனித்தியங்கஇயலாத ஒரு நிலை. இந்நிலையிலேயே தலைவன் உடலாகவும், தலைவி உயிராகவும் சேர்ந்து இயங்கும் கட்டுப்பாடான இல்லற வாழ்வு உருப்பெறுகிறது. எவ்வளவு பெரிய உண்மை—இந்த உண்மையை விளக்கும் குறள் இதோ—

"உடம்பொடு
உயிரிடையன்ன
மற்று அன்ன
மடந்தையொடு
எம்மிடை நட்பு"

---

## உத்தியோக...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மரசுக் கட்சியின் கோரிக்கையை வழங்குவதாகும்.

'இப்பொழுது வட பகுதியிலுள்ள இராணுவத்தினர், கந்திக்கம்பி முதலியவற்றை அகற்றுவதில் ஈடுபட்டுள்ளனர் எனக் காங்கேசன்துறைச் செய்தியொன்று கூறுகிறது.

'இந்தியர்களின் கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்காகவே சிங்கள இராணுவம் வடக்கே நிறுத்தப்பட்டிருந்தது.

'இப்பொழுது 'கள்ளத் தோணிகளின்' வருகை அதிகரித்திருக்கிறதென்றும், இங்கிருந்து அனுப்பப்பட்ட கள்ளத் தோணிகளும் "அப்பே ஆண்டுவ" வந்துவிட்டதென்று கூறிக் கொண்டு திரும்பி வருகிறார்களென்றும் ஓர் இராணுவ அதிகாரி கூறினார்."

---

# தமிழ்மறைக் கழகத்தின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சி நிரலும் அச்சிடப் பெற்றது. ஆனால் வகுப்புக் கலகம் காரணமாக மாநாடு நடைபெறவில்லை.

### ஐந்தாவது மாநாடு

ஐந்தாவது திருக்குறள் மாநாடும் நூற்காட்சியும்; கொழும்பில் உள்ள பல சங்கங்களின் ஆதரவில் 1957ல் கொழும்பு விவேகானந்தா சபை மண்டபத்தில் நடைபெற்றது. தமிழரசுக் கழகத் தலைவர் மா. பொ. சிவஞானகிராமணியார் அவர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்களும் பேராசியர் திரு. க. பெருமாள் அவர்களும் சென்னை மகளிர் கிருத்துவக் கல்லூரிப் பேராசிரியை மாசிலாமணியம்மைமார் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.

மாநாட்டைத் திரு. க. ச. அருணந்தி அவர்கள் தொடக்கி வைத்தார்கள் நூற்காட்சியை கந்தையா வைத்தியநாதன் திறந்து வைத்தார், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினர்.

### நான்காவது மாநாடு

நான்காவது மாநாடு 1956ல் வட-இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் ஆதரவில் வண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இம் மாநாட்டில் தமிழ் நாட்டுப் பேராசியர்கள் வித்துவான் திரு. மு. இராசக்கண்ணனார், வித்துவான் ...ரகுநாதர், வித்துவான் மறை. திருநாவுக்கரசு என்போர் பங்கு பற்றி உரையாற்றினர் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் செ. இராசதுரை 'தேடக் கிடைத்த செல்வம்' எனும் பொருள் பற்றி உரையாற்றி சிறப்பித்தார். மாநாட்டை ஆசிரியமணி திரு. ம. வைத்திலிங்கம் அவர்கள் தொடக்கி வைத்தார்கள்.

### மூன்றாவது மாநாடு

மூன்றாவது மாநாடு 1955ல் அனுராதபுரத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் சிறப்பாக நடைபெற்றது. இம் மாநாட்டில் தமிழ் நாட்டுப் பேரறிஞர்களாகிய திரு. மா. பொ. சிவஞானகிராமணியார் அவர்களும் மாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்களும் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

### இரண்டாவது மாநாடு

இரண்டாவது திருக்குறள் மாநாடு நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் இந்து வாலிபர் சங்க ஆதரவில் 1954 ம் ஆண்டில் நடைபெற்றது. தமிழ்ப்பேராசிரியர் ஆ. முத்துசிவன் அவர்களும் வித்துவான் திரு. கு. அருணாசலக்கவுண்டர் அவர்களும், தர்மரத்தின தேரோ அவர்களும் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும் இம் மாநாட்டில் கலந்து உரையாற்றிச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### முதலாவது மாநாடு

1953ல் முதலாவது திருக்குறள் மாநாடு திருகோணமலை இந்துக் கல்லூரியில் திருகோணமலை திருவள்ளுவர் கழக ஆதரவில் நடைபெற்றது. இச்சிறப்பான முதல் மாநாட்டில் தமிழக அறிஞர்களாகிய அ. ச. ஞானசம்பந்தன், சோம. லெ. இலக்குமணச் செட்டியார், மா. பொ. சிவஞானகிராமணியார் ஆகியோர் பங்கு கொண்டு சொற்பொழிவாற்றினார்கள். திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந. இ. இராசவரோதயம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். சச்சிதானந்த யோகி அவர்களும், கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களும், புலவர்மணி அ. பெரியதம்பிப் பிள்ளை அவர்களும் மாநாட்டில் கலந்து சொற்பொழிவாற்றினார்கள்.

### சிறப்பாளர்கள்

இம் மாநாடுகள் யாவற்றிற்கும் தமிழ் மறைக் கழகத் தலைவரும் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். தமிழ் மறைக் கழக அலுவலாளர்களாகிய வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், வித்துவான் இ. சி. சோதிநாதன், பண்டிதர் மு. ஆறுமுகம், பண்டிதர் க. மயில்வாகனம் முதலானோரும் இம்மாநாடுகளிற் பங்கு கொண்டு சிறப்பித்துள்ளனர். திருவாட்டிபரம் சோதி இராசமாணிக்கம் அவர்கள் பல மாநாடுகளில் திருக்குறட் பாடல்களை இசையுடன் பாடி தொண்டாற்றியுள்ளார்.

-இ. சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சந்திரபாபுவுக்கு நாகேஷ் பாராட்டு



'சினிமாவில் நடிக்க வருகிற நடிகர்களோ, நடிகைகளோ பெரும்பாலும் தான் கலைச்சேவை செய்யவே சினிமா உலகிற்கு வந்ததாகவும், கலைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டதாகவும் கூறுவார்கள். ஆனால் விதிவிலக்காக என்னை போன்ற சிலர் உண்மையைக் கூறுவதுமுண்டு. நம் நகைச்சுவை நடிகர்களில் சந்திரபாபு மிகப்பெரிய நடிகர். அவரைப் போல் நடிக்க யாராலும் 'முடியாது' என்று நகைச்சுவை நடிகர் நாகேஷ் கூறியுள்ளார்.

தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர் சங்கத்தினர் நடிகர் நாகேசுக்கு கொடுத்த வரவேற்பின் போது ஒளிவு மறைவு இல்லாமல் தான் பணத்திற்காகவே நடிப்பதாகக் கூறினர்.

கலைக்காக நடிக்க தமக்குத் தெரியும் என்றாலும் அது தம்மைப் பயன் படுத்திக் கொள்ளும் தயாரிப்பாளரைப் பொறுத்தது என்றும், சிறந்த நடிப்பு வேண்டும், நகைச்சுவை சிறப்பாக இருக்க வேண்டுமென்றாலும் அதற்குப் போதிய சந்தர்ப்பத்தையும், ஊக்கத்தையும் கொடுக்க வேண்டியவர் படத் தயாரிப்பவர்தான் என்றும் சிரிப்பு நடிகர் கருத்துத் தெரிவித்தார்.

புகையிரதப் பகுதியில் வேலை பார்த்த நாகேஷ் நடிக்க ஆரம்பித்ததே வேடிக்கையான கதை. அவருக்கு நடிக்க வேண்டுமென்ற ஆர்வமோ, நடிகனாக வேண்டும் என்ற ஆசையோ கொஞ்சம் கூட இருக்கவில்லையாம்.

ஒரு நாள் நாடக ஒத்திகை ஒன்றை பார்க்க நேரிட்டதாம். வசனத்தைச்சொல்லி எப்படி நடிப்பது என்று ஒருவருக்கு நாடகாசிரியர் சொல்லிக் கொடுக்கும் கண்றாவியைப் பார்க்க அவருக்கு இருப்புக் கொள்ளவில்லையாம். அதனால் அந்த நாடகாசிரியரிடம் சென்று, 'அப்படி இல்லீங்க; நான் நடித்துக் காட்டுகிறேன்' என்றாராம்.

ஆசிரியருக்குக் கோபம் வராமல் இருக்குமா? 'நீ நடிப்பதா? நீயும் உன்......' என்று அவர் நாகேசை அவமானப்படுத்தி அனுப்பி விட்டாராம்.

அந்தச் சம்பவத்திலிருந்துதான் தனக்கு நடிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதாகவும், அதன் பிறகு புகையிரத ஊழியர்கள் நடாத்திய நாடகத்தில் ஒரே ஒரு காட்சியில் வரும் 'ஐயா வயிறு வலிக்குதே' என்று அலறும் நோயாளி வேடத்தில் நடித்ததாகவும், அதன் பிறகு சென்னையில் எங்கெங்கு நாடகம்நடந்ததோ, அந்த நாடகங்களில் எல்லாம் வேடம் கேட்டு நடித்ததாகவும் நாகேஷ் கூறினர்.

நாகேஷ் மேலும் கூறியதாவது: 'சில படங்களில் நான் பேசும் வசனங்களும், நடிப்பும் அபத்தமாக இருக்கிறதென்று கூறுகின்றனர்கள். அவற்றிற்கு நான் பொறுப்பாளியல்ல. வசனகர்த்தாவும், இயக்குனருமே பொறுப்பாளிகள். அன்றாடம் கிடைக்கக் கூடிய இயற்கையான நகைச்சுவை, திரைப்பட செயற்கை நகைச்சுவையைவிட மேலானது.'

'நம் நாட்டு நகைச்சுவை நடிகர்களில் சந்திரபாபு மிகப் பெரிய நடிகர். அவரைப் போல் நடிக்கயாராலும் முடியாது.

'சர்வர் சுந்தரம்' போன்று முக்கிய பாத்திரமேற்று நடிக்கும் படங்களில் நடிக்க எனக்கு மிகவும் ஆவல்.'

சினிமாவில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்த போது புகையிரதப் பகுதி உத்தியோகத்தை விட்டு விட்டு ஒரு சாண் வயிற்றுக்குப் பட்டபாட்டை அவர் நகைச்சுவையுடன் கூறினர்.

## திருமலையில் வில்லிசை

திருமலை முத்துக்குமார சுவாமி ஆலயத்தில் மட்டு நகர் மாஸ்டர் சிவலிங்கம் கலைக் குழுவினரின் 'நமக்கு மேலே ஒருவனடா', 'விண்ணுலகில் விபுலா நந்தர்' ஆகிய இரு வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்தினர்.

வில்லுப் பாட்டுக் கச்சேரிகளில் மாஸ்டர் சிவலிங்கத்துடன் கவிஞர் காசி-ஆனந்தன், முழக்கம் முருகப்பா, கவிஞர் செ. குணரெத்தினம், ஆர். டி. கிருபைரத்தினம், ஆசிரியர் பொ. சிவலிங்கம், அன்பு மணி, வி. சு. கதிர்காமத்தம்பி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆதவனே மன்னிப்பாய்

அண்மையில் யாழ். நகர மண்டபத்தில் யாழ் நகர முதல்வர் திரு. சு. செ. மகாதேவா அவர்கள் தலைமையில் மன்னார் இந்து சமய விருத்திச் சங்கத்தாரால் 'ஆதவனே மன்னிப்பாய்' என்னும் வரலாற்றுக் கற்பனை நாடகம் மேடையேற்றப்பட்டது.

சிற்பக் கலைஞன் மணிவண்ணனுடைய காதல் நிறைவேறுகிறது. சோதனை தொடர்கிறது. சோழ நாட்டை விட்டு பல்லாயிரக் கணக்கான மாணவச் சிற்பிகளுடன் ஆதவன் கோயில் கட்ட கலிங்க நாட்டுக்குச் சென்றவன பன்னிரண்டாண்டு முயற்சிக்குப் பின் அக் கோயிலுக்கு ஒளியேற்ற முடியாமல் திணறுகிறான். சிற்பிகளின் உயிரைப் பணயம் வைத்து ஆரம்பித்த பணியை நிறைவேற்ற முதன்மைப் பட்டம்கோரும் ஒரு சிறுவனிடம் உதவிபெற வேண்டியேற்படுகிறது. அச் சிறுவனையே கோயிலுக்குப் பலியாயளித்த மணிவண்ணன் பரிசளிப்பு விழாவில் அச்சிறுவன் தன் மகனே என்று அறிந்து புலம்புகின்றான்.

நடிப்பில் முதலிடத்தைப் பெறுபவர் கலிங்க மன்னன் நரசிம்மதேவனாக நடித்த திரு. நா. நடராசா ஆவர். தோற்றம், குரல், பாடும் திறன் யாவும் அவரிடம் எடுப்பாயிருந்தன.

சிற்பி மணிவண்ணனாக நடித்த திரு. க. இரத்தின சிங்கத்திடம் சற்று பெண்மைத் தன்மை காணப்பட்டது. கலைஞர்கள் அப்படித் தானிருப்பார்களென்ற எண்ணமோ?

பெண்களாக நடித்தவர்களுள் தோழி அஞ்சுகமாகத் தோன்றிய செல்வன் கா. அழகரத்தினத்தின் தோற்றம் பரவாயில்லை. நடிப்பு துடிப்புடனிருந்தது. மற்றப் பெண்கள் எடுபடவேயில்லை.

புலவர் கார்மேகமாகத் தோன்றிய டாக்டர் அ. பவளத்துரை நன்றாகப் பாடினர். நடிப்பதற்கு சந்தர்ப்பங்களிருக்கவில்லை.

பாடல்களை நடிகர்களே பாடினர்கள். கரவைகிழான்—இசைச் செல்வன் ஆகியோர் யாத்த பாடல்களுக்கு டாக்டர் அ. பவளத்துரை மெட்டுகளை அமைத்திருந்தார்.

கரவைகிழான் எழுதிய இந்த நாடகத்தை திரு. சு. செல்லத்துரை இயக்கியிருந்தார். கதை நேரடியாகச் சொல்லப்பட்டது. நகைச்சுவை மிகக் குறைவு. உரை நடை தூய்மையாயிருந்தது.

காட்சியமைப்புகளும் உடைகளும் மிகப் பிரமாதம். பெண் வேடங்களைத் தவிர ஏனைய பாத்திரங்களின் ஒப்பனையும் மிக நன்றாக இருந்தன. வரலாற்று நாடகத்தில் இது கூட இல்லாவிட்டால்......?

நாடகம் நடக்கும் வேகம் இன்னும் அதிகரித்தால் இந்த நாடகத்தை மேலும் ரசிக்க முடியும்.

—'இரசிக சிகாமணி'



மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கம் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றிய 'ஆதவனே மன்னிப்பாய்' என்ற நாடகத்தில் ... (மணிவண்ணன்) செல்வன் தெட்சணாமூர்த்தியும் (தேன்மொழி) தோன்றும் காதற் காட்சி.




## இலட்சிய நடிகரின் புதிய படம்



தேனித் தொகுதிச்சட்டசபை உறுப்பினரான இலட்சியநடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் புதிய படமொன்றைக் கலரில் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளாராம். அப்படத்தில் திரு. இராசேந்திரன் நான்கு வேடங்களில் நடிக்கவிருக்கிறார். அவருடன் அவர் மனைவி இலட்சிய நடிகை விஜயகுமாரி சோடியாக நடிக்கவிருக்கும் படத்தை திரு. இராசேந்திரனே நெறிப்படுத்துவாராம்.

'தங்கரத்தினம்' என்ற பெயரில் திரு. இராசேந்திரன் ஏற்கனவே சொந்தத்தில் ஒரு படத்தை எடுத்து அதை நெறிப்படுத்தியுள்ளார். அப்படத்திலும் திரு. இராசேந்திரனின் சோடியாக விஜயகுமாரியே நடித்துள்ளார்.

## நாயைப் பூட்டிய நடிகை

ஒரு சில படங்களில் துணை நடிகையாக நடித்துள்ள குமாரி இந்திரா பி. எஸ்சி என்பவர் சென்னை லாயிட்சு வீதியில் குடியிருந்து வந்தாராம்.

இரு வாரங்களுக்கு முன்னர் வீட்டைக் காலி செய்து சாமான்களை கார் செட்டில் போட்டு, கூட அவர்கள் வளர்த்த அல்சேசன் நாய் ஒன்றையும் உள்ளே போட்டுப் பூட்டிவிட்டு எங்கோ போய்விட்டார்களாம்.

நான்கு தினங்களாகப் பட்டினிகிடந்த நாய் ஒரேயடியாகக் குலைத்து கலாட்டா செய்ய ஆரம்பித்து விட்டதாம். இதையறிந்த பொலீசார் பூட்டையுடைத்து நாயை வெளியேற்றினார்களாம்.



கொழும்பு கெப்பிட்டல் திரையில் இப்பொழுது நடைபெறும் ... (யார் அந்த ... அழகி) என்ற மர்மப் படத்தில் அழகி ... இப்படித் தோன்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர்..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாய தூஉ மழை''
பற்றுக பற்றற்றான்
பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்ற குறட்களின் முதற் சீர்களின் முதலெழுத்துக்களாகிய து, ப, எல்லாச் சீர்க்கண்ணும் பொருள் நயத்துடனும் ஓசை நயத்துடனும் வந்துள்ளன.

## அணிகள்

உவமை என்றால் ஒப்பிடுவது என்று பொருள்படும். ஒரு பொருளொடு இன்னொரு பொருளை ஒப்பிட்டுக் கூறும் பொழுது இரண்டு பொருளுக்குமுள்ள ஒற்றுமையையே நாம் அங்கே காண்கிறோம். உவமை இலக்கியத்திற்கே சிறப்பாக உரியதன்று. நாடோறும் பேச்சு வழக்கில் அநேக உவமைகளை நாம் கையாளுகிறோம். ஆனால், எம்மைவிடப் புலவர்கள், உவமைகளை இலக்கியத்தில் அதிகமாகக் கையாளுவார்கள். தம்மைக் கவர்ந்த உலகப் பொருள்களினது ஒற்றுமையைத் தாம் கண்டறிந்து, இலக்கியத்தின் வாயிலாகப் பிறருக்குப் புகட்ட முற்படுவதே அவர்கள் அதை அதிகமாகக் கையாளுவதற்குக் காரணமாகும். இலக்கியத்தில் கையாளப்படும் உவமைகள் ஆயிரக் கணக்காக இருந்த போதிலும், புலவர் கூற வரும் பொருளைத் தெள்ளத் தெளிய விவரிக்கும் உவமைக்குத் தனிச் சிறப்பு உண்டு. ஏனைய அணிகள் தாம் கூறும் பொருளை ஓரளவுக்குச் சொல்லாகிய திரையால் மறைத்துத் தமது பொருளையே முன் விளங்கும் வண்ணம் நிற்கும் ஆற்றல் வாய்ந்தவை.

உவமையோ உயர்ந்த கலைப்பண்புள்ள புலவனின் ஆற்றலாகலால், தன்மையற்ற பெரியாரின் உள்ளம் போலப் பின்னே மறைந்திருந்து, ஊன்றிப் பார்க்கும் ஒருவனின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கச் செய்கிறது. புலவன் உலகப் பொருள்களின் ஒற்றுமையைக் கண்டறிந்து அனுபவித்தற்கு ஏற்ற நிலையிற்றான் அவன் படைக்கபது உலகில் உவமையும் தலை சிறந்து நிற்கும். எனவே, ஒரு புலவனின் இலக்கியத்தில் சிறந்த உவமைகளுக்கு இடம் அளிக்கப்பட்டால், அவை அவனது ஒற்றுமையைக் காணும் அகக்கண்ணினது திறமைக்கு ஏற்ற சான்றாகும். மேற்கூறிய உவமை நலன்கள் யாவும் செறிந்து சிறப்புற்று விளங்குகிறது திருக்குறள். உலக மக்களது ஒழுக்க வாழ்க்கையைச் சித்திரிக்கிறார் வள்ளுவர். அம் முயற்சிக்குத் தனது அகக்குணமாகிய உணர்ச்சியுடன் உவமை, உருவகங்கள் முதலிய புற எதுக்களையும் துணைக்கொண்டுள்ளார். தாம் கையாளும் உவமை, உருவகங்கள் செய்யுட்கு வெறும் அணிகலன்களாக நிற்காது பொருளை நன்கு விளக்க வேண்டுமென்னும் விதிப்படி ஓரிடத்திலும் வழுவாது இவர் ஒழுகுகிறார். தான் கருதியவற்றைச் சிக்கனமான முறையிற் கூறவே உவமைகளை மேற்கொண்டுள்ளார். இயற்கையினும், தாவரங்களிலும், விலங்குகளிலும் இருந்தே அதிகமாகத் தமது உவமைப் பொருள்களைத் தெரிந்து கொண்டார்.

''ஊருணி நீர்நிறைந்
தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு''
''பயன்மர முள்ளூர்ப்
பழுத்தற்றால் செல்வ
நயனுடைய யான்கட்
படின்''
''மருந்தாகித் தப்பா
மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட்
படின்''

இம்மூன்று குறள்களிலும் ஒரு கருத்தைப் புலப்படுத்துவதற்கே மூன்று இயற்கைப் பொருள்களைத் தெரிந்துள்ளார்.

## செல்வம்

எம்மிடத்திலுள்ள செல்வங்கள் யாவும் நிலையற்றன. நில்லாத செல்வத்தைச் செவ்விதே அறவழிகளில் செலவிட்டு, நிலையுள்ள பொருளைத் தேடுவதே எமது வாழ்வின் நோக்கமாகும். இதை வெளிப்படுத்துவதற்கு அருட் செல்வமும் பொருட் செல்வமும் ஒருங்கே பெற்ற சீரிய குணத்தவரை, ஊருக்கு நடுவிலே நின்றுதவும் குளத்திற்கும், பழங்களைத் தந்துதவும் மரத்திற்கும், தனது உறுப்புக்களில் ஒன்றும் தப்பாமல் மனித சேவைக்கு உதவும் மரத்திற்கும் முறையே உவமித்துள்ளார். நிறைந்தும் வற்றியுமலுமிருக்கும் ஒரு குளமானது ஊருக்குப் பொதுவானது. ஊரின் நடுவேயுள்ள குளம் பல பகுதிகளிலும் வாழும் மக்கள் குளிப்பதற்கும், குடிப்பதற்கும், பயிர்செய்வதற்கும்இன்னும் பலவற்றிற்கும் இன்றியமையாதது. ஊரிலே யாவருக்கும் பொதுவாக உள்ள பழமரத்திலுள்ள பழங்கள் அயலில் வாழும் மனிதருக்கும், பறவைகளுக்கும், அணில் முதலிய விலங்குகளுக்கும் ஒருங்கே பயன்படுகின்றன.

இன்னொரு மரம் தனது விசாலமான கிளைகள் நிழலாகவும், ஒடிந்துபோன கிளைகள் விறகு முதலியனவாகவும் வேர், இலை முதலிய மருந்திற்கும், எஞ்சிய உறுப்புக்களும் வெவ்வேறு தேவைகளை நிறைவேற்றவும் உதவுகின்றது. இவை போலவே செல்வமும் தக்கார்கைப்பட்டக்கால் வான் சிறிதாய்ப் போர்த்துவிடும்' என்றபடி விழுமிய மேலோரிடமிருப்பின் எல்லாருக்கும் பயன்படும். ஊரிலுள்ள குளமோ, பழமுதிரும் மரமோ, விறகிற்கு எனத் தன்னை வேரோடு அகழ்ந்தெடுக்க விடும் மரமோ தாம் ஆற்றும் தொண்டிற்கு எத்துணைப் பயனையும் எதிர்பார்ப்பனவல்ல, செல்வத்தைப் பெற்ற சீரியோரும் கரவாது அறம் செய்வதால் தாம் அளித்தவரிடமிருந்து எவ்வித பயனையும் பெறலாமென்ற நோக்கம் படைத்தவர்களல்லர். முதலிரு குறளிலும் ஒரு சில உதவிகளைப் புரியும் பொருள்களுக்கு இத்தகையோரை உவமித்து, மூன்றாவது குறளில் அடிவேர் முதல் நுனிக்கிளை வரை உதவும் மரத்திற்கு உவமித்தது, முதலிற் சில வழிகளில் பொருளுதவி அவர்களது கொடையின் வன்மை அதிகரித்து, ஈற்றில் தனதெனக் கொண்ட தெல்லாவற்றையும் உவந்தளிப்பர் என்பதை விளக்கப் போலும்.

''தலையி னிழிந்த
மயிரனையர் மாந்தர்
நிலையினிழிந்தக் கடை''.

என்ற குறளில் குடிப்பிறந்த மாந்தர் தம் உயர்ந்த நிலையை விட்டுத் தாழ்தல், தலையினின்றும் வீழ்ந்த மயிருக்கு உவமிக்கப்படுகிறது.

## ஒழுக்கம்

ஒழுக்கம் மக்களுடைய நல்வாழ்விற்கு உகந்ததாகலால் அதனை மேலோர் உயிரிலும் விழுமிய பொருளாகக் கொள்வர். சமுதாயத்தில் ஒருவன் நன்கு மதிக்கப்படுவதற்கு அவனது நல்லொழுக்கங்களே காரணமாகின்றன. ஒழுக்கந் தவறியவன் மானமிழந்து கீழ் நிலையை அடைவான். நல்லொழுக்கமுடையவனாய் வாழும் போது அவனைச் சூழ்ந்த விருப்பாற் சுற்றமும், இடுக்கண் களையும் நண்பர்களும், நிலைகெட்ட போது அவனைப் புறக்கணிப்பர். தலைமயிரானது எமது தலையிலிருக்கும் போது நெய் முதலிய வாசனைத் திரவியங்களைப் பூசி அதைப் பேணுகிறோம்.

எமது உடல் அழகிற்கு வேண்டியதோர் உறுப்பாகக் கருதுகிறோம். அம் மயிர் எமது தலையினின்றும் நீங்கியவுடன் அதை நாம் முன்பு போல மதியாது குப்பையென வெறுக்கின்றோம். ஈண்டு வள்ளுவர் தாழ்ந்த பொருளாகிய தலைமயிரைக் கொண்டு உயர்ந்த ஒரு உண்மையைப் புலப்படுத்துகிறார்.

சிலம்பினின்றும் வீழ்ந்த பரற் கற்களைக் கொண்டு ஐயாயிர மடிகளுள்ள காப்பியத்தை இளங்கோவடிகள் அமைக்கவில்லையா? இவற்றால் யாது பெறப்படுவதெனின், பாடும் பொருளினால் புலவனுக்குச் சிறப்பில்லையெனும் உண்மையே. புலவனுடைய பெருமை அவன் பாடும் வகையிலேயே தங்கியுள்ளது. இதை "The poetic effect does not depend on the thing itself but the use the use the poet makes of it" என்னும் பேராசிரியர் ஐ. ஏ. றிச்சார்ட்ஸ் (I. A. Richards) அவர்களின் கூற்று நன்று புலப்படுத்துகிறது. அற்ப பொருளைக் கொண்டு நுண்மான் நுழைபுல மிக்க அறிவைக் கூறுதல் வள்ளுவர் போன்ற பெரும் புலவர்களாலேயே முடியும்.

''உவமையும் பொருளும்
வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டினஃ
துருவக மாகும்''

என்றார் உருவகத்திற்கு இலக்கணம் கூறிய தண்டியலங்கார ஆசிரியர். அதாவது உவமையாம் பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபாடொழிவித்து ஒன்றச் சொல்லப்படுவது உருவகவணி. இவ்வுருவகம் பல திறப்படும். ஏகதேசவுருவகம் என்பது ஒரு பொருளினது உறுப்புப் பலவற்றுள்ளும் ஒருறுப்பினையே உருவகஞ் செய்து ஒழிந்த உறுப்பு ளை வாளாவே கூறுவது. இவ்வணியைத் திருவள்ளுவர் பின்வரும் குறட்களிற் கையாண்டிருக்கிறார்.

''அறவாழி யந்தணன்
றாள்சேர்ந்தார்க்
கல்லாற்
பிறவாழி நீந்த லரிது''
''உரனென்னுந்
தோட்டியா
னோரைந்துங் காப்பான்
வரனென்னும்
வைப்பிற்கோர் வித்து''

மேற்கூறிய சிறப்புக்களைக் கொண்டமையாலன்றோ திருக்குறளைப் புகழும் திருவள்ளுவ மாலை எழுந்தது.

## பெருமை

திருவள்ளுவருக்குப் பின் வாழ்ந்த சுந்தரர், திருத்தக்கதேவர், கம்பன் முதலாய பெரும் புலவர்களது நூல்களிலெல்லாம் குறட் கருத்துக்கள் செறியப்பெற்றன. மேனாட்டினராகிய திருவாளர்கள் பெசுக்கி, கோப்பு, கிரால், ஏரியல், இலாசரசு, போன்றவர்களுடைய சிந்தையிலே குறள் சொந்தமானதற்கு அவர்கள் தாம் பாண்டித்தியம் பெற்ற பிறமொழிகளில் இந் நூலை மொழி பெயர்த்தது சான்று கிறது. திருக்குறளின் பெருமையை என்னென்று கூறுவது?

## வள்ளுவனின் நூல் நற்புரட்சி

-சத்தியசிலன்-

வள்ளுவனின் நூல்நற் புரட்சி! வரலாறு
கொள்ளுந் தகைய குணத்தோர் அறக்கருத்தை
உள்ளப் பிணிக்கு மருந்தை, உரை உரையாய்
அள்ளிப் புவியில் அளித்தார்! உலகத்தார்
தள்ளி அயலே இருந்தார்! 'தமிழ்' காணூர்!
ஆணவி லேதொடங்கி இன்னன்ன வில்முடியும்
மோனைக் குறள்நூல் முழுவதுமே—தேனைப்
பாக்களடா தம்பி! பருகச் சுவைஞரெலாம்
ஈக்களென மொய்ப்பார் இதில்!

''உயர்ந்த பொருள் மேற்றே உவமை'' எனும்
கொள்கை
உயர்ந்தும் உவமை உலர்ந்து பலங்குன்றும்!
இவ்விதியை மாற்றி 'இழிந்த மயிராற்' கூடச்
செவ்வுவமஞ் செய்த சிறப்பு, குறட் சிறப்பே!

ஒற்றைக் கருத்தை உதவக் கவிஞரெலாம்
கற்றைப் பெருநூற்கள் கண்டு களைக்கையிலே
பேரறங்கள் தம்மின் பொருமை இயல்பையெலாம்
ஈரடியே தந்தான் இவன்!

'சாணக் கியநூல்' சதிமுறையும் சொல்லுவதே
'காமசூத்தி ரத்தில்' கயமைத் தனமுண்டு
மாற்றாரின் மண்மேல் மயக்கம், பெறச் சூழ்ச்சி
வேற்றான் மனையில் விழைவு, இவைகள் இன்றி
பொதுமை முறையிற் 'பொருள்' 'இன்பம்'
சொன்ன
அதுவே குறளின் அணி!

புத்தம் புதிய புனைந்தோர் நினைவகத்து
நித்தமுமே வாழ்வார்! நிலைக்கும் குறள்! புதிது

## இலக்கிய...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

றியதற்காக மூதற்பரிசில் அரைவாசியை அவருக்கு அளிக்கும்படி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

புதுமைப் பித்தன் கூறியது போல, 'சோரம் போன மனைவிக்குப்பிறந்த குழந்தையைத் தன் குழந்தை' என்று கூறுவது இலக்கியகர்த்தாக்களுக்கு ஏற்றதாகாது.

இலக்கிய உலகின் பிரம்மாவைப் பல்லாயிரக் கணக்கான கண்கள் நோக்கியபடி உள்ளன.

## கண்டதும்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தவர்கள் மறியல் இருந்தார்களாம். இதுதான் ஒற்றுமை பேசுபவர்களின் ஒற்றுமைக்கான நடவடிக்கையோ?

பலத்த எதிர்ப்பு இருப்பதைக் கேள்வியுற்ற தலைவர் பயந்து வரவேற்பை நிறுத்தும்படி வேண்டினாராம். ஆனால் பலத்த பொலிஸ் காவல் இருக்கும் என்று அறிந்ததும் இரண்டு மணி நேரம் பிந்தி வந்தாராம் தலைவர்.

இவ் வரவேற்புக் கூட்டத்தையொட்டி நடைபெற்ற ஊர்வலத்தில், திரு. பொன்னம்பலத்தின் காரைச்சுற்றி பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்ததாம்.

மாவிட்டபுரத்தில் ஊர்வலத்தில் சென்றவர்களை ஒரேயொரு நிறைகுடமே வரவேற்றதாம். குறிப்பாக உடுப்பிட்டிச் 'சிங்கம்' சென்ற ஊர்வலத்தைப் பார்ப்பதற்குத் தானும் பெண்கள் எவரும் முன்வரவில்லையாம். உடுப்பிட்டிச் 'சிங்கம்' மேடைகளில் தாய்க்குலத்தைஇழிவுபடுத்திப் பேசுவதே இதற்குக் காரணம் என்று தெரிகிறது.

அன்று நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையிலும் 'வெண் சுருட்டு வீரர்' தமிழரசுக்கட்சியில் மாதர்கள் தீவிர பங்கு கொள்வதை அநாகரீகமான முறையில் விமர்சித்தாராம். இவர்தான் ஒற்றுமை முன்னணி அமைத்து தமிழுரிமை பெறுவோம் என்று பத்திரிகைகளில் அறிக்கை விடும் வீரராம்.

கொழும்பிலுள்ள சைவ மங்கையர்களால் நடாத்தப்படுகின்ற பிரபல இசைக் கல்லூரி ஒன்றில் கல்வி பயிலும் சில மாணவிகள் சினிமாக் கொட்டகைகளில் பிற்பகல் காட்சியைப் பார்ப்பதில் தங்கள் நேரத்தை செலவிட்டு வருகிறார்களாம். கல்லூரிக்குச் செல்வதாக வீட்டில் கூறிவிட்டுச் செல்லும் இவர்களிற் சிலர் நேராக ஆங்கிலப் படம் நடக்கும் படமாளிகைக்கு நண்பர்களுடன் செல்கிறார்களாம்.

கடந்த வாரம் கொழும்பு படமாளிகை ஒன்றில் வயது வந்தவர்களுக்கு மட்டும் காட்டப்படும் ஆங்கிலப் படமொன்றை இவ்விசைக் கல்லூரியைச் சேர்ந்த ஒரு சில மாணவிகள் நண்பர்களுடன் சென்று பார்த்தார்களாம்.

எனவே இவ்விசைக் கல்லூரியினர் பிள்ளைகளின் கல்லூரி வரவை மாதா மாதம் பெற்றோருக்கு அனுப்பி வைப்பதால் இத்தகைய சம்பவங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம் என்று நம்புகிறோம்.

## உள்ளக் குமுறல்

(14ம் பக்கத் தொடர்ச்சி)

யானதாக வேயிருக்க முடியாது. நிச்சயம் அது செயற்கையானதாகவே யிருக்கும்.

எனது உள்ளம் என்ற பாலைவனத்திற்கு குளிர்மையூட்ட முயன்றேன். செயற்கை இயற்கையாகி விட முடியுமா? முடியாது. முடியவே முடியாது.

'உள்ளம் என்ற பாலைவனத்திற்கு குளிர்மையைத்தான் பெற முடியவில்லை, குளுகுளுப்பாவது கிடைக்கட்டும். ஆம் நான் இனி இங்கு வாழ்ந்து பயனில்லை.'

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுகால் மடம்

## 6. குடிகாரத் தந்தை

தில்லை அறிந்த மட்டில், அப்பாவிடம் ஒரேயொரு குறைதான் இருந்தது. நன்றாகக் கள் குடித்துவிட்டு வந்தால் அவர் நல்லவராக இருப்பதில்லை. வாய்க்கு வந்தபடி வீட்டில் எல்லாரையும் ஏசுவார். குடிக்காத வேளைகளில் அவர் மிகவும் நல்லவர். எல்லார் மேலும் அன்பாக இருப்பார். லீலாவைத் தூக்கி மடியில் வைத்துச் செல்லங்கொட்டுவார்.

தில்லை ஓரளவு பணம் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவன். தந்தை முழுநேர உழைப்பாளி. வயல்களும், தோட்டங்களும் அவர்களுக்குச் சொந்தமாக இருந்தன.

"ஐயா...!" என அழைப்பான், தில்லை.

"என்ன தில்லை?..." என அன்பாகக் கேட்பார், அப்பா.

"நம்மிடம் காசிருக்கு, இல்லையா?"

"உனக்கு வேணுமா இல்லை?"

எனக்கு வேணும். காசிருந்தா குடிக்க வேணுமா?..."

அப்பா திகைத்துப் போவார். அவரால் எதுவுமே பேச முடியாது. தில்லையைக் கண்ணிமைக்காது பார்ப்பார். பின் பக்கத்தில் அழைத்து அணைத்துக்கொள்வார்.

"தில்லை...ம்"

"...ம்..."

"நீ பெரியவனானதும் குடிப்பாயா?"

"சீச்சீ! யாராவது குடிப்பார்களோ?" என முகத்தைச் சுழித்துக்கொள்வான். அதைக் கண்டு அவன் அப்பா அவனைக் கொஞ்சுவார்.

**செங்கை ஆழியான்**

அவனுக்கு வெட்கமாக இருக்கும்! வளர்ந்தவர்களைக் கொஞ்சலாமோ? லீலாவைக் கொஞ்சலாம்!

அவன் மீது அப்பாவுக்கு உயிர். அத்தகைய அப்பா தான் அன்று அவனை அடித்துவிட்டார். அவர் அடித்ததற்காக அவன் என்றுந் துக்கப்பட்டதில்லை. ஆனல் காரணமில்லாமல் அடித்துவிட்டார் என எண்ணினன்.

'என்னைக் கள்ளர் துரத்தியது, என் தவறே?' ஆனல், மாமா வீட்டிலிருந்து இரவிலே சொல்லாமற் கொள்ளாமல் புறப்பட்டது தவறுதான் எனச் சமாதானம் கூறிக்கொண்டான்.

குடிமயக்கம் தீர்ந்த பின் அவன் அப்பா அன்பாகத்தான் இருந்தார். எனினும் அவன் மனதில் எஞ்சி நின்ற அந்தக் கேள்விக் குறி, கொக்கி போட்டு அவன் மனதை இழுத்தது. அதற்குரிய விடை அவன் தகப்பனிடம்தான் இருந்தது.

"இவையெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று தகப்பனிடம் கேட்க அவனுக்குத் துணிவில்லை. ஆனல் அந்தக் கேள்விக்குரிய விடை இரு நாட்களின் பின் அவனுக்குத் தெரிந்தது.

உடையார் வீட்டில் கள்வர் திட்டமிட்ட படி திருட வரவில்லை. மாணிக்கச் சித்தப்பா உடையார் வீட்டில் வீரர்களுடன் இரவு முழுவதும் காவலிருந்தது தான் மிச்சம்.

அடுத்த நாள் மாணிக்கச் சித்தப்பாவைக் காணத் தில்லை ஓடி வந்தான்.

"தில்லை! அக்கள்ளர் பேசியதை நீ நன்றாகக் கேட்டாயா?"

"நன்றாகக் கேட்டேன், சித்தப்பா! என்னை நீங்கள் நம்பவில்லையா?"

"நம்புகிறேன், தில்லை...! நாம் அவர்களைப் பிடிக்கத் தயாராக இருந்ததை அவர்கள் எப்படியோ அறிந்திருக்க வேண்டும்! அதுதான் திட்டப்படி வரவில்லை... திட்டத்தை மாற்றிக் கொண்டார்கள்..."

மாணிக்கச் சித்தப்பா சிறிது சிந்தனையில் ஆழ்ந்து விட்டு, தில்லையை நிமிர்ந்து பார்த்தார்.

"தில்லை! நீ எனக்குக் கூறியவற்றை வேறு யாருக்காவது கூறினயா?"

ஆமாம், அவன் கூறியிருக்கிறனே? அவனுடைய அப்பா அடித்தபோது உண்மைகளையெல்லாம் சொல்லியிருக்கிறனே?

"ஐயாவிற்கு மட்டும் கூறினேன்!" என்று தொடங்கித் தன்னை அப்பா அடித்ததையும், தான் எல்லாவற்றையும் கூறியதையும் கூறினன்.

"நான் கூறுமல் இருக்க இவருக்கு இதெல்லாம எப்படித் தெரியும் என்று நான் எண்ணினேன், சித்தப்பா!" என்றான், தில்லை.

"அதையே தான் நானும் எண்ணுகிறேன், தில்லை!" என்று சித்தப்பா பலத்த சிந்தனையிலாழ்ந்தார். தில்லையின் அப்பாவிற்கு அவன் கூறுமல் இதெல்லாம் எப்படித் தெரிந்தது? ஒருவேளை...? சித்தப்பாவின முகமாற்றத்தைக் கண்ட தில்லைக்கு ஏதோ ஒருவித பயம் எழுந்தது.

அவனல் நினைக்கவே முடியவில்லை. சிறுவனது அடி மனதில் என்றே மாணிக்கச் சித்தப்பா 'வெள்ளை வேட்டிக் கள்ளர்' என்று கூறியது நினைவு வரவே, அவனுடல் பதறியது.

"சித்தப்பா!..." எனக் கண்ணீர் ததும்ப அழைத்தான்.

(வளரும்)

## புதுமைகள் பாரீர் பாரினிலே-(43)

-அன்ரனி பெர்னண்டோ, கிரிலப்பனை-

### முடவனும் எழுந்து நடக்க முடியுமே!

நமது உடலுறுப்புகள் எப்படி வேலை செய்யவேண்டுமென்பதை அவ்வப்போது உணர்த்திச் செயல்படச் செய்கிறது மூளை. மூளை பிறப்பிக்கும் கட்டளைகள் உணர்ச்சி நரம்புகளின் வழியே போய் நமது உறுப்புகளை இயக்குகின்றன. குறித்த ஓர் உறுப்பிற்குக் கட்டளைகள் போவது தடைப்பட்டால் அந்த உறுப்புச் செயலற்றதாகிவிடும்.

பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டு முடங்கிப்போன கால்களுக்கு மூளையின் கட்டளை போக முடியாதவாறு நரம்புகள் பழுதடைந்துகிடக்கும். பாவம் நோயாளி! நடக்க முடியாது எவ்வளவு அவதிப்பட நேருகிறது. பாரிசவாதத்தால் அவதிப்படுபவர்களுக்கு இப்போது விடிவுகாலம் வந்திருக்கிறது. கால்கள் நடப்பதற்கு மூளை பிறப்பிக்கும் அதே கட்டளைகளை முடங்கிக் கிடக்கும் காலுக்குப் பிறப்பித்து நடக்கவைக்கும் கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. காலணியில் பொருத்தப்பட்டுள்ள ஒரு விசையை அழுத்தியவுடன் இந்தக் கருவி செயல்படத் தொடங்குகிறது. முடங்கினகாலில் காணப்படும் தசைகள் உடனே வேலை செய்து சிரமமின்றி நடந்து செல்ல உதவுகின்றன.

சிலருக்குப் பாரிசம்வாத நீடித்திருப்பதில்லை. சில காலம் சென்று குணம் கிடைப்பதுண்டு. இவர்கள் இந்த அற்புதக் கருவியைப் பாவிப்பதால் மிகுந்த நன்மை அடைகின்றனர். நோய் குணமடையும் வரை நோய் கண்ட உறுப்பிலுள்ள தசைகள் பல வீனமடைய இடமுண்டு. இந்தக் கருவியைப் பாவித்து முடங்கின உறுப்பிலுள்ள தசைகளை வேலை செய்ய வைப்பதால் அவை பலவீனமடைவது தவிர்க்கப்படுகிறது. எனவே, பாரிசவாதம் குணமடைந்த பின்னர் தசைகள் நல்ல நிலையில் இருந்து தடையின்றி வேலை செய்கின்றன.

பாரிசவாத நோயாளிகளுக்கு விமோசனமளிக்கும் இந்த அற்புதக் கருவியை அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் விபர்சன் கண்டு பிடித்திருக்கிறர். பாரிசவாத நோயாளி எழுந்து நிற்கவும் பின்னர் உட்காரவும் உதவும் ஓர் இயந்திரத்தை மற்றெரு பேராசிரியரான ஏட்ரியன் கன்ரோவிட்ஸ் கண்டுபிடித்திருக்கிறர். ஒரு விசையைத் திருப்புவதன் மூலம் வேண்டும் போது எழவோ உட்காரவோ நோயாளிக்கு உதவுகிறது இந்த இயந்திரம்.



## ஒழுக்கமுடைமை

உயிர் எல்லாப் பொருளையும் விடச் சிறந்தது; ஆயினும் அந்த உயிருக்கும் சிறப்புத்தர வல்லதாக ஒழுக்கம் விளங்குகின்றது; ஆகையால் உயிரைவிட ஒழுக்கமே சிறந்ததாகக் கொண்டு காக்க வேண்டும். அறம் பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தேர்ந்தாலும் முடிவில் துணையாய் நிற்கக் காண்பது ஒழுக்கமே; அதனல் ஒழுக்கத்தை வருந்திப் போற்றியும் காக்க வேண்டும்; ஒழுக்கத்தைக் காப்பதற்காக எவ்வளவு துன்பம் நேர்வதானலும் வருந்தி ஏற்க வேண்டும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம்; தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

ஒழுக்கத்தால் மக்கள் மேன்மை அடைவார்கள்; ஒழுக்கம் தவறுதலால் பொல்லாத பழி அடைவார்கள். நல்லொழுக்கம் நன்மைக்கு வித்தாக அமையும்; தீயொழுக்கம் எப்போதும் துன்பம் தரும். ஆதலின் பழியும் துன்பமும் வாராமல் மேன்மையும் இன்பமும் பெற வேண்டுமானல் ஒழுக்கத்தைப் போற்ற வேண்டும்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப்பழி.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

மனத்தை அளந்தறிவதற்கு வாய்ச்சொல் ஒரு கருவியாக உள்ளது. வாயில் பிறக்கும் சொற்களின் நன்மை தீமையைக்கொண்டு ஒருவருடைய ஒழுக்கம் இன்னதென்று அறியலாம். ஒழுக்கமுடைய நன்மக்கள், தவறியும் தீய சொற்களை வாயால் சொல்லமுடியாது.

ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

எதை நல்லொழுக்கம் என்று கொள்ளுவது? எதைத் தீயொழுக்கம் என்று தள்ளுவது? அறநூல்கள் சொல்லியவாறே ஒழுகலாம் எனின், காலம் மாறியுள்ளதே!-இவ்வாறு ஐயப்பாடு எழுதல் உண்டு. காலப் போக்கை அறிந்தே உயர்ந்தோர் அறநெறியைப் போற்றி வாழ்கின்றர்கள். ஆகையால் அவர்களுடைய வழியை ஒட்டி (உலகத்தோடு பொருந்த) ஒழுகுவதே கடமையாகும்; பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தும் இதைக் கல்லாதவர்கள் அறிவில்லாதவர்களே. கல்விக்குப் பயன் நெறியில் நிற்றலே ஆகையால், அவர்கள் கல்வி கற்றும் பயன் பெருதவர்களே ஆவார்கள்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

[டாக்டர் மு. வரதராசன் அவர்கள் எழுதிய 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. அனுப்பியவர்: அறிவுடைநம்பி]

## நீங்களும் நானும்

நோ. மணிவாசகன், கல்முனை-2.

'பூனைக்கு மணி கட்டுவது யார்? என்ற குட்டிக் கதையினைப் படித்துப் பார்க்காமல் தீர்ப்புக்கூற முடியுமா? எதற்கும் கதையை முதலில் அனுப்பி வையுங்கள் பார்ப்போம்.

'மதியரசு', குருக்கள் மடம்

உங்கள் இன்னல்கள் நீங்கட்டும். ஆனல், 'பயங்கரத் தீவு' என்ற பெயரில் கதையெதுவும் இவ்விடமில்லை. இப்பொழுது தவறு எங்கே இருக்கிறது என்பது புலனகுகிறதா? கடிதம் எழுதும் பொழுது சொற்களை அளந்து பாவிக்கவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5வது

மகிழ்வூட்டும்
வாரம்!

தங்கையின் வாழ்வு துலங்க
தமையன் காட்டும் ஒளிதான்—

# பச்சை விளக்கு



சிவாஜி கணேசன்-எஸ். எஸ். ஆர்.-விஜயகுமாரி
சௌகார் ஜானகி-எம். ஆர். ராதா-நாகையா
ராஜன்-புஷ்பலதா-ரங்கராவ்

கிங்ஸ்லி (கொழும்பு) · பிளாஸா (வெள்ளவத்தை) · வெலிங்டன் (யாழ்ப்பாணம்) · வெம்பிளி (கண்டி) · ராஜ் (நீர்கொழும்பு)
கல்யாணி (நாவலப்பிட்டி) · விஜிதா (மஸ்கெலியா) · சரசாவி (அக்கரப்பத்தனே) · வசந்தா (புசல்லாவ)

சினிமாஸ்
வெள்ளித் திரைகளை
பொன் திரைகளாக்க

**விரைவில் வருகிறது!**

இராமாயண காவியத்தின் இனிமை சொட்டும் அதிசாரம் அயோத்தியின் அதிபதியையே அதிரவைத்த சிறுவர்களின் சரித்திரத்தைச் சித்தரிக்கும்—

# லவகுசா

(கண்கவர் பலவர்ணச் சித்திரம்)

ஜெமினி கணேசன்
ராமராவ்
எம். ஆர். ராதா
அஞ்சலிதேவி
மனோரமா
நடித்தது

---

# 3-வது வாரம்!

**எல்பின்ஸ்டன் - றெக்ஸி மற்றும் திரைகளில்!**

ஜன சமுத்திரம் அலை மோதுகிறது!

எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி - அசோகன் - ராஜம்மா - எம். ஆர். ராதா - சின்னப்பாதேவர்
மற்றும் பலர் நடித்த



# குடும்பத் தலைவன்





---



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**கெயிட்டி** (கொட்டாஞ்சேனை)

விஜயா சௌத்திரி, ஜெக்தீப், ஜீவன், ஷம்மி, ஹெலன் தோன்றும்

# ராஜா (ஹிந்தி)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**செல்லமஹால்** (கொட்டாஞ்சேனை)

விஜயலட்சுமி-எஸ். வி. சுப்பையா - சகஸ்ரநாமம் - முத்தையா
முத்துராமன் - பாலச்சந்திரன் - பேபி கல்பனா நடித்த

# பாதை தெரியுது பார்

---

**மக்களைக் கொள்ளை கொள்ளும் 3வது மகத்தான வாரம்!**

ராணி (யாழ்ப்பாணம்) · ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) · ஜோதி (திருமலை) · லிபேர்ட்டி (அட்டன்) · லிபேர்ட்டி (பதுளை)

சிட்டாடலின் வெற்றித் தயாரிப்பு

ஜெமினி மெட்ரோ (மருதானை)

ஹீரோஸ் (பாமன் கடை)

ஜெய்சங்கர்
வசந்தா
அசோகன்
நாகேஸ்
ராமதாஸ்
பண்டரிபாய்
மற்றும் பலர் நடித்தது

நாகேஷின் இணையற்ற நகைச்சுவை!

இனிமையான இசையமைப்பு!


அருமையான பாடல்கள்!

பாடல்கள் இன்பகர் ஆலங்குடி சோமு

ஒளி: பி. வி. லோகங்கள்

திறமையான டைரக்ஷன்!

டைரக்ஷன்: ஜோஸப் தளியத்



# இரவும் பகலும்

தமிழ் திரை இதுவரை கண்டிராத சண்டைக் காட்சிகள்

அசோகன் சொந்தக்குரலில் பாடும் புதுமை!

சண்டைப்பயிற்சி: ஸ்டண்ட் சோமு மாதவன் குழுவினர்

பின்னணி: டி. எம். சௌந்தரராஜன், சுசீலா, சீர்காழி கோவிந்தராஜன்

தயாரிப்பு: ஜோஸப் தளியத்

வசனம்: நாஞ்சில் ராஜப்பா

இசை: டி. ஆர். பாப்பா

கதை: டி. என். பாலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில்
1965-ம் வருடம் யூன் மாதம் 13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.